2nd Hand Machines
But
1st in Quality
PROTONTECH
warranty
175, Main Street
Trincomalee
075 6602486

அறைவு 02 இயம் 31 March 15 - 21, 2014
உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு
# MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka
பக்கங்கள் : 16 விலை : 30.00 பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்

வெளிநாட்டில் பாவித்தவை
ஆனால்
தரத்தில் சிறந்தவை
warranty
PROTONTECH
175, Main Street
Trincomalee
075 6602486

## வடக்குகிழக்கில் வலைப்பின்னலைக் கொண்ட
# ஆட்கடத்தல் சந்தேகநபர் கைது




இலங்கையரை வெளிநாடுகளுக்குக் கப்பல் மூலம் கடத்தும் மனிதக்கடத்தல் வலைப் பின்னலின் தலைவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் முக்கிய சந்தேக நபர்களுள் ஒருவரான முகுந்தன் கடந்த முதலாம் திகதி கல்லடியில் கைதாகியுள்ளார்.

நியூஸிலாந்து நாட்டுக்கு ஒருவரைக் கடத்துவதற்காக ஐம்பதாயிரம் ரூபா முற்பணம் பெற அங்கு வருகை தந்திருந்த அவரையும் அவரது சகாக்கள் சிலரையும்...... 13


## குச்சவெளிக் காணிகளுக்கு உச்சவிலை முதலீட்டுத் திட்டம் கேள்விக்குறியில்



. குச்சவெளி பிரதேசக் காணிகளில் உருவாக்கப்பட்டுவரும் சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு வலயத்திற்கு வெளிநாட்டு முதலீடுகளைக் கவருவதில் தோல்வி ஏற்பட்டுள்ளதாக தெரிகின்றது.

அக்காணிகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட அதி உச்சி விலையினாலேயே வெளிநாட்டு முதலீட்டாளர்கள் முதலிடத் தயக்கம்..... 13

## மயானத்திற்காகப் போராடும் மக்கள்



இரு நூறாண்டுகள் பழமைவாய்ந்த புல்மோட்டை இந்து மயானத்தில் உடலங்களை அடக்கம் செய்வதற்கும், தகனம் செய்வதற்கும் "புனிதபூமி" யின் பெயரால் தடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இத்தடைகளைத் தொடர்ந்து பொது மயானத்திற்காகப் போராட வேண்டிய தேவை எழுந்துள்ளதாக மக்கள் பிரதிநிதிகள் மலைமுரசிற்குத் தெரிவித்தனர்...... 13

### ஜெனீவாத் தீர்மானத்திற்கு எதிராக
## திருமலையில் மக்கள் போராட்டம்

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவையில் அமெரிக்காவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இலங்கை மீதான சர்வதேச போர்க்குற்ற விசாரணைக்கு எதிர்ப்பு தெரிவித்து திருகோணமலை நகரின் மணிக்கூட்டு கோபுரத்திற்கு அருகில் கடந்த திங்கட்கிழமை காலை ஆர்ப்பாட்டம் ஒன்று...... 13

## நியமனம் கேட்கும் கிழக்குப் பட்டதாரிகள்



2011ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பட்டப்படிப்பை நிறைவு செய்த பட்டதாரிகள் தங்களை அரச நியமனங்களில் உள்வாங்குமாறு கோரி கடந்த 12 ஆம் திகதி புதன்கிழமை பகல் மட்டக்களப்பு நகரில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில், நகரின் மணிக்கூட்டுக் கோபுரம் அருகில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பட்டதாரிகள் மாவட்ட செயலகம் வந்து அரசாங்க அதிபரிடம்..... 13

சிங்கப்பூரில் வேலையுடன்
கல்வி கற்பதற்கான ஓர்
அரிய வாய்ப்பு!!!
CERTIFICATE IN INTERNATIONAL
FOOD & BEVERAGE SERVICE
MONTHLY INTAKE
Study
3 months
6 months
(paid internship / On-Jop-Training)
மாதாந்தம் ரூபா. 60000.00
தொடக்கம் ரூபா. 100000.00
வரை வேலைப்பயிற்சிக்
காலத்தில் பெற்றுக் கொள்ள
முடியும்.
ஆகக் குறைந்த கல்வித்தகைமை
G.C.E (O/L)
Other Courses are Availabl
- Cert. in International Food & Beverage / Dip. in Hospitality & Tourism
- Dip. In Computer Science/Business IT / BSc (Hons)
- Software Engineering /ACCA/CIMA.
CALL NOW ON:077 9075593
For More Information
EDUPATH CONSULTANTS
203, MAIN STREET,
TRINCOMALEE.
026-2225373





### முஸ்லிம் காங்கிரஸ் விலகினாலும்
# கிழக்கில் ஆட்சி கவிழாது

### "ஹக்கீமுக்கு எதிராக நடவடிக்கை?"




முஸ்லிம் காங்கிரஸ் கிழக்கில் விலகினாலும் அங்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆட்சி கவிழாது என பிரதி அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

மத்திய அரசில் இலங்கைச் சுதந்திரக் கட்சிக்கும் முஸ்லிம் காங்கிரஸிற்கும் இடையே எழுந்துள்ள இழுபறி நிலையை அடுத்து, கிழக்கில் ஆட்சி அமைத்துள்ள சிறுபான்மைக் கட்சிகளின் கூட்டணியில்...... 13

## பிரத்தியேக வகுப்புக்களுக்குத் தடை

ஞாயிற்றுக்கிழமைகளில் பிற்பகல் 2 மணிவரையிலும் பௌர்ணமி (போயா) தினங்களிலும் பிரத்தியேக தனியார் வகுப்புகளை நடாத்த அரசாங்கம் தடை விதித்துள்ளது. இதற்கான சகல நடவடிக்கைகளையும் எடுக்குமாறு அனைத்து ஆளுநர்களுக்கும், முதலமைச்சர்களுக்கும் எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

[illegible] அறிவித்தல் [illegible] பிரதமர் தி.மு. [illegible] திடப்பட்டு மேற்கண்டோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மலைமுரசின் விளம்பரக் கட்டணம்

| அளவு | முன்புறம் | பின்புறம் |
|---|---|---|
| A 7 | 650.00 | 500.00 |
| A 6 | 1175.00 | 975.00 |
| A 5 | 2200.00 | 1900.00 |
| A 4 | 4150.00 | 3800.00 |
| A 3 | 7950.00 | 6950.00 |

| அளவு | பக்கம் 02 | பக்கம் 15 |
|---|---|---|
| A 7 | 350.00 | 200.00 |
| A 6 | 575.00 | 475.00 |
| A 5 | 1100.00 | 900.00 |
| A 4 | 1950.00 | 1500.00 |
| A 3 | 3450.00 | 2950.00 |

ஏனைய பக்கங்கள் - ரூ.18 சதுர அங்குலம்

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
malaimurasu@hotmail.com 075-4252042

# திரைகடலும்.....
# திரவியமும்.....

ஈழத்தமிழர் வாழ்வியலில் முதுமொழிகள் மிகப் பிரபல்யமானவை. அவற்றுள், எக்காலத்திற்கும் பொருத்தமானவையாகச் சில வழக்கில் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

அவ்வாறான முதுமொழிகளில் ஒன்றான "திரை கடல் ஓடியும் திரவியம் தேடு" என்பது இன்றும் எம்முள் மிகத் தாக்கம் செலுத்தும் மொழியாக இருக்கின்றது.

இன்றைய திகதியில் ஈழத் தமிழருக்காக திரவியம் தேடி திரைகடல் தாண்டியோடும் மனிதர்கள் இரண்டு வகையினராக இருக்கின்றனர்.

ஒட்டு மொத்த தமிழினத்திற்காக திரைகடல் தாண்டி சர்வதேச நாடுகளிடம் திரவியம் தேடப் போகும் தமிழத் தலைவர்கள் ஒருவகையினராக இருக்கின்றனர்.

மற்றை தரப்பினரோ தமது பொருளாதார, வாழ்வாதார நிலைமைகளை விருத்தி செய்து கொள்வதற்காக திரைகடல் தாண்டிச் செல்பவர்களாக இருக்கின்றனர்.

இருவரின் நோக்கமும் ஒன்றே தான்....திரைகடல் தாண்டுவதும்...... திரவியம் தேடுவதும்...

ஆனால்திரைகடல் தாண்டி நீங்கள் திரவியம் அள்ளிவரும் வேளையில் நாங்கள் வாழ்விழந்து போயிருக்கின்றோம் என்பதே நடைமுறையில் இருப்பதாகப் படுகின்றது.

ஈழத்தமிழருக்காக சர்வதேசத்திடம் போய் நியாயம் கேட்கும் நிலையை இலங்கை அரசு மட்டும் எமக்களிக்கவில்லை. எமது போராட்டத் தலைமைகளும் தான் அதற்கு வழிசமைத்தன. ஆயுதப் போராட்டத் தலைமை மட்டும் அல்ல எமது ஆதி அரசியல் தலைமைகளும் தான்.....

ஆனால் அதனை இன்னும் நாம் புரிந்து கொண்டுள்ளோமா? என்பது தான் இன்னமும் புரியாத புதிராக இருக்கின்றது.

அண்மையில் என்னைச் சந்தித்த நண்பரொருவர், அவர் வரலாற்று ஆய்வாளரும் கூட எமது கையறு நிலையை தெளிவாக இவ்வாறு சொன்னார்.

முதலில் நிலத்தைப் பறிக்கும் போது நாம் நிலததின் பின்னே ஓடினோம்... பின்னர் கல்வியைப் பறிக்கும் போது கல்வியின் பின்னே ஓடினோம்... பின்னர் மொழியைப் பறிக்கும் போது மொழியின் பின்னே ஓடினோம்.. அவ்வாறு ஒன்றன் பின்னே ஓடம் போது மற்றையதை விட்டு விட்டோம்... இன்றோ மண், கல்வி, மொழி, உரிமை எல்லாமே பறிபோகும் போது எதன்பின்னே ஓடுவது எனத் தெரியாது இருக்கின்றோம் எனச் சொன்னார்.

இன்றும் எதற்காகவோ ஓடிக்கொண்டு இருக்கின்றோம்..... திரை கடலைத் தாண்டி.. இங்கு நாம் விட்ட தவறு என்ன என்பதை இன்னும் புரிந்து அதற்கான சரியான நடவடிக்கையை முன்னெடுக்காது இருக்கின்றோம்....

திரை கடலுக்கு அப்பால் திரவியம் இருப்பதாய் இருந்தாலும் அதைப் பெற்றுக் கொள்ளும் தகுதியை நாம் இன்னும் வளர்க்க வேண்டியுள்ளது. எமக்கு எது தேவை என்பதை நாமெல்லோரும் சேர்ந்து முதலில் தீர்மானிக்க வேண்டும்.. அதை பெரும்பாலான தமிழர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அதனை அடைவதையே இலக்காகக் கொண்டு செயற்பட வேண்டும்.

ஐநாவில் பிரேரணையெல்லாம் ஆண்டுக்கு ஆண்டு மாறுபடும்... அவரவர் வசதிக்கு ஏற்ப வார்த்தைகள் நீக்கவோ சேர்கவோ படும்... அதை நம்பி நாம் ஏன் நகர வேண்டும்... உண்மையைச் சொல்லுங்கள் நாங்கள் ஆதரவு தேடி அலைந்தாலென்ன... அலையாவிட்டால் என்ன தீர்மானத்தை வெற்றியடையச் செய்யவோ அன்றேல் தோல்வியடையச் செய்யவோ வல்லமை எமக்கு உள்ளதா?

எம்மைக் கொல்வதற்கு ஆயுதம் அனுப்பிய கரங்களிடம் இருந்து எமக்கு தீர்வா?

அந்நாடுகளா எமக்கு முடிவைத் தரப் போகின்றன.அல்லது அந்த முடிவுக்காகவா நாம் இரத்தம் தோய்ந்தோம்.... நாம் இரத்தம் தோய்ந்த போது கைகட்டி நின்ற சர்வதேசமா இன்று எமக்கான தீர்வை முன்வைக்கவுள்ளன...

திரைகடல் தாண்டி எது நடந்தாலும் உள்நாட்டில் திரவியத்தை முதல் சமைப்போமா

## பேஸ்புக் முறைப்பாடுகள் அதிகரிப்பு 0112 691 692

## 300 கணக்குகள் முடக்கப்பட்டன

இந்த வருடம் சுமார் 170 பேஸ்புக் கணக்குகளை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்ததாக இலங்கை கணணி அவசர நடவடிக்கை ஒன்றியம் தெரிவித்துள்ளது.

பேஸ்புக் முறைக்கேடுகள் தொடர்பில் இதுவரை 250 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக ஒன்றியத்தின் சிரேட்ட தகவல் தொழில்நுட்ப பொறியியலாளர் ரொஷான் சந்திரகுப்த கூறியுள்ளார்.

இதில் 80 வீதமான முறைப்பாடுகள் போலி பேஸ்புக் கணக்குகள் தொடர்பிலேயே பதிவாகியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்

பேஸ்புக் கணக்குகள் தொடர்பில் 0112 691 692 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு முறைப்பாடுகளை செய்ய முடியும் என இலங்கை கணணி அவசர நடவடிக்கை ஒன்றியம் குறிப்பிட்டுள்ளது.

## பாரஊர்தியின் கீழ படுத்தவர் மரணம்



சீனக்குடாப் பிரதேசத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்து பார ஊர்தியின் கீழ் படுத்துறங்கியவர் அகால மரணம் அடைந்துள்ளார்.

ஐம்பது வயதான நிஹால் எட்மின் என்ற களனியைச் சோந்ததொழிலாளியே இப் பாரஊர்தியின் அடியில் படுத்துத் தூங்கிய போது பலியாகியுள்ளார்.

அவர் பாரஊர்தியின் அடியில் படுத்திருப்பதை அறியாத பாரஊர்திச் சாரதி பார ஊாதியைச் செலுத்த முயன்ற போதே இவ்விபத்து நிகழ்ந்துள்ளது.

அதனைத் தொடர்ந்து பாரஊர்திச் சாரதி கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்நிலைப் படுத்தப்பட்டார்.

## மயானத்தின் மீதே மனிதப் புதைகுழி



மன்னார் மனிதப் புதைகுழியானது பழைய மயானத்தின் மேற்பரப்பிலேயே உருவாக்கப்பட்டிருந்ததாக அங்கு ஆய்வுகளை நிகழ்த்தியுள்ள சட்ட வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

அகழ்வு நடவடிக்கைகளை முன்னெடுத்துச் சென்ற போது எழுந்தமானமாகப் புதைக்கப்பட்டிருந்த சடலங்களின் எச்சங்களை அகழ்ந்து எடுத்து பத்திரப் படுத்திக் கொண்டோம்.

ஆனால் மேலும் அகழ்வுப் பணிகளை முன்னெடுத்த போது சுமார் 6.7 அடிகளுக்குப் பின்னர் சடலங்கள் முறையான ஒழுங்கில் அடக்கம் செய்யப்பட்டிருப்பதை அவதானித்தோம். அதைத் தொடர்ந்தே அகழ்வுப் பணிகளை இடைநிறுத்துவது தொடர்பான தீமானத்தை எடுத்தோம் என சட்ட வைத்திய அதிகாரி ஏஎவ்பி செய்திச் சேவைக்குத் தெரிவித்துள்ளார்.

## மணம்முடித்து 15 நாளில் மரணம்

வேகக் கட்டுப்பாட்டை இழந்த ஈருருளியொன்று மின்கம்பத்தில் மோதி விபத்தடைந்ததில் கொல்லப்பட்டவர் அண்மையில் திருமணம் முடித்தவர் என்ற தகவல் தெரியவந்துள்ளது.

கடந்த 11ம் திகதி இரவு கிண்ணியாவில் உள்ள தனது வீட்டில் இருந்து மூதூரில் உள்ள தனது மனைவியின் வீட்டிற்குப் பயணித்த ஹஸன் றபீஸ் என்ற 22 வயதான இளைஞனின் ஈருருளி இறால்குழி பாலத்திற்கு அருகில் மின்கம்பத்துடன் மோதி விபத்தடைந்தது.

அவ்விபத்தில் றபீஸ் மரணமானார். அவர் திருமணம் முடித்துப் பதினைந்து நாட்களே ஆகியிருந்தது. அவரது மரணம் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## யாசகம் கேட்கும் சிறார்கள் அதிகரிப்பு

திருகோணமலை மாவட்டத்தில் யாசகம் செய்யும் சிறுவர்களின் எண்ணிக்கை அண்மைக்காலமாக அதிகரித்து காணப்படுகின்றது.

இவர்களின் பெரும்பாலானோர் பாடசாலையை விட்டு விலகிய நிலையில் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதாக தெரியவருகின்றது.

அத்துடன் இவ்வாறான தொழிலில் ஈடுபடுவதற்கு பெற்றோர்களே ஊகுவிப்பதாகவும் தெரிவிக்கப் படுகின்றது பாடசாலை செல்லும் வயதில் இலவச கல்வியை கற்பதற்கு பாடசாலைக்கு அனுப்பாமல் வீட்டுக்கு வீடு சென்று பிச்சை எடுக்க பழக்கும் பெற்றோர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

## தம்பிராசாவின் தனிப் போராட்டம் முடிவு

யாழ். வலி. வடக்கு மற்றும் சம்பூர் மக்களின் மீள்குடியேற்றத்தினை வலியுறுத்தி கடந்த 21ஆம் திகதி முதல் யாழ். மாவட்ட செயலகத்திற்கு முன்னால் சத்தியாக்கிரகப் போராட்டத்தினை மேற்கொண்டு வந்த முத்தையாப் பிள்ளை தம்பிராசா, 21 நாட்களின் பின்னர் தனது போராட்டத்தினை இன்றுடன் கடந்த 13ம் திகதியுடன் கைவிட்டுள்ளார்.

மேற்படி விடயங்களை வலியுறுத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் எதிர்வரும் வாரங்களில் மேற்கொள்ளப் படவிருக்கின்ற மாபெரும் போராட்டங்களினாலேயே தான் இந்தப் போராட்டத்தினைக் கைவிடுவதாக தம்பிராசா தெரிவித்தார்.

தம்பிராசா சத்தியாக்கிரகப் போராட்டத்தினை மேற்கொண்டு வந்த போது, கடந்த புதன்கிழமை அவரது சத்தியாக்கிரக கொட்டகை காணாமற் போயிருந்தது. இவ்விடயம் தொடர்பாக தம்பிராசா யாழ்ப்பாணக் காவல்துறை நிலையத்திலும் முறைப்பாடு செய்திருந்திருந்தமை குறிப்பிடத் தக்கது.

## கிழக்கு நியமனங்களை எதிர் த்து மற்றோர் வழக்கு?

அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கு போட்டிப் பரீட்சை எழுதி சித்தியடைந்த நிலையில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படாத தமிழ் மாணவர்கள் குறித்த ஆட்சேர்ப்பு நடவடிக்கைக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யவதற்கு முடிவு செய்துள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டு திறந்த போட்டிப் பரீட்சையும் நடைபெற்றது.

இந்தப் போட்டிப் பரீட்சையில் அதிகூடிய மதிப்பெண்களைப் பெற்ற விண்ணப்பதாரர்களுக்கு இன விகிதாசார அடிப்படையில் நியமனம் வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இதனடிப்படையில் தமிழர்கள் 205 பேர் தெரிவாகி இருக்க வேண்டும். ஆனால் 46 பேருக்கே நேர்முகப் பரீட்சைக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. ஆனால் 187 முஸ்லிம்களுக்குப் பதிலாக 226 பேருக்கும், 113 சிங்களவர்களுக்கு பதிலாக 241 பேருக்கும், கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. இதனால் 159 தமிழ் விண்ணப்பதாரர்கள் புறக்கணிக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து இந்த நியமனம் வழங்கப்படுவதற்கு தடை உத்தரவை பிறப்பிக்கக்கோரி நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படுவதற்கு கடந்த 10ம் திகதி த.தே.கூட்டமைப்பு காரியாலயத்தில் நடைபெற்ற குறித்த தமிழ் விண்ணப்பதாரர்களின் ஒன்றுகூடல் நிகழ்வில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த சட்ட நடிவடிக்கைக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பக்க பலமாக நின்று சகல உதவிகளையும் நல்குமென கலந்துரையாடலில் பங்குபற்றிய தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான பொன். செல்வராசா, பா.அரியநேத்திரன், சீ.யோகேஸ்வரன் ஆகியோர் தெரிவித்தனர்.

மேலும், இந்த நிகழ்வில் மட்டு. அம்பாறை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மாகாணசபை உறுப்பினர்களான கோ.கருணாகரன், பிரசன்னா இந்திரகுமார், சட்டத்தரணி துரைராசசிங்கம், இரா துரைரெட்ணம், நடராசா, இராஜேஸ்வரன் மற்றம் கலையரசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கிழக்கு மாகாணசபையினால் அண்மையில் வழங்கப்பட்ட முகாமைத்துவ உதவியாளர் பதவி நியமனத்திலும் இதேபோன்று தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டதும் இதனால் புறக்கணிக்கப்பட்டவர்களால் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் மற்றுமொரு நியமனத்தில் தமிழர்கள் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## முதலீட்டு வலயங்கள் வடக்கிலும் கிழக்கிலும்

வடக்கிலும் கிழக்கிலும் மூன்று முதலீட்டு வலயங்கள் அமைக்கப்படவுள்ளன என்று முதலீட்டு ஊக்குவிப்புத்துறை பிரதி அமைச்சர் பைஸர் முஸ்தபா தெரிவித்தார். பயங்கரவாதம் ஒழிக்கப்பட்ட பின்னர் உள்நாட்டு, வெளி நாட்டு முதலீடுகளை ஊக்குவிக்கும் வகையில் இந்த வலயங்கள் அமைக்கப்படவுள்ளன என்று அவர் குறிப்பிட்டார். பல நிறுவனங்களின் உதவியுடன் தற்போது துறைமுக, நகரத் திட்டங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆங்கிலப் பத்திரிகைகள் மீதான பார்வை

## இந்தியாவை விட்டகழும் இலங்கைச் சுகாதார அமைச்சு

இலங்கையின் சுகாதார அமைச்சானது, மலேசியாவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றைக் கைச்சாத்திட்டுள்ளது. இதன்படி எதிர்வரும் காலங்களில் மருந்துப் பொருட்கள் மலேசியாவிலிருந்தே இறக்குமதி செய்யப்படவுள்ளன. மருந்துப் பொருட்களுக்காக இந்தியாவில் தங்கியிருப்பதைக் குறைக்கும் முகமாகவே இப்புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது. இலங்கையின் மருந்துப் பொருட் தேவையை பெருமளவு பூர்த்தி செய்பவை இந்தியக் கம்பனிகளே. இந்நிலையில் அக்கம்பனிகள் நடைமுறையை மீறும் போது எதிர் நடவடிக்கை எதனையும் எடுக்க முடியாதுள்ளது. இதனாலேயே இந்தியக் கம்பனிகளைத் தவிர்த்து இலங்கை மலேசியக் கம்பனிகளுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையை ஏற்படுத்தியுள்ளது என சுகாதார அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (லீடர்)

## ஏரியில் பிறன்ஹாக்கள்



சுதேச மரபற்ற மீன்களான "பிறன்ஹா" மீன்கள் மற்றும் கடற்குதிரைகளை இலங்கையின் தியாவன்ன அருவியில் வளர்த்தெடுக்க வனசீவராசிகள் திணைக்களம் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.


இவ்வாறு ஏரியில் விடப்படும் புதிய மீன்களால் சுதேச மீன்களின் இருப்பும் வாழ்வும் கேள்விக்குறியாகப் போய்விடும் என்பதாலேயே இந்தத் தார்மீக எதிர்ப்பை அவர்கள் வெளியிட்டுள்ளனர். (லீடர்)

## சட்டங்களை மீறும் அரசியல்வாதிகள்



தென் மாகாணத்தில் பரவலாக தேர்தல் சட்டங்களை அரசியல்வாதிகள் மீறுவதாக தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் குற்றஞ்சாட்டியுள்ளன. ஒரு பிரதேசத்தில் பல தேர்தல் காரியாலயங்களை அவர்கள் திறந்திருப்பதாகவும் அரச திணைக்கள மற்றும் கூட்டுத்தாபன வாகனங்களை அவர்கள் பிரச்சார நடவடிக்கைக்கு பயன் படுத்துவதாகவும் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. (லீடர்)

## இலங்கையில் கணனிச் சூதாட்டம்



ஆயிரக்கணக்கான கணனி விளையாட்டு இடங்களை நாடுமுழுவதும் உருவாக்கும் அனுமதியுடன், நிட நேர அதிஸ்டலாபச் சீட்டையும் இலங்கையில் நடத்தும் அனுமதியை வெளிநாட்டுத் தொடர்புகள் உள்ள தனியார் நிறுவனம் ஒன்று பெற்றுள்ளது. ஓஷானிக் கேம்ஸ் பிரைவட் லிமிட்டட் எனும் தனியார் கம்பனிக்கே இவ்வனுமதி வழங்கப்பட்டுள்ளது. இக்கம்பனி கொங்கொங்கைத் தளமாகக் கொண்டிருக்கும் கணனி விளையாட்டுக் கம்பனியொன்றுடன் இணைந்தே இத்திட்டத்தை இலங்கையில் அறிமுகப்படுத்தவுள்ளது. இலங்கையில் தற்போதுவரை அரச கட்டுப்பாட்டின் கீழுள்ள நிறுவனங்களே அதிஸ்டலாபச் சீட்டுக்களை நடத்துவது குறிப்பிடத்தக்கது.

## பிள்ளையைக் குற்றம் சொல்லும் தேவானந்தா

யாழ்ப்பாணத்தில் நடாத்தப்பட்ட மனித உரிமை மீறல்களுடன் ஈ.பி.டி.பிக்கு உள்ள தொடர்புகள் தொடர்பாக தனது அறிக்கையில் நவிபிள்ளை குறிப்பிட்டுள்ளதை அடுத்து அதனைக் கடும் காட்டமாக விமர்சித்துள்ளார் ஈ.பி.டி.பி தலைவர். "என்னுடையதோ அல்லது எனது கட்சியினதோ கொள்கைகள் அவ்வாறானவை அல்ல. கட்சியிலுள்ள தனி நபர்கள் யாராவது அவ்வாறான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டால் நான் என்ன செய்வது? அதற்காக என்னையோ கட்சியையோ குற்றம் சொல்வது பொருத்தமானதல்ல. இவ்வாறான மனித உரிமை நடவடிக்கை தொடர்பாக என்னால் செய்வதற்கு ஒன்றுமில்லை" என டக்ளஸ் மேலும் தெரிவித்தார். (லீடர்)

## அரச வாகனங்கள் கைப்பற்றப்படும்

தேர்தல் நடவடிக்கையில் சட்ட விரோதமாக ஈடுபடுத்தப்படும் அரசுக்குச் சொந்தமான வாகனங்களைக் கைப்பற்ற விசேட குழுக்கள் களமிறங்கியுள்ளன. மேல் மற்றும் தென் மாகாணத் தேர்தல்களில் அரசிற்குச் சொந்தமான வாகனங்கள் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுவதாக கண்காணிப்பாளர்கள் பரவலான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியதைத் தொடர்ந்து இந்நடவடிக்கையினை தேர்தல் திணைக்களம் முன்னெடுக்கவுள்ளது. (லீடர்)



## தொடருந்து ஒப்பந்தம் சீனக் கம்பனிக்கு

பெலியத்தயிலிருந்து கதிர்காமம் வரை தொடருந்து பாதையை நிர்மாணிப்பதற்கான பெறுமதி வாய்ந்த இரண்டு ஒப்பந்தங்களை சீனக்கம்பனி ஒன்று பெறவுள்ளது.

600 மில்லியன் அமெரிக்க டொலர் அல்லது 7.7 பில்லியன் இலங்கை ரூபா பெறுமதியான ஒப்பந்தங்களையும் வழங்கவுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். அதற்கான நிதி சீனாவிடமிருந்தே கிடைக்கப் பெறவுள்ளது. அதனாலேயே சீனக் கம்பனியை இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்குத் தாம் தெரிவு செய்ததாக அமைச்சர் தெரிவித்தார். (டைம்ஸ்)

## ஹெரோயின் கடத்திய பாக் பிரசை எங்கே?

36 கிலோ ஹெரோயினை இலங்கைக்குள் கடத்துவதற்கான திட்டத்தின் சூத்திரதாரி என சந்தேகிக்கப்படுபவர் இலங்கையிலிருந்து தப்பியோடியுள்ளார்.

இதனைத் தடுக்க முடியாமல் போனதற்காக சுங்கத் திணைக்களமும், காவல் துறையினரும் ஒருவர் மீது ஒருவர் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியுள்ளனர்.

அப் பாக்கிஸ்தானியப் பிரஜையை கொள்ளுப்பிட்டியில் இயங்கி வரும் கப்பலிடும் அலுவலகம் ஒன்றிலிருந்து கைது செய்யுமாறு காவல் துறைக்கு அறிவித்ததாக சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது. ஆனால், சுங்கத் திணைக்களத்திடமிருந்து எவ்விதமான தகவல்களும் கிடைக்கவில்லை என காவல்துறை தெரிவித்துள்ளது. (டைம்ஸ்)

## பிரான்ஸில் இருந்து மருந்துகள்

30,000 அலகு மருந்துகளை பிரான்சிலிருந்து விமானம் மூலம் தருவிக்கக் கால்நடை அபிவிருத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் அவசர நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

கால்நடைகளுக்குப் பரவி வரும் நோய் தற்போது கம்பஹா மாவட்டத்தில் பன்றிகளுக்கும் பரவத் தொடங்கியதை அடுத்தே இவ்அவசர நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. (டைம்ஸ்)

## வாகன இறக்குமதிப் பத்திரங்களில் பாரிய மோசடி

வாகன இறக்குமதி அனுமதிப் பத்திரங்கள் மூலம் இறக்குமதி செய்யப்படும் வாகனங்களின் விற்பனைகளால் பல மில்லியன் ரூபா மோசடி நடப்பதாகவும் அதனால் பெரும் வருமான இழப்பை அரசு இழப்பதாகவும் சுங்க ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். சமய வணக்கத்தளங்களுக்கு அன்பளிப்பாக வாகனங்களைப் பெற்றுக் கொள்ளும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அவ்வனுமதியைப் பயன்படுத்தி கொண்டுவரப்படும் வாகனங்கள் வணக்கத்தளங்கள் அல்லாத ஏனையோருக்கு விற்கப்படுவதும் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக இறக்குமதி கட்டுப்பாட்டு ஆணையாளர் நாயகத்தினால் தனிநபர்களுக்கு வழங்கப்படும் அனுமதிச் சீட்டுக்கள் தொடர்பாக மோசடிகள் நிலவுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆய்வின்போது, போலியான கம்பனியொன்றிற்கு இறக்குமதி அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது தெரியவந்துள்ளது. இத்துடன் வணக்கத்தளம் ஒன்றின் பெயரில் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்திற்கான வாகனங்களை கழுவும் நிறுவன உரிமையாளரின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருப்பதும் தெரிய வந்துள்ளது. (டைம்ஸ்)

## மீண்டும் கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவராக சிவஸ்ரீ. பாஸ்கரன் குருக்கள்

தெரிவு செய்யப்பட்டு சில வாரங்களுக்குள் பல்வேறு காரணங்கள் குறிப்பிடப்பட்டு கலைக்கப்பட்டிருந்த மூதூர் பாரதிபுரம் கிராமத்தின் அபிவிருத்திச் சங்கத் தலைவராக மீண்டும் சிவஸ்ரீ. பாஸ்கரன் குருக்களே தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

எவ்வித எதிர்ப்புக்களும் இன்றி அவரது தெரிவு மீண்டும் இடம் பெற்றுள்ளது.

கடந்த ஆண்டின் இறுதிக்காலப்பகுதியில் தெரிவு செய்யப்பட்ட பாரதிபுரம் கிராம அபிவிருத்திச் சங்கம் திடீரெனக் கலைக்கப்பட்டது.

அதனைத் தாடர்ந்து சுமார் ஐந்து மாதங்களாக கிராம அபிவிருத்திச் சங்கத்தை மீள அமைக்குமாறு பல்வேறு தரப்புக்களாலும் கோரப்பட்டிருந்தாலும் தற்போதே தேர்வு சாத்தியமாகியுள்ளது.

*13.03.2014* அன்று நடைபெற்ற கிராம அபிவிருத்திச் சங்கத் தேர்வில் சிவஸ்ரீ. பாஸ்கரன் குருக்கள் தலைவராகவும், தணீஸ்வரன் செயலாளர் ஆகவும் குபேரலிங்கம் பொருளாளராகவும் தெரிவாகியுள்ளனர்.

## வரிஏய்ப்பைத் தோண்ட முயன்றதாலேயே துப்பாக்கிச்சூடு

கலால் திணைக்கள ஆணையாளர் நாயகத்தின் வீட்டின் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டிற்கான காரணம் வரியேற்பில் ஈடுபட்டதாக 10 வடிசாலைக் கம்பனிகள் மீது மேற்கொள்ளப்பட்ட விசாரணையே எனச் சந்தேகம் எழுந்துள்ளது.

கடந்த மாதம் முதல் இவ்வடிசாலைக் கம்பனிகளின் வரி மற்றும் கணக்கிட்டு நடவடிக்கைகளை கணக்காய்வு செய்யத் தாம் ஆரம்பித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

வரி மோசடிகளால் அரசாங்கம் பல மில்லியன் ரூபா பெறுமதியான வருமானத்தை இழக்கும் எனவும் அவர் தெரிவித்தார். (டைம்ஸ்)

## ஜெனாவில் பிரேரணை அரசியல் முனைப்புக் கொண்டதே

ஜெ.நாவின் மனித உரிமைச் சபையில் கொண்டுவரப்படவுள்ள பிரேரணைக்கு அரசியல் காரணிகளே காரணமாக உள்ளன என அமைச்சர் நிமால் ஸ்ரீபாலடி சில்வா தெரிவித்துள்ளார்.

இலங்கை சிறிய நாடாக இருப்பினும் அந்நாடு தனது இறையாண்மையைப் பாதுகாக்க முயற்சி செய்து கொண்டேயிருக்கின்றது. அமெரிக்கா மற்றும் பிரித்தானியா இலங்கைக்கு எதிராக ஆதரவைத் திரட்டும் பெரும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றன. அந்நாடுகள் இலங்கை தொடர்பாக இரட்டை நிலைப்பாட்டை கொண்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (ஒப்சேவர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சடங்காக மாறிவிடுமா ஜெனீவா?

-நிலாந்தன்-



இம்முறை ஜெனிவாவை முன்னிட்டு முன்னெடுக்கப்பட்டு வரும் தமிழ் லொபியானது, முன்னைய ஆண்டுகளோடு ஒப்பிடுகையில், துலக்கமான ஒரு கருத்தொருமைப்பாட்டை எட்டியிருப்பது தெரிகிறது. தமிழ் டயஸ்பொறாவிலும், தமிழகத்திலும் ஒழுங்கு செய்யப்படும் ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்கள் போன்றவற்றில் தெரிவிக்கப்படும் கருத்துக்கள், முன்வைக்கப்படும் சுலோகங்கள் என்பவற்றைத் தொகுத்துப் பார்த்தால் அது தெரியவரும்.

அதாவது, முன்னைய ஆண்டுகளைப் போலன்றி இம்முறை போர்க்குற்ற விசாரணை என்ற மையப்பொருளைக் கடந்து இனப்படுகொலை எனப்படுவதே மையப்பொருளாக மாறியிருக்கிறது. இலங்கைத் தீவில் இடம்பெற்றது இனப்படுகொலையே என்பதை நிறுவுவதன் மூலம் அதற்குரிய உச்சபட்ச பரிகாரமாக தமிழர்களுக்குரிய ஆகக்கூடியபட்ச தன்னாட்சிக் கட்டமைப்பு ஒன்றைப் பொறுவதே இம்முறை தமிழ் லொபியின் பிரதான சுலோகமாக மாறியிருக்கிறது.

போர்க்குற்ற விசாரணை என்று வந்தால் அது சில சமயம் தமிழ்த் தரப்புக்களிற்கும் பொறியாக மாறலாம் என்ற ஒரு அச்சம் தமிழ் லொபியில் ஒரு தரப்பினர் மத்தியில் காணப்படுகின்றது. போர்க் குற்ற விசாரணை எனப்படுவது தனியே அரசாங்கத்தை மட்டும் விசாரிப்பதாக அமையாது. மாறாக, அது தமிழ் இயக்கங்களையும் விசாரிப்பதாக அமையும். இதன்போது இயக்கங்களுக்கிடையிலான சண்டைகள், உள்ளியக்கச் சண்டைகள் என்பவற்றுடன் நிராயுதபாணிகளான தமிழ், சிங்கள் முஸ்லிம் மக்கள் மீதான தாக்குதல்களும் உட்பட ஈழப் போர் பரப்பில் அனைத்துத் தரப்புக்களாலும் இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவும், விசாரிக்க வேண்டி வரும் என்பதையும் அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

இலங்கை அரசாங்கத்தின் சில முக்கியஸ்தர்கள் இன்னும் ஒரு படி மேலே போய் ஐ.பி.கே.எவ். காலத்து குற்றச் செயல்களையும் விசாரிக்க வேண்டி வரும் என்று இந்தியாவை மறைமுகமாக மிரட்டப்பார்க்கிறார்கள். அதாவது, போர்க் குற்ற விசாரணைக்குள் இந்தியாவும் சிக்கவேண்டி வரும் என்பதே இதன் பொருளாகும்.

இப்படிப் பார்த்தால், போர்க் குற்ற விசாரணை என்ற பொதுப் பரப்பிற்குள் தமிழர்களும் விசாரிக்கப்படக்கூடிய ஒரு நிலைமை தோன்றுவதை தவிர்ப்பதற்காகவே தமிழ் லொபியின் ஒரு பகுதியினர் போர்க் குற்ற விசாரணையை விடவும் இனப்படுகொலை மீதான விசாரணையே தேவை என்று கோரி வருவதாக ஒரு குற்றச்சாட்டு உண்டு. ஆனால், போர்க் குற்ற விசாரணையையும் உள்ளடக்கிய இனப்படுகொலை மீதான விசாரணையை வற்புறுத்துவோர் அதற்கு பின்வருமாறு விளக்கமளிக்கின்றார்கள்.

போர்க் குற்ற விசாரணை என்று வந்தால், அது அதன் தர்க்கபூர்வ விளைவாக தமிழ்த் தரப்பிற்கும் எதிராகத் திரும்பும்தான். தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்டவை மட்டும் போர்க் குற்றமல்ல. தமிழர்களால் செய்யப்பட்டவையும் போர்க் குற்றம் தான். போர்க் குற்றம் என்று வரும்போது, அதை சிங்களப் போர்க் குற்றம் அல்லது தமிழ்ப் போர்க் குற்றம் என்று பிரிக்க முடியாது. ஒடுக்குபவனின் போர்க் குற்றத்தையும், ஒடுக்கப்படுவோரின் போர்க் குற்றத்தையும் ஒரே தராசில் வைத்துப் நிறுக்கக்கூடாது என்றும் வாதிடமுடியாது. போர்க் குற்றங்களை யார் செய்தாலும் அவை போர்க் குற்றங்கள் தான். ஆனால், போர்க் குற்றங்கள் வெற்றிடத்திலிருந்து வருவதில்லை. அவை போர்க் களத்திலேயே புரியப்படுகின்றன. போர்தான் முதலில் வந்தது. போர்க் குற்றம் பின்னரே வந்தது. போர் எப்படி வந்தது? இன ஒடுக்குமுறைதான் போரைக் கொண்டு வந்தது. எனவே, போர் ஒரு காரணமல்ல. அது ஒரு விளைவுதான். போர்க் குற்றமும் ஒருவிளைவுதான். இங்கு மூல காரணம் இன ஒடுக்குமுறைதான்.

இப்படிப் பார்த்தால், போரும் விளைவுதான், போர்க் குற்றமும் விளைவுதான். போர்க் குற்ற விசாரணை எனப்படுவது போரின் வேர்களை தேடிச் செல்லுமிடத்து, அது தமிழ் தரப்பைவிடவும் சிங்களத் தரப்பிற்கே அதிகம் பாதகமாய் அமையும். இதில் நியாயத் தாரசு தமிழர்களுக்குச் சாதகமாகவே சாயும். எனவே, போர்க் குற்றம், போர் என்பவற்றுக்கான மூல காரணத்தைத் தேடிச் செல்லும் எந்தவொரு விசாரணைப் பொறிமுறையும் இனப்படுகொலை மீதான விசாரணையாகவே வந்துமுடியும் என்பது இவர்களுடைய வாதமாகக் காணப்படுகிறது.

இந்நிலையில், போர்க் குற்ற விசாரணையை மட்டும் குவி மையப்படுத்துவது என்பது இனப்பிரச்சினையின் மையத்தை திசை திரும்பி அதை வெறுமனே மனித உரிமைப் பிரச்சினையாக சுருக்கிவிடக்கூடும் என்றும் இவர்கள் அச்சப்படுகின்றார்கள். இது ஏறக்குறைய இலங்கை - இந்தியா உடன்படிக்கைக்குப் பின்னாலிருந்த அரசியல் உள்நோக்கத்தை ஒத்தது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். ஜெனிவாக் கூட்டத் தொடரைப் போலவே இலங்கை, இந்திய உடன்படிக்கையின் போதும், தமிழர்கள் ஒரு தரப்பு அல்ல. இந்த உடன்படிக்கையானது தமிழர்களுக்கு மட்டுமேயான சுட்டிப்பான இனப்பிரச்சினையை முழுத் தீவுக்குமான அதிகாரப் பரவலாக்கலுக்குரிய பிரச்சினையாகப் பொதுமைப்படுத்தி தீவு முழுவதற்கும் மாகாண சபைகளை உருவாக்கியது. அதைப் போலவே போர்க் குற்ற விசாரணை எனப்படுவதும் பிரச்சினையின் மையத்தைக் கரைத்து அதைப் பொதுமைப்படுத்துவதிலேயே முடியும் என்பது அவர்களுடைய வாதமாகும்.

இங்கு பிரச்சினையின் மையம் எனப்படுவது தமிழர்களுக்கான ஒரு உச்சபட்ச நீதிக்கான ஒரு கோரிக்கையாகும். எனவே, அதுதான் பிரதான வாதப் பொருளாக இருக்கவேண்டும். அப்பொழுதுதான் அப்பிரச்சினைக்குரிய தீர்வாக உச்சபட்ச தன்னாட்சி ஒன்றைக் குறித்து அனைத்துலக சமூகம் சிந்திக்கும். அனைத்துலக சமூகம் இனப்படுகொலை இடம்பெற்றதை ஏற்றுக்கொள்ளும்போதே அதற்குப் பரிகாரமாக தமிழர்களுக்கான உட்பட்ச தன்னாட்சி ஒன்றைக் குறித்து சிந்திக்க முடியும். மாறாக போர்க் களத்தில் புரியப்பட்ட எல்லாக் குற்றங்களுக்குமான விசாரணை என்று பொதுமைப்படுத்தப்படும்போது, தமிழர்களின் பிரச்சினை என்ற சுட்டிப்பான மையம் கரைந்துபோய்விடும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

எனவே, இனப்படுகொலை மீதான விசாரணை என்று வந்தால் அங்கே பிரச்சினையின் மையத்தை திசை திருப்புவதற்கோ அல்லது அதைப் பொதுமைப்படுத்தி பத்தோடு பதினொன்றாக அதன் வீரியத்தை குறைப்பதற்கோ உரிய ஏது நிலைகள் ஒப்பீட்டளவில் குறைவு என்றும் இவர்கள் வாதாடுகிறார்கள்.

இவை போன்ற விவாதங்கள் கடந்த இரு ஆண்டுகளை விடவும் இவ்வாண்டு அதிகரித்த அளவிலும் பரந்த அளவிலும் நிகழ்ந்து வருகின்றன. ஏறக்குறைய உலகளாவிய தமிழ் லொபியின் சட்ட ரீதியிலான கோட்பாட்டு அடித்தளம் போல இது உருவாகி வருகிறது. தமிழ் வழக்கறிஞர்கள் மற்றும் சட்டச் செயற்பாட்டாளர்களில் ஒரு பகுதியினரே இச்செயற்பாட்டை முன்னெடுத்து வருகிறார்கள். அரசியலில் ஈடுபடும் தமிழ் வழக்கறிஞர்களைக் குறித்து சுமார் அரைநூற்றாண்டுக்கும் மேலான விமர்சனங்கள் உண்டு இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலையா? இல்லையா? என்பதில் இப்பொழுதும் சில வழக்கறிஞர்களுக்கு தடுமாற்றம் உண்டு. ஆனால், இத்தகைய தடுமாற்றங்களோ, தளம்பபல்களோ எதுவுமற்ற ஒரு பகுதி சட்ட நிபுணர்களும், சட்டச் செயற்பட்டாளர்களும் உலகளாவிய தமிழ் லொபிக்கு சட்ட ரீதியிலான நிராகரிக்கப்பட முடியாத ஒரு பொதுச் சுலோக்கத்தை உருவாக்கிக் கொடுத்திருக்கின்றார்கள். இனப்படுகொலைக்கான தீர்வே இனப்பிரச்சினைக்கான தீர்வுமாகும் என்பதே அப்பொதுச் சுலோகமாகும்.

ஆனால், இது தனிய ஒரு சட்டப் பிரச்சினை மட்டுமல்ல என்பதே இங்குள்ள மிகக்குருரமான அனைத்துலக யதார்த்தமாகும். எனது கட்டுரைகளில் திரும்பத் திரும்ப கூறப்படுவது போல, அனைத்துலக நீதி எனப்படுவது அல்லது அனைத்துலக சட்டம் என்படுவது அதன் பிரயோக நிலையில் அனைத்துலக அரசியல் தான். அனைத்துலக அரசியல் எனப்படுவது சக்தி மிக்க நாடுகளின் புவி சார் அரசியல் பொருளாதார நலன்களுக்கிடையிலான நீதியற்ற ஒரு சூதாட்டம்தான். அதாவது, பொழிவாகக் கூறின், அனைத்துலக நீதி எனப்படுவது நாடுகளுக்கிடையிலான நலன்களின் நீதியற்ற ஒரு சூதாட்டம்தான். இதில் தமிழர்கள் தமக்குரிய நீதியை பொறுவது எப்படி?

மேலும், சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பின் கிழக்கு ஐரோப்பிய மற்றும் ஆபிரிக்க நாடுகளில் நிகழ்ந்த இனப்படுகொலைகளை விசாரிப்பதற்கு ஏற்கனவே, இருந்த அனைத்துலக சட்டப் பொறி முறைகள் போதாமல் இருந்தன என்று ஒரு குற்றச்சாட்டு உண்டு. இரண்டாம் உலக மகா யுத்தத்திற்குப் பின்னரான அனைத்துலக நீதிபரிபாலன முறைகளை கெடுபிடிப் போரின் வீழ்ச்சிக்குப் பின் புதுப்பிடிக்கப்படவேண்டிய ஒரு தேவை அதிகரித்து வருகிறது. கெடுபிடிப் போருக்குப் பின்னர் உருவாகி வரும் புதிய அனைத்துலக வலுச்சமநிலை ஒன்றுக்கேற்ப ஐ.நா.வை மறுசீரமைக்கும்போது இனப்படுகொலைகளை விசாரிப்பதற்கான அனைத்துலக கட்டமைப்பு ஒன்றைக் குறித்தும் சிந்திக்கப்பட வேண்டியிருக்கும்.

அதாவது, இனப்படுகொலைகளைத் தடுக்க முடியாததொரு ஐ.நா. மன்றத்திடமிருந்து இனப்படுகொலை மீதான பூரண விசாரணைப் பொறிமுறை ஒன்றை தமிழர்கள் எப்படி எதிர்பார்க்க முடியும்?

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்படியான ஒரு குரூரமான ஓர் அனைத்துலகப் பின்னணியில் போர்க் குற்றங்கள் தொடர்பாகக்கூட ஒரு செயலுக்குப்போகும் தீர்மானத்தை இதுவரையிலும் எடுக்கத் தயாரற்ற ஐ.நா. மன்றமும் அனைத்துலகச் சமூகமும் இனப்படுகொலைகள் மீதான விசாரணைகள் தொடர்பில் எத்தகைய முடிவுகளை எடுக்கும்? அப்படியேதும் முடிவுகளை எடுத்தாலும் அது ஒரு சட்டத் தீர்மானமாகவோ அல்லது நீதியின் பாற்பட்ட ஒரு தீர்மானமாகவோ மட்டும் இருக்கப்போவதில்லை. அது அதிகபட்சம் ஓர் அரசியல் தீர்மானமாகத்தான் இருக்கும். உதாரணமாக ராஜீவ் கொலை வழக்கில் அண்மையில் இந்திய உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை இங்கு எடுத்துக்காட்டலாம். அது வழக்கறிஞர்களுக்கும், மரண தண்டனைக்கு எதிரான செயற்பாட்டாளர்களுக்கும் கிடைத்த ஒரு வெற்றிதான். ஆனால், அது தனிய ஒரு சட்டத் தீர்மானம் மட்டும் அல்ல. அது ஒரு அரசியல் தீர்மானமும்கூட. ஜெனிவாவை நோக்கிச் செல்லும் இந்நாட்களில் அதற்கொரு ராஜதந்திர பரிமாணம் உண்டு. இத்தகைய பொருள் படக்கூறின், அதுவொரு அரசியல் தீர்மானம்தான்.

இப்படிப்பட்டவொரு அரசியல் தீர்மானம் எடுக்கப்பட்டால் மட்டுமே ஜெனிவாவில் செயலுக்குப் போகும் ஒரு தீர்மானம் எடுக்கப்படும். ஜெனிவாக் கூட்டத் தொடரைப் பொறுத்த வரை தமிழர்களுக்கு இப்பொழுது தேவை செயலுக்குப்போகாத் தீர்மானங்கள் அல்ல. மாறாக, கால எல்லைகள் வகுக்கப்பட்ட செய்முறைத் தீர்மானங்களே தேவை. அப்படிபட்ட பிரயோகத் தீர்மானங்கள் எடுக்கப்படாவிட்டால் கியூபா, இஸ்ரேல் போன்ற நாடுகளுக்கு எதிராக ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களைப் போலவே இலங்கைக்கு எதிரான தீர்மானங்களும் வரலாற்றின் குப்பைத் தொட்டிக்குள் வீசப்பட்டு விடுமா?

அண்மையில் இலங்கை அரசுத் தலைவர் இதைச் சுட்டிக்காட்டியிருந்தார். மொறாட்டுவப் பிரதேசத்தில் ஒரு வைபவத்தில் உரையாற்றியபோது அவர் கியூப உதாரணத்தை எடுத்துக்காட்டியிருந்தார். கியூபாவிற்கு எதிராக இதுவரையிலும் 60 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. ஆனால், கியூபா அவற்றை தீவிரமாக எடுத்துக்கொள்ளவில்லை என்று கியூபா ஜனாதிபதி தனக்குக் கூறியதை அரசுத் தலைவர் அந்த வைபவத்தில் நினைவு கூர்ந்திருக்கிறார்.

ஆனால், கியூபாவும், சிறிலங்காவும் ஒன்றல்ல. கியூபாவுக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் அந்த நாட்டின் சிறிய தேசிய இனங்களின் விவகாரம் ஒரு துருப்புச் சீட்டாகப் பயன்படுத்தவில்லை என்பது இங்குள்ள முக்கிய வேறுபாடாகும். மாறாக, சிறிலங்காவில் தமிழர்களின் அரசியலை ஒரு பகடைக்காயாகப் பயன்படுத்தி இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக தீர்மானங்கள் நிறைவேற்றப்படுகின்றன. தமிழர்கள் ஒரு தரப்பாக இல்லாத அந்த அரங்கில் தமிழர்களின் பிரச்சினை ஒரு மனித உரிமை விவகாரமாகச் சுருக்கப்பட்டு விவாதிக்கப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன. ஆனால் அந்தத் தீர்மானங்கள் கூட இதுவரையிலும் செயலுக்குப் போகாத் தீர்மானங்களாகவே காணப்படுகின்றன.

இம்முறை சற்றுக் கடுமையான நகர்வுகள் மேற்கொள்ளப்படலாம் என்றொரு எதிர்பார்ப்புக் காணப்படுகிறது. இரண்டு கிழமைகளுக்கு முன் கொழும்பிற்கு வந்த அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவாகரங்களுக்கான உதவிச் செயலரான நிசா தேசாய் பிஸ்வால் கொழும்பில் நடாத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் இலங்கை மீதான பொருளாதாரத் தடை குறித்து சூசகமாக கருத்துத் தெரிவித்திருந்தார்.

இப்பொழுதுள்ள நிலைமைகளின் படி பொருளாதாரத் தடை எனப்படுவது ஒரு பிரயோகத் தீர்மானம் தான். ஒரு விதத்தில் அது பிரம்மாஸ்திரம் தான் அதைப் பிரயோகித்தால் அதன் தர்க்க பூர்வ விளைவாக உருவாகும் அடுத்த கட்டத்திற்கு மேற்கு நாடுகளும் இந்தியாவும் தயாராக இருக்கவேண்டும். ஏனெனில், பொருளாதாரத் தடை விதிக்கப்படுமாக இருந்தால் அது குறித்து சீனா எடுக்கப்போகும் முடிவு இங்கு முக்கியமானது. இலங்கைத் தீவானது சீனாவைப் பொறுத்த வரை அதன் ஆகப்பெரிய பிராந்திய நிர்வாக அலகை விடவும் சிறியதொரு நிலப்பரப்புத் தான். சிறியதொரு சனத் தொகையும்தான். எனவே, இலங்கைக்கு எதிரான பொருளாதாரத் தடையிலிருந்து இச்சிறு தீவைப் பாதுகாப்பது என்று சீனா முடிவெடுத்தால் அது அந்த நாட்டிற்கு பெரிய சுமையாக இருக்கப்போவதில்லை. ஆனால், அத்தீரமானம் இப்பிராந்தியத்தில் இப்பொழுது நிலவி வரும் சீனாவுக்கும், அமெரிக்க, இந்தியக் கூட்டுக்கு இடையிலான நிழல் பலப்பரீட்சையை நிஜப் பலப்பரீட்சையாக மாற்றக்கூடிய ஏதுநிலைகளையே அதிகப்படுத்தும். அப்படியொரு நிலை தோன்றுமிடத்து மேற்கும், இந்தியாவும் எத்தகையதொரு முடிவை எடுக்கும்?. அல்லது அப்படியொரு நிலை வருவதைத் தடுக்கும் விதத்தில் முன்னைய ஆண்டுகளில் எப்படிப்பட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டனவோ அப்படியே இம்முறையும் செயலுக்குப்போகாத் தீர்மானங்கள் நிறைவேற்றப்படுமா? அதாவது ஜெனிவாக் கூட்டத் தொடர் ஒரு சடங்காக மாறிவிடுமா?

நன்றி - குளோபல் தமிழ்ச் செய்திகள்

# ஓய்வூதிய வருடாந்த பொதுக்கூட்டம்

அரச ஓய்வூதியம் பெறுவோர் சங்க வருடாந்த பொதுக்கூட்டமானது 01.03.2014 அன்று 156ஏ, கிறீன் வீதி, மண்டபத்தில் நடைபெற்றது. இதில் என்னாலும் கலந்து கொள்ள முடிந்தது. அங்கு வருகை தந்திருந்த தலைவர், செயலாளர், பொருளாளர், அங்கத்தவர்கள் முன்நிலையில் எனக்கும் சில மணி நேரம் உரையாட சந்தர்ப்பம் கிடைத்தது. மிக்க மகிழ்ச்சி! அங்கு உரையாடப்பட்ட சில விடயங்களை எம்மைப் போன்று ஓய்வூதியம் பெறுகின்றவர்களும் இதனை அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக இதன் உட் கருத்தினை அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

அன்பார்ந்த ஓய்வூதியம் பெறும் அரச உத்தியோகத்தர்களுக்கு அறியத்தருவது யாதெனில் குழந்தைகள் தொடக்கம் இளைஞர்கள் வரையிலாக பலருக்கு முன்னோடியாக வாழ்ந்த நாம் எமது சேவையில் இருந்து நீங்கி ஓய்வாக வாழும் காலமிது. இக்காலத்தில் ஓய்வூதிய சங்கத்தில் இணைந்த நாம் அனைவரும் இச்சங்கத்தால் நிறைவேற்றப்படுகின்ற கடமைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதுடன் எம்முடைய இன்பதுன்பங்களை பகிர்ந்து கொள்வோம். நான் சேவையில் இருந்த காலத்தில் நடைபெற்ற சம்பவம் ஒன்றை அறியத்தருகின்றேன்.

ஒரு விவசாயி வயலில் வேலை செய்து கொண்டிருந்த போது பாம்பு தீண்டியது. அவரை வைத்தியசாலைக்கு கொண்டு சென்று வைத்தியம் நடைபெற்றது. அப்போது இரவு நேரமாகியது. வைத்தியசாலையினுள் எவரையும் அனுமதிக்க முடியாத நேரமது. விவசாயியின் மகன் வந்தார். அவரின் தோற்றத்தைக் கண்டு என் மனம் இரங்கியது நான் அழைத்துச் சென்று தந்தையைக் காட்டினேன். அவர் மயக்கமாக இருந்தார். ஆபத்தான நிலையிலும் இருந்தார். தந்தையைப் பார்த்துவிட்டு மகன் வெளியே வந்தார். என்னைப் பார்த்து நன்றி கூறினார். இந்த நேரத்தில் எவருமே உள்ளே செல்வதை அனுமதிக்க இயலாது. ஆனால் என்னை அனுமதித்தீர்கள் உங்களுக்கு நன்றி ஐயா! என்று கூறிவிட்டு அந்த மகன் சென்று விட்டான்.

அடுத்த நாள் அந்த மகன் பார்வையிட வேண்டிய நேரத்துக்கு வந்து தனது தந்தையை பார்த்தார். என்னிடமும் வந்து கதைத்தார். தந்தையார் குணமடைவதாக கூறினார். நான் பின்னரும் என்னால் இயன்ற இதர உதவிகளை செய்தேன்.

இதனூடாக விளங்குவது யாதெனில் ஆபத்தான வேளைகள் எவருக்கு வேண்டுமென்றாலும் வரலாம். 'ஆபத்தான வேளையில் உண்மையான நண்பரை அறியலாம்' என்று நாங்கள் புத்தகங்களில் படித்துள்ளது ஞாபகம் வருகின்றது.

இக்கருத்தினை பெருமிதத்திற்காக கூறவில்லை எவராக இருந்தாலும் நோய், வருத்தம், பிணி, மூப்பு இவையனைத்தும் ஏற்படும். நாம் வாழும் காலங்களில் அனைவரோடும் அன்போடும் எம்மால் இயன்ற உதவிகளை பிறருக்கு செய்து மகிழ்ச்சியாக வாழ்வோம் இந்த ஓய்வூதிய சங்கத்தில் இணைந்து எம்மாலான உதவிகளை செய்து நாமும் உதவிகள் பெற்று இன்பமாக வாழ்வோம்.

*இராமசாமி வேலாயுதம்*
ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்

# காலத்தின் கோலம் !!!

அந்தப்பகுதி அவளுக்கு புதியதாக இருந்தாலும் நாளடைவில் அவளும், பிள்ளைகளும் அப்பகுதியில் பழக்கப்பட்டவர்களாக மாறினர். மாகோ தொடரூந்து நிலைய சந்தி எப்பொழுதும் மிக கலகலப்பாகவே காட்சி தரும்.

## கடந்த வார தொடர்ச்சி. . .

பகலும், இரவும் மாறி மாறி தொடரூந்துகள் பயணித்துக்கொண்டே இருக்கும். அவள் தற்போது அங்காடி வடை வியாபாரியாக மாறினாள். மாகோவில் இருந்து கல்லோயா வரை பயணிக்கும் சகல தொடரூந்துகளிலும் ஏறி, இறங்கி எப்படியோ தனது வியாபாரத்தை மேம்படுத்திக் கொண்டாள். அவளின் அவல நிலையை அறிந்த தொடரூந்து நிலைய உத்தியோகஸ்தர்கள் உள்ளிட்ட சகல பணியாளர்களும் அவள் மேல் கருணை காட்டினர். அவள் ஒரு சிங்களப் பெண்மணி என்பதாலும், அவளின் கணவர் இனந்தெரியாத நபர்களால் கடத்தப்பட்டதாலும் அங்குள்ளவர்கள் அவளுக்கு விசேட சலுகை காட்டினார்கள்.



தனது இரு பிள்ளைகளையும் காப்பாற்ற அவளின் வடை வியாபாரம் அவளுக்கு கை கொடுத்து உதவியது. அதே வேளை அங்கு தனது பிள்ளைகள் இருவரையும் பாடசாலை ஒன்றில் சேர்த்து கல்வி பெற்றுக் கொடுக்க அவள் தவறவில்லை. அவளின் நிலைமையை அறிந்த அயலவர்கள் அவளுக்கு உதவிசெய்ய முன்வந்தார்கள். அவள் காதலித்து திருமணம் செய்து கொண்டதால், தன் பிறப்பிடமான மாத்தறைக்கு சென்று, உறவினர்களிடம் உதவி பெற்று வாழ அவள் விரும்பவில்லை. சுயமாக உழைத்து தனது சொந்தக் காலிலே நிற்க வேண்டும் என்ற உறுதியான அவளின் முடிவை அங்குள்ளவர்கள் பாராட்ட தவறவில்லை.

அவளும், அவளின் பிள்ளைகளும் தனிமைப்படுத்தப்பட்டாலும், அவளுக்குள் இருந்த விழுமியங்கள் சகலரையும் கவர வைத்தன. ஒரு பெண் தனிமைப்படுத்தப்பட்டால் சமூகம் அவளை உற்று நோக்கும் பார்வையானது சற்று வித்தியாசமானதே. ஆனால் வறுமைக்காக தனது வாழக்கையை தவறான திசைக்கு திருப்ப அவள் என்றுமே முயற்சித்ததில்லை. அவ்வாறே தன்னை எவரும் தவறாக எடை போடவும் அவள் இடமளிக்கவில்லை எப்படியோ அப்பகுதியில் நீண்டதொரு காலப்பகுதியை கடந்துகொண்டாள். பிள்ளைகளும் வளர்ந்து விட்டனர்.

அவளின் வடை வியாப்பாரம் கொழும்பு, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் இருந்து மாகோ சந்திக்கு வந்து போகும் தொடரூந்து பயணிகள் மத்தியில் மிகவும் பிரசித்தம் பெற்றது. வடையுடன் அவ்வப்போது பயணிகளுக்கு தேவைப்படும் உப உணவுப் பண்டங்களையும் விற்பனை செய்யவும் அவள் தவறவில்லை. தற்போது அவளின் பிள்ளைகள் இருவரும் கல்விப் பொதுத்தராதர சாதாரண தர பரீட்சையில் தோற்றி சித்தியும் அடைந்து விட்டனர். மாகோ தொடரூந்து நிலையத்திற்கு புதிதாக இடமாற்றம் பெற்று வந்த அதிபர் அவளின் குடும்ப விபரங்களை அறிந்து, அவளின் பிள்ளைகளுக்கு உதவி செய்ய முன்வந்தார். அவர்களால் கல்வியை மேற்கொண்டு உயர்தரம் வரை கொண்டு செல்ல, பொருளாதாரம் அவர்களுக்குப் பெரும் தடையாக இருந்தது. தங்கள் தாயார் தொடர்ந்தும் அங்காடி வியாபாரத்தில் ஈடுபடுவதை வளர்ந்த அப்பிள்ளைகள் இருவரும் விரும்பவில்லை. எப்படியும் தாம் கற்ற கல்விக்கேற்ப கிடைக்கும் தொழிலைப் புரிந்து தாயாரைக் காப்பாற்றுவதே அவர்களின் பிரதான நோக்கமாக இருந்தது.

**. . . நாட்டு நடப்பு. . .**


ஆனால் தாயாரோ அந்த நோக்கத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. அவளின் நோக்கம் அதற்கு முரணாக இருந்தது. அதாவது தம் இரு பிள்ளைகளையும் கற்பித்து, நல்லதொரு உயர்தர அரச உத்தியோகத்தில் அமர வைப்பதே, அந்த நோக்கம். மேலும் வித்தியாசமான இரு நோக்கங்களினால் எங்கே தனது பிள்ளைகள் தன்னை விட்டு பிரிந்து விடுவார்களோ என்ற அச்சத்தின் காரணமாக அவள் தனது நோக்கத்தை கைவிட்டிருந்தாள். அவளின் நல்ல மனதிற்கு மாகோ தொடரூந்து நிலைய அதிபரின் உதவியால் தொடரூந்து திணைக்களத்தில் அவளின் பிள்ளைகள் இருவருக்கும் லிகிதர் நியமனங்கள் கிடைத்தன. மூத்த மகன் மாகோ தொடரூந்து நிலையத்திலும், இளைய மகன் கல்லோயா தொடரூந்து நிலையத்திலும் கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்டனர். அதைத் தொடர்ந்து தாயாரின் வடைக்கூடைக்கும் ஓய்வு கிடைத்தது. அரச, தனியார் ஊழியர்கள் ஓய்வு பெறுவது போல் அவளும் ஓய்வு பெற்ற அங்காடி வியாபாரியானாள். மூத்த மகனின் உதவியால் அவர்கள் இவ்வளவு காலமும் வாடகைக்கு இருந்து வந்த அந்த வீட்டை



விலைகொடுத்து வேண்டி தங்களுக்கு உரித்தாக்கிக் கொண்டனர். மேலும் அம்மாவை சந்தோசமாக வாழ வைப்பதே அந்த இரு பிள்ளைகளின் நீண்ட கால கனவான இருந்தது. "தாயைப் போல பிள்ளை நூலைப்போல சேலை" என்று அந்தக்காலத்தில் பெரியவர்கள் அலசி ஆராயாமலா கூறி இருக்கின்றார்கள்?

எதற்கும் அவர்கள் அந்த தொடரூந்து அதிபரை என்றுமே மறந்ததில்லை. அவருக்கும் சேவையில் இருந்து ஓய்வு பெறும் நாள் நெருங்கி விட்டது. சேவை நீடிப்புக்காக பல உயர் அதிகாரிகளின் பரிந்துரைகள் பயனற்றுப் போனதால், அவர் குறித்த தினத்தில் ஓய்வு பெற வேண்டி இருந்தது. அங்கு இடம்பெற்ற பாரிய பிரியாவிடை வைபவத்தையடுத்து, அவர் தனது சொந்த ஊரான ஹிங்குராங்கொட பிரதேசத்திற்கு நிரந்தரமாகவே சென்று விட்டார். அவருக்கு இப்பொழுது பாரிய குடும்பப் பொறுப்புக்கள் சுமத்தப்பட்டுள்ளன. அதாவது திருமணாகாத தனது இரு பெண் பிள்ளைகளுக்கு நல்ல வரன்களைத் தேடுவதே. அவை தொடர்பாக பல முயற்சிகளை எடுத்தும் அவை இதுவரை நிறைவேறாததையிட்டு அவர் கவலை கொண்டிருந்தார். அவரின் இரு பிள்ளைகளுக்கும் தேவையான சொத்துக்களை அவர் தனது வாழ்நாளில் சேகரித்து வைத்திருந்தும், நல்ல வரன்கள் கிடைக்காதமை அவரை மேலும் மேலும் கவலை கொள்ளச் செய்தது. அச் செய்தி எப்படியோ ஓய்வு பெற்ற அந்த அங்காடி வடை வியாபாரியான அவளின் காதிற்கு கிட்டியது. எப்படியும் 'தான் கஷ்டப்பட்ட காலத்தில் எவ்வித தராதரமும் பாராது, தனது இரு பிள்ளைகளுக்கும் உத்தியோகம் பெற்றுக் கொடுத்தமையை அவள் மாத்திரமல்ல, அவளின் இரு பிள்ளைகளும் என்றுமே மறக்கவில்லை. அவ்விதம் அதை மறக்கவும் அவர்கள் முயற்சிக்கவுமில்லை. என்றொரு நாள் அந்த நன்றிக் கடனை தீர்க்க வேண்டுமென அந்த ஏழைக் குடும்பத்தவர்கள் மனதில் நிரந்தரமான எண்ணங்கள் இருந்து வந்தன.

'சாப்பிடும் வரை அது வாழை இலை. சாப்பிட்ட பின் அது எச்சி இலை' என்பதற்கு ஒப்பாக இன்றைய சமுதாயத்தில் பலர் நடந்து வருவதை நாம் அறியாமலல்ல. சிலர் தாம் யாரிடமாவது ஒரு உதவியைப் பெற்று அதைப் பிரதி உதவியாகச் செய்யும் வரை அவர்களுக்கு சரியான தூக்கமே வராது. ஆனால் சிலர் அப்படியல்ல. சாப்பிட்ட பீங்கானில் கை கழுவி வந்தவுடன், செய்த நன்றியை அடியோடு மறந்து விடுவது மாத்திரமல்ல, உதவி செய்தவரின் முகத்தைக் கூட அடியோடு மறந்து விடுவார்கள். அவ்விதமான மானிட ஜென்மங்கள் எம் மத்தியில் இல்லாமலில்லை.



ஆனால் அந்தப் பெண், ஓய்வு பெற்ற தொடரூந்த நிலையை அதிபரின் கவலையை, தனது இரு பிள்ளைகளும் எடுத்துக் கூறினாள். தாயின் எண்ணத்திற்கு அவர்கள் எந்தவித மறு பேச்சுமின்றி உடன்பட்டதையடுத்து, அவள் அந்த அதிபருக்குச் சம்பந்தியானாள். ஒரே நாளில் ஒரே மேடையில் இரு ஜோடிகளுக்கும் திருமணங்கள் இனிதே நியைவேறின. சமூக, தராதரங்கள் அங்கே தவிடுபொடியானதையும் கூறாமல் இருக்க முடியுமா என்ன?

முற்றும்!!

**பாலையூற்றான்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துரோகம்

**சிறுகதை**
பாகம் - 02

சுதீப்பின் நிலையை அறிந்து அஸ்வினுக்கு கவலையாக இருந்தது. அவனது நண்பர்களான பிரவீணா, கணேஷ், அஸ்வின் மூவரும் சுதீப்பை விட்டு பிரிந்து இருந்ததே இல்லை. இதனால் அவர்களுக்கு ஒரே கவலை. ப்ரியாவும் இப்போது அவர்களுடன் சேர்வது குறைவு இவற்றுக்கு எல்லாம் காரணம் தெரியாமல் சுதீப்பை சந்தித்து ஒரு முடிவுக்கு வர வேண்டும் என்று முடிவு செய்தார்கள்.

சுதீப்பை சந்திக்க அவனின் வீட்டுக்குச் சென்றனர். சுதீப் என்று குரல் கொடுக்க வாங்கடா… என்றான் உள்ளிருந்தவாறே. என்னடா?.. என்னாச்சு?.. என்றாள் பிரவீணா. என்னடா எதுவும் பேசாமல் இருக்கிறாய்…. என்ன பிரச்சினைடா உனக்கு? என்றான் அஸ்வின். நீதாண்டா பிரச்சினை.. என்று ஓ..வென்று அழுதான் சுதீப். என்னடா.. என்ன சொல்லுறாடா?... இவன் என்ன செய்தான்… என்றாள் பிரவீணா. பிரவீணா நான் நிர்த்தனாவை உயிருக்கு உயிராக காதலிச்சேன்.. ஆனால் அவள் இவனைத்தான் காதலிக்கிறாளாம் இவனும் அவளைக் காதலிக்கிறானாம்.. என்றான் அழுகையுடன். டேய் சுதீப்! நீயும் நிர்த்தனாவைக் காதலிக்கின்றாயா? எனக்கு தெரியாதுடா?.. நிர்த்தனாதான்டா என்னிட்ட Love பண்றன் என்று ப்ரியாட்ட சொல்லி விருப்பம் கேட்டவள். அதன் பிறகுதான் நானும் காதலித்தேன் நீ… நிரத்தனாவை விரும்புறதை என்னிடம் சொல்லவே இல்லையே… நான் என்னடா பன்றது என்றான். நான் ப்ரியாட்டத்தான் நிர்த்தனாவை love பன்ற விடயத்தை சொல்லி உதவி செய்ய சொன்னன். அவள்தான் உங்கட காதல் பற்றி சொன்னவள். ப்ரியாவிடமா?.. ப்ரியா இது பற்றி எதுவும் சொல்லவே இல்லையே… ஆகட்டும் ப்ரியாவைப் பார்த்து பேசுவோம் என்று அனைவரும் சுதீப்பை இழுத்துக் கொண்டு சென்றார்கள்.



கம்பஸ் வந்து ப்ரியாவைத் தேடிய போது நிர்த்தனா எதிரே வந்து கொண்டிருந்தாள் ஏய்! நில்லு…உன்ட மனசில பெரிய அழகி என்ற நினைப்பா?... எல்லோரையும் அலையவிடுறாய்… என்றான் அஸ்வின். நான் யாரை அலைய விட்டன் நீங்கதான் என்ன விரும்புறதா கடிதம் எல்லாம் ப்ரியாட்ட கொடுத்திருந்தீங்க. அதைப் பிரிச்சுக் கூட நான் பார்க்கல்ல.. நானா…? நீதானே என்னிட்ட விருப்பம் கேட்டு கடிதம் கொடுத்து அனுப்பினாய்… என்றான் கோபமாக…. யார்? ப்ரியாவிடம் விருப்பம் கேட்கச் சொன்னது நானா? நீயா…? நான் சுதீப்பை விரும்புவதாகச் சொல்லி சுதீப்பிடம்தான் விருப்பம் கேட்கச் சொன்னேன் உன்னிடமில்லை என்றாள் நிர்த்தனா… எல்லோருக்கும் ஒரே ஆச்சரியம்.. என்ன சொல்லுற நீ? என்றான் அஸ்வின் கோபத்துடன் "ஆமா" நான் சுதீப்பை உயிருக்குயிராக காதலித்தேன். ப்ரியாவிடம் சொல்லி என் காதலை சுதீப்பிடம் சொல்லச் சொன்னேன் ஆனால் சதீப் ப்ரியாவைக் காதலிப்பதாகவும், நீ என்னைக் காதலிப்பதாகவும் சொன்னாள் என்று கூறி முடித்தாள். எல்லோருக்கும் ஒரே குழப்பம் "நீ எனக்கு காதல் கடிதம் கொடுத்து அனுப்பினாயே ப்ரியாவிடம்" என்றான் அஸ்வின். நான் ப்ரியாவிடம் எந்தக் கடிதமும் தரவில்லை என்றாள் கண்ணீருடன். கணேஷ் நீ போய் ப்ரியாவை கூட்டீவா.. யார் பொய் சொல்லுறா என்று தெரிஞ்சிக்கலாம் என்றான் அஸ்வின். கணேஷ் ப்ரியாவைக் கூப்பிடச் சென்றான். சுதீப்புக்கு மனசு பூராகவும் ஒரே சந்தோசம்… நிஜமாக நீங்கள் என்னை விரும்புறீங்களா? நிர்த்தனா… என்று ஆவலுடன் கேட்கும் போது ப்ரியா, கணேஷ் இருவரும் வந்தார்கள் ப்ரியா என்ன நடக்குது….? நிர்த்தனா என்னவோ சொல்லுறாள்… உண்மையை நீயாவது சொல்…..



நிர்த்தனா என்னை விரும்புவதாக நீ தானே சொன்ன நீ…. அவள் என்னடா என்றாள் சுதீப்பை விரும்புவதாகவும் நான் தான் அவள் பின்னால சுத்தி திரிந்து விருப்பம் கேட்டதாகவும் சொல்லுறாள். என்ன நடந்தது. ப்ரியா எதுவும் பேசாமல் மௌனமாக நின்றாள். நிர்த்தனாவும் என்ன ப்ரியா? என்ன பேசாமல் நிக்கிறாய்… நான் அஸ்வினிடம் எப்போது விருப்பம் கேட்கச் சொன்னேன்… என்ன இது புதுக் கதையாக இருக்கிறது?.. என்னாச்சு எதுவும் பேசாமல் ஏன் நிக்கிறாய்? ஏதாவது பேசுடி… என்றாள். எல்லோரும் ப்ரியாவை சொல்லடி… சொல்லடி… என்று அதட்டவும்… 'ஆமாம் நான் சொன்னது எல்லாமே பொய் என்றாள் கர்வமாக… எல்லோரும் அதிர்ச்சியால் உறைந்துபோய் நின்றனர். நான் சுதீப்பை உயிருக்குயிராய் விரும்பினேன்… ஆனால் சுதீப் நிர்த்தனாவை விரும்பினான். நிர்த்தனாவும் சுதீப்பை விரும்பினாள் என்னால் அதனைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. என்ன செய்வதென்று யோசித்த போது அவர்கள் இருவரும் காதலைப் பரிமாறுவதற்கு என்னிடம் உதவி கேட்டார்கள். எனக்கு அது வாய்ப்பாக அமைந்தது அதனைப் பயன்படுத்தி சுதீப்பிற்கு நிர்த்தனா மீது வெறுப்பும் என் மீது பாசமும் வருவதற்காக நிர்த்தனா அஸ்வினை விரும்பவதாக பொய் சொன்னேன். அஸ்வினுக்கு நிர்த்தனா எழுதுவது போன்று நானே கடிதம் எழுதிக் கொடுத்தேன். அஸ்வின் நிர்த்தனாவைக் காதலித்தால் சுதீப் எனக்கு கிடைப்பான் என்று நம்பித்தான் இவ்வளவும் செய்தன் என்றாள்.

எல்லோரும் ப்ரியாவை ஆச்சரியத்துடன் பார்த்தார்கள். நீயெல்லாம் ஒரு நல்ல நண்பியாடி…? என்று நிர்த்தனா கத்தினாள். எவ்வளவு பெரிய துரோகம் பண்ணிவிட்டாய் நீ சுதீப்பை காதலிப்பதாக சொல்லியிருந்தால் நானே விட்டுக் கொடுத்திருப்பனே சீ… என்றாள். நீ நம்ம நட்புக்கே ஒரு கலங்கத்தை ஏற்படுத்தி விட்டாய் ப்ரியா… நான் நல்ல நண்பியாகத்தான் உன்னை நினைத்தேன்.. நான் எப்படி உன்னை விரும்புவன்.. என்றான் சுதீப். உன்னை என் சொந்தம் என்று சொல்லவே வெட்கமாக இருக்கு. எனக்கு இப்படி ஒரு துரோகத்தைப் பண்ணிட்டியே.. என்றான் அஸ்வின். இனி உனக்கும் எங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை ப்ரியா… என்று கூறியவாறே சுதீப் நிர்த்தனா இருவரையும் ஒன்று சேர்த்த சந்தோசத்தில் சென்றார்கள். தங்களின் நண்பர்களாக இருந்தும் ப்ரியா இப்படி ஒரு துரோகத்தைச் செய்து விட்டாளே என்ற வருத்தம் இருந்து கொண்டே இருந்தது. ப்ரியா தன் நண்பர்களுக்குச் செய்த துரோகத்தினால் தன் நல்ல நண்பர்களை இழந்தவளாய் கண்ணீருடன் நிலைகுலைந்து நின்றாள்.



முற்றும்---

**மிதிலா ஜெயமோகன்**
முனைத்தீவு, மட்டக்களப்பு.

# எங்கே நிம்மதி??

**சிறுகதை**
பாகம் - 01

ஊரின் கோடியில் முருகன் கோயில். கோவிலை ஒட்டி ஒரு அரச மரம். மரத்தை சுற்றி கல் மேடை. மேடைக்கு கொஞ்ச தூரத்தில் குளம்.

சில நாளாக அந்த அரச மரத்து நிழலில், மேடையில் ஒரு பெரியவர். எதையோ இழந்தது போல் தோற்றம். கொஞ்சம் வெறித்த பார்வை. வெள்ளை வேட்டி, வெள்ளை ஜிப்பா, வெள்ளை தாடி, நெற்றியில் திருநீறு, நடுவில் சந்தனம்.

நல்ல படித்த களை. பண்பட்ட நடை, தேவைப் பட்டால் மட்டுமே பேசினார். யாரிடமும் அவர் எதையும் எதிர்பார்க்கவில்லை. நிறைய நேரம் அமைதியாக, அரச மரத்தடியில் அமர்ந்திருந்தார். பார்ப்பவர்களுக்கு அவர் ஏதோ தியானத்தில் இருப்பது போல் தோன்றியது. கோவிலுக்கு பக்கத்தில் ஒரு ஒட்டு வீடு, அவரது பூர்விக சொத்து. அதில் தங்கியிருந்தார்.

மெதுமெதுவாக, கோவிலுக்கு வரும் மக்கள் அவரை நெருங்க ஆரம்பித்தனர். அவரை கும்பிட ஆரம்பித்தனர். மெதுவாக, அவரும் பாகுபாடின்றி ஆசி வழங்க ஆரம்பித்தார். அதை அருள் வாக்கு என மக்கள் நினைத்தனர். மனம் சாந்தி அடைகிறது என நம்பினர். ஒரு மாதம் கழிந்தது. மக்கள் அவரை தேடி அவரது வீட்டிற்கே வர ஆரம்பித்தனர். தேசிகன், அது அவரது பெயர்.

ஒரு நாள், மாலை 6 மணி தேசிகன் வீட்டு வாசலில் அரவம் தேசிகனை பார்க்க ஒரு நான்கு ஐந்து பேர். தேசிகன் அவர்களை வரவேற்று, திண்ணையில் அமர்ந்தார்.

முதலில் ஒரு இளைஞன், பதினெட்டு வயது கூட இருக்காது. அவரது காலில் விழுந்தான். வணங்கினான். "சாமி!. எனக்கு வாழ்க்கையே பிடிக்கலை. தற்கொலை பண்ணிக்கலாம் போல இருக்குது. உங்களை பாக்க சொல்லி என் அம்மா தான் அனுப்பிச்சாங்க."

"ஏம்பா! பாக்க நல்லா இருக்கியே! உனக்கு என்ன குறை?"

"எனக்கு படிப்பு வரல்லை சாமி. எவ்வளவு படித்தும் மூளையில் ஏற மாட்டேங்கிறது. பிளஸ் டூ கூட தேற முடியலை.. என் அண்ணன் அக்கா எல்லாரும் பெரிய படிப்பு. குடும்பத்தில் என்னால் ரொம்ப அவமானம்"- கலங்கினான் இளைஞன். "நாம இதை பற்றி அப்புறம் பேசுவோம். இங்கேயே .கொஞ்சம் ஓரமாக உட்கார்ந்து கொள்."

அடுத்தவன் வந்தான். சற்றேறக்குறைய 25 வயதிருக்கும். அவர் காலில் விழுந்தான். "சாமி!. எனக்கும் வாழ்க்கையே பிடிக்கலை. வெறுப்பாயிருக்கு. தற்கொலை கூட பண்ணிக்கலாம் போல இருக்குது".

"அட கடவுளே ! அப்படி உனக்கு என்ன குறை?"

"எனக்கு படிப்பு நல்லா வந்தது. நல்லா மார்க் வாங்கினேன். ஆனால் என்ன பிரயோஜனம்? என்னோட படிப்புக்கேத்த வேலை கிடைக்கலை. என் தம்பி, அண்ணா , நண்பர்கள் எல்லாரும் நல்ல வேலைலே இருக்காங்க. என்னை எல்லாரும் கேலி பண்றாங்க. ரொம்ப அவமானமாக இருக்கு" கலங்கினான்.

"சரி! சரி! விசனப்படாதே! இங்கேயே உட்கார்ந்து கொள்"

மூன்றாமவன் வந்தான். வாராத தலை, கசங்கிய உடை, மண்டிய தாடி, காதல் தோல்வி கண்ட அந்த காலத்து ஜெமினி கணேசன் போல். ஒரு 30-35 வயதிருக்கும். தேசிகர் கேட்டார்: "உனக்கும் வாழ்க்கையே பிடிக்கலை. வெறுப்பாயிருக்கா? உன்னோட பிரச்னை என்ன?"

"ஆமா ஐயா!. நான் நல்லா படிச்சேன். நல்ல வேலை கிடைச்சுது. நல்ல சம்பளம். வேலை செய்யற இடத்திலேயே ஒரு அழகான பெண்ணை நேசித்தேன். ஆனால் அவள் என்னை வேண்டாமென்று ஒதுக்கிவிட்டு எனது நண்பனை கல்யாணம் பண்ணிகிட்டாள். நண்பர்களிடையே, அலுவலகத்திலே ரொம்ப அவமானம். என் கிட்டே என்ன குறை கண்டாள்? ஒரு மாதமாக வீட்டிலேயே அடைந்து கிடக்கிறேன். எதுவுமே பிடிக்கவில்லை".

"அடடா ! பாவமே! நாம இதை பற்றி அப்புறம் பேசுவோம். இங்கேயே உட்கார்"

நான்காவது வந்தவள் ஒரு யுவதி. ஏறத்தாழ 35 வயது. நன்கு படித்து, நல்ல வேலையில் சேர்ந்து, திருமணமும் செய்து கொண்டவள். ஆனால், இப்போது கணவனுடன் இல்லை. அவன் வேறு பெண்ணுடன். அவனுக்கு இவளது அழகில் மனம் லயிக்கவில்லையாம் இப்போது. தற்கொலைக்கு முயற்சித்தாள். ஆனால் உயிரை மாய்த்துக்கொள்ள முடியவில்லை. அழுதாள்.

தேசிகன் அவளையும் உட்கார சொன்னார்.

அவர் என்ன சொல்லப் போகிறார் என கேட்க இந்த நால்வரும் மற்றும் கூடியிருந்தவரும் ஆவலாக அவரையே பார்த்து கொண்டிருந்தார்கள். அவர் சொன்னார்: "உண்மையை சொல்லப் போனால் உங்கள் நால்வருடைய விரக்தி நிலையில்தான் நானும் இருக்கிறேன். எனக்கும் ரொம்ப துக்கம். ஆச்சரியப்பட வேண்டாம். நான் இந்த ஊருக்கு வந்ததே எனது வேதனையை மறக்கத்தான்"

சுற்றியிருந்தவர்களுக்கு உண்மையிலேயே ஆச்சரியம் தான்.

தேசிகன் தொடர்ந்தார்: "உங்களுக்கு தெரிந்திருக்கும், நான் பல பெரிய பதவிகளில் இருந்தவன். அரசாங்க பணி, நிறைய ஆள் பலம், வாகனம், பெரிய வீடு, வசதி, விருந்து என இருந்தவன். எனது அதிகாரம் எங்கும் பறந்தது.

எல்லாம் நான் வேலையிலிருக்கும் வரை தான். ஓய்வு பெற்ற பின் எல்லாம் போயிற்று. இப்போ என்னிடம் பதவி இல்லை, அதிகாரம் இல்லை. வேலையிலிருக்கும் வரை, நான் இட்ட வேலையை தலையால் செய்தார்கள். ஓய்வு பெற்றபிறகு சொன்ன பேச்சு கேட்க ஆள் இல்லை. சொன்னால் நம்ப மாட்டீர்கள், காசு பணம் இருந்தென்ன, இன்று நான் தனி மரம். அன்பு செலுத்த ஆளில்லை.

நான் பணியிலிருந்து ஓய்வு பெற்ற பிறகு, என் மகன் இன்று சுத்தமாக என்னை மதிப்பதில்லை. மருமகளும் உதாசீனப் படுத்துகிறாள். இருவரும் என்னை விட நல்ல வேலையிலிருக்கிறார்கள். நான் சொன்ன பேச்சு கேட்பதில்லை. எனது மனைவியும் இப்போது உயிருடன் இல்லை. அந்த ஆறுதலும் இல்லை. மகனுடன் இருக்க பிடிக்காமல் இங்கே வந்து விட்டேன். எனக்கும் வாழ்க்கையே பிடிக்கலை வெறுப்பாயிருக்கு.

இப்போ, சொல்லுங்கள் , நானும் தற்கொலை பண்ணிக்கவா?" நிறுத்தினார். "என் பிரச்சனை தீர்ந்து விடும். பண்ணிக்கவா?." கூடி இருந்தவர் ஒன்றும் பேசவில்லை. தங்கள் தங்கள் மனக் கவலைகளை மனத்திரையில் ஓடவிட்டனர். யாரும் நிம்மதியாக இருப்பதாக தோன்றவில்லை.

தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவி முரசு

## இவ்வார இலக்கிய நிகழ்வு

### "நிலாவெளி - வரலாறும் பண்பாடும்"

இவ்வாரம் திருகோணமலையில் மேற்போந்த தலைப்பில் எழுதப்பட்டுள்ள புத்தகம் வெளியிடப்படவுள்ளது.

காலம் : 15.03.2014
நேரம்: காலை10.30 மணி
இடம்: பல்நோக்கு மண்டபம் - நிலாவெளி

இந் நிகழ்வில்
அறிமுக உரையினை க. தம்பிஜயா
ஆய்வுரையினை - வி.கௌரிபாலன்
ஏற்புரையினை - க.கெஜரத்தினம்
நன்றியுரையினை- கெ.சி மயூரன்
நிகழ்த்தவுள்ளனர்.

இந்நிகழ்வானது "அகவை நூறு காணும் பெரியையா க.கெஜரத்தினம் தின்" புத்தக வெளியீடு ஆகும்.

## முத்தமிட்ட முகத்தழகி

வேர்வை சிந்தி வேலை செய்து
சோர்வினால் தான் அயர்ந்து
சோபை கொண்டு கண்ணயர
சேய்வில் இராகம் பாடிய
ஓசை ஒன்று கேட்டதுவே - என்
முன்னறிவித்தல் தானின்றி
முத்தங்களை பொழிகின்றாள்
மூர்ச்சித்து நான் போனேன்
முத்தமிட்ட முகத்தழகி -
என்றிருந்தேன்
மூச்சதனை எடுக்கவந்த
மூளையற்ற சிறு நுளம்பு

அன்புவழியூர் ச. திருச்செந்தூரன்
திருகோணமலை

உங்களது கவிதைகளும் இடம் பெற வேண்டுமா?
கவிதைகளை, விரும்பினால் உங்களது படங்களுடன் அனுப்பி வையுங்கள்..
கவிமுரசு. இல. 159 ஏ.
கடல்முக வீதி.
திருகோணமலை.

கிழக்கில் நடைபெறும் இலக்கியச் செயற்பாடுகளை மக்களுக்குத் தெரியப்படுத்த எழுதுங்கள் -
கவிமுரசு. இல. 159 ஏ.
கடல்முக வீதி.
திருகோணமலை.

## புலப்படாதது நட்பு...

அலைகள் ஓய்வதில்லை
அன்பு மறைவதில்லை
ஆழம் தெரிவதில்லை
அவை போல்
புலப்படாதது நட்பு

பழகி வந்த முகம் பாதியிலே
மறைந்தாலும்
எழுதி வைத்த ஓவியம் போல
என்றும் என் மனதினில்
நீயிருப்பாய்

இணைவதும் பிரிவதும்
இயற்கை நியதி
பிரிவோம் சந்திப்போம்
பிரிவில் சிந்திப்போம்
ஒருவரையொருவர்
சிந்தித்த படியே
சந்திப்போம்

சங்கரி
திருகோணமலை

## ஒன்றுண்டாம்......

பன்னூறாயிரம் தமிழ்நூல் உண்டடா.
படிப்பதற் கொன்றுண்டாம்!
நன்னூல் ஒரு சில உண்டென்னாளுமே
நாடிட ஒன்றுண்டாம்!

ஒன்றே படி.படி. ஆயிரம் முந்நூ(று)
ஒரு முப்பது பாட்டே!
நன்றே படிபடி. நம்பாவாணரின்
நல் உரையின் படியே!

இன்றேல் "மு.வ" வின் இன்னுரை
தன்னையே
ஏற்றுமே படி படியே!
நின்றிடுவாய் அறிவுச்சியில் பிறகெனில்
நீ யொரு தமிழ் அறிஞன்!

போய்யுரையன்றிது. போய்த்திற குறளினை.
புதைபொருள் பல காண்பாய்!
மெய்யுரையென்று விளங்கும். அறம்- பொருள்
மீதியையும் படியே!

தாமரைத்தீவான்
ஈச்சந்தீவு – கிண்ணியா

# பெண் நிழலில் வாழ்ந்து போ...

- அருள் எழிலன்- (arulezhilan.com)

நடந்த மூன்று வருடங்களாக எழுத நினைத்த கட்டுரை இந்த நிமிடம் வரை கைகூடி வரவில்லை. இது தொடர்பான ஏராளமான ஆவணங்களும் நூல்களையும் தேடித் தேடி வாங்கியதோடு வாசித்து பிரமித்துப் போயிருந்தாலும் கூட அதை குறிப்பெடுத்து இந்த நூலில் இது உள்ளது என்று என்னால் எழுத முடியாமல் போன நிலையில் நினைவில் உள்ளதை வைத்து மட்டும் எழுதுகிறேன். அரிதினும் அரிதாகவே வாழ்த்துகிறவன் நான். பெண்கள் தினத்திற்கும் கூட. வெறும் சம்பிரதாயமாக வாழ்த்தும் நான் . ஒரு ஆணாதிக்கவாதியாகவே வாழ்கிறேன் என் மனைவி. மகளிடமும். பெண் நண்பர்களிடமும். இந்த குற்ற உணர்ச்சியோடு ஆணாதிக்கத்தை நடைமுறை வாழ்வில் பழக்கப்படுத்திக் கொண்ட ஒரு ஆணாகவே நான் வாழ்கிறேன் என்பதை ஒத்துக் கொண்டுதான் ஆக வேண்டும்.

வரலாற்றின் பக்கங்களில் வடிந்து கொண்டிருக்கும் ரத்தம். இன்றும் தொடரும் நிலையில் பெண்கள் எப்போது தங்களின் எதிர்ப்பைத் துவங்கியிருக்க வேண்டும். எல்லா பகுதிகளிலும் விசும்பலும். கேவலும். கண்ணீரும் பெண்ணுக்கே சொந்தமாகி அவள் தன்னை அழித்துக் கொள்ளவோ அல்லது எதிர்ப்பில் ஈடுபடவோ இயக்க நடவடிக்கையில் ஈடுபடவோ துவங்கியிருக்கலாம். ஆனால் தமிழகத்தால் கண்டு கொள்ளப்படாத ஒரு வரலாறு குமரி மாவட்ட பெண்களின் வரலாறு. அது அப்போது திருவிதாங்கூர் சமஸ்தானின் ஆளுகையில் இருந்தது. பரசுராமனால் நம்பூதிரிகளுக்கு நேரடியாக கையளிக்கப்பட்ட நிலம் (கடவுளின் தேசம்) என்று மிகச் சிறிய பிரிவினரால் நம்பிக்கையாக உருவாக்கப்பட்டு இன்று பெரும்பான்மை மக்களின் நம்பிக்கையாக மாறி விட்ட திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் 1[illegible] அடிமைசாதிகள். இந்தியாவில் வேறு எந்த பகுதியிலும் இல்லாதவாறு. சாதியும் அதன் கொடூர தண்டனைகளையும் அனுபவித்தவர்கள் திருவிதாங்கூர் சமஸ்தான மக்கள். பலரும் திருவிதாங்கூரில் ஏதோ நாடார் இனப் பெண்கள் மட்டுமே மேலாடை அணியும் உரிமை மறுக்கப்பட்டு வாழ்ந்தது போல எழுதுவார்கள் அது உண்மையல்ல அந்த உரிமை 1150 சாதிகளுக்கு மறுக்கப்பட்டிருந்தது. அடிமை வணிகத்தில் கொடிகட்டிப் பறந்த திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் சர்வாதிகாரம் ஒவ்வொரு சாதிக்கும் அதனதன் அந்தஸ்திற்கு ஏற்ற மாதிரி சட்டங்களை வகுத்தது.

சமஸ்தானத்தின் ஆட்சியின் கொடூரங்கள் உண்மையில் நாயர் இன பெண்கள் மீதுதான் முதன் முதலாக ஏவப்படுகிறது. நம்பூதியிரிகளின் பாலியல் தேவைகளுக்காக அவர்கள் நாயர் இனப்பெண்களை அடிமையாக்கியிருந்தார்கள். ஒரு நாயர் இனப்பெண்ணின் மீதான முதல் உரிமை நம்பூதிரிக்கே. இதனால் தாய் என்று தெரிந்த தகப்பன் யார் என்றே தெரியாத ஏராளமான குழந்தைகள் திருவிதாங்கூரில் இருந்தார்கள். ஒடுக்கப்பட்ட அந்த நாயர் இனப்பெண்கள் நம்பூதிரிகள் நடந்து வரும் போது திறந்த மார்போடு நிற்க வேண்டும். இதில் பல்வேறு வகைப்பட்ட மாதிரிகள் இருந்தன. இதெல்லாம் விரிவாக எழுத வேண்டும். ஆனால் இந்த இழி நிலை "மருமக்கள் தாயம்' என்ற பெண் வழித் தலைமையேற்ற குடும்ப அமைப்பை நமக்கு வழங்கியது. பெரும்பாலும் இடதுசாரிகளும் பொன்னீலன் போன்ற நமது எழுத்தாளர்களும் கூட இதை முற்போக்கான அம்சம் என்று கருதினார்கள். இது பற்றி விரிவாக வாசித்த போது இந்த அமைப்பின் பண்பில் சில முற்போக்கான கூறுகள் இருக்கிறதே தவிற மருமக்கள் தாயம் உருவானது மிகக் கொடூரமான பாலியல் சித்திரவதையிலிருந்து துவங்கியதாகும்.

நாடார்கள். முக்குவர்கள். வேளாளர். ஈழவர் உள்ளிட்ட பல சமூகங்களில் மருமக்கள் தாயம் உள்ளது. ஆனால் இவர்கள் மிகச்



சிறிய பிரிவினர். அதிசயிக்கதக்க வகையில் மீனவச் சமூகமான முக்குவர்கள் மருமக்கள் தாய முறையை பின்பற்றியவர்கள். இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் வாழும் முக்குவர்களிடையே " ஆண் நிழலில் நின்று போ. பெண் நிழலில் இருந்து போ' என்ற சொலவடை உள்ளது. (இப்போது இருக்கிறதா எனத் தெரியவில்லை.) . பிற சமூகங்களிலும் மருமக்கள் தாய முறை இருந்தாலும் மீனவச் சமூகங்களிடையே எஞ்சியிருப்பது போல வேறு எவரிடமும் இல்லை. நிற்க.

குமரி மாவட்டத்தில் ஒரு பேச்சு மொழி உண்டு. "அவன ஒடப்புல போட்டு மூடுல' என்று சாதாரணமாகச் சொல்வார்கள். அதாவது இந்த வழக்கு கொடூரமான திருவிதாங்கூர் சமஸ்தான ஆட்சியில் இருந்து உருவானதாக குமரி எழுத்தாளர் ஒருவர் எழுதி வாசித்தேன். அதாவது விதித்த வரியை கொடுக்க முடியாதவனை ஒடப்பில் போட்டு மூடுவார்கள். அது அப்போதைய தண்டனை முறை. ஒடப்பு என்பது சின்ன நீரோடை அதாவது. தோப்புக்கு தண்ணீர் பாய்ச்ச சின்ன கால்வாய் மாதிரி வெட்டுவார்கள். அதை 'ஒடப்பு' என்று வட்டார வழக்கில் சொல்வார்கள். முடிக்குவரி. சீலைக்கு வரி. என்றுதான் வாசித்திருக்கிறோம். அதன் தண்டனை முறைகளை வாசிக்கும் போது கொடூரமாக இருக்கிறது. வயலில் உழும் ஏர்கலப்பையில் பெண்ணின் தலைமுடியைக் கட்டி அப்படியே உழுது விடுவார்கள். அவள் சாகும் வரை நிலத்தில் உழுவார்கள். ஒரு கர்ப்பிணி பெண் இப்படி கலப்பையில் உழுது கொல்லப்பட்ட வரலாற்று நிகழ்வை ஜாய் ஞானதாசன் மிக அருமையாக சித்தரித்திருப்பார். இத்துதான் வாழ்வு. இதுதான் தலையெழுத்து என்று இருந்ததை மாற்றியவர்கள் நாடார் இனப் பெண்கள். தங்களிடம் வரிவாங்க வந்தவர்களுக்கு எதிராக அவர்கள் போராடினார்கள். திங்கள்சந்தை. பாறசாலை. போன்ற இடங்களில் சில இடங்களில் பெயரெ அதாவது நான் நினைக்கிறேன் முலையறுத்தான் சந்தை என்ற ஒன்று இந்தப் பகுதியில் உள்ளது. அது திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் ஒடுக்குமுறைக்கு எதிராக ஒரு பெண் தன் முலையை அறுத்தெரிந்தாள் என்பதுதான் அந்த வரலாறு. எவ்வளவு பெரிய வீரஞ்செறிந்த போராட்டம். அவர்கள் தங்களின் ஆட்சி நீடித்திருக்க ஒரு பவுர்ணமி நாளில் நாடார். முக்குவர் குழந்தைகளை பிடித்துச் சென்று சமஸ்தானத்தின் நான்கு மூலைகளிலும் பிடித்து வரப்பட்ட குழந்தைகளின் உடலில் செம்புப் பட்டயத்தை பதிந்து புதைத்தார்கள். இதுதான் திருவிதாங்கூர் நம்பூதிரிகளின் ஆட்சி முறை. அதே சமஸ்தானத்தில் அரசரின் கணக்குப் பிள்ளைகளாக இருந்த பிள்ளைமாருக்கும் சமஸ்தானத்திற்கும் எழுந்த மோதலில் பலியிடப்பட்டவர்கள் வெள்ளாள இனத்து பெண்களே. அவர்கள் பிடித்துச் செல்லப்பட்டு பொது ஏலத்தில் விடப்பட்டு அடிமைகளாக்கப்பட்டார்கள்.

நீண்ட காலமாக எதிர்ப்புகள் இருந்தாலும், சீர்திருத்தக் கிறிஸ்தவத்தின் வரவு மிகப்பெரிய சமூக மாற்றத்தை குமரி மாவட்டத்தில் உருவாக்கியது. தமிழகத்திலிருந்து குமரி மாவட்டம் வேறு பட்ட காலாச்சாரத்தைக் கொண்டிருக்க இதுவே காரணம். 16 ரும் நூற்றாண்டிலேயே போர்ச்சுக்கீசியர்கள் கடலோரங்களில் கல்லூரி. மருத்துவமனைகளை நிறுவினாலும் கூட வடுகர் படைகள் அவைகளை விட்டு வைக்கவில்லை. ஆனால் 19 ரும் நூற்றாண்டில் தாமதமாக சீர்திருத்தக் கிறிஸ்தவம் நாடார்களிடையே வந்த போதிலும் அது கணிசமான அளவு பண்பாட்டு மாற்றத்தை பெண்களிடையே உருவாக்கியது. பெண்கள் கிறிஸ்தவக் கல்லூரி. டதி மேல் நிலைப்பள்ளி போன்றவை எல்லாம் தமிழ் சமூகத்தின் பெண்கள் கண்ட முதல் கல்லூரிகள்.

விரிவாக எழுத முடியாமைக்கு வருந்துகிறேன். அன்றைக்கிருந்த முற்போக்கான அம்சங்கள் இன்று இல்லை. மிக இறுக்கமான சொத்துடமைச் சமூகமாக நாடார்கள் மாறிய பின்பு அதன் முற்போக்கு அம்சங்கள் அனைத்தையும் தொலைத்தார்கள். சீர்திருத்தக் கிறிஸ்தவம் சாதியை இறுக்கிச் சென்றதே தவிற அதை நெகிழ்வுக்குள்ளாக்க வில்லை. கத்தோலிக்கமும். சீர்திருத்தக் கிறிஸ்தவமும் அந்த வகையில் தோல்வியடைந்த சமூகங்களே. தங்களின் சுதந்திரத்திற்காக மதம் மாறிய நாடார்களிடம் இருந்து தலித்துக்கள் சுதந்திரம் கேட்டு துவங்கியதுதான் சல்வேஷன் ஆர்மி "இரட்சணிய சேனை' என்ற தனி மதம். மத மாற்றத்தை தடுக்கும் நோக்கிலும். தங்கள் சமூகத்திற்கு விடிவு வேண்டும் என்றும் ஆன்மீக வழி போராடிய வைகுண்டசாமியின் போராட்டங்கள் தேக்க நிலையை இன்று அடைந்து விட்டன.

சரி இதில் இயல்பாகவே ஒரு கேள்வி வருகிறது இந்த சாதிக் கொடுமைகள் மீனவர்களுக்கு இல்லையா? என்பதுதான் கேள்வி. பேரா. சிவசு எழுதுவார். சாதி என்னும் பரப்பிற்கு அப்பால் நிறுத்தப்பட்டவர்கள் மீனவர்கள் என்பார். அதாவது சாதி என்னும் பரப்பினுள் இருக்கும் மீனவர்கள் புவியியல் ரீதியாக கரையோரங்களில் வாழ்ந்ததால் நேரடியான சாதிக் கொடுமைகளை அனுபவிக்கவில்லை. ஆனால் அவர்களுக்கும் இந்த சாதிகளைப் போல சாஸ்திரங்களை. ஓதும் உரிமை மறுக்கப்பட்டுத்தான் இருந்தது. முக்குவர்கள். பரதவர்கள் யாரும் இதற்கு விதிவிலக்கு அல்ல. மருமக்கள் தாயத்தின் மிச்சங்கள் மீனவ மக்களிடையே குறிப்பாக முக்குவர்களிடம் எஞ்சியிருப்பது அது ஒரு சொத்துடமை சமூகம் இல்லை என்பதால்தான். தவிறவும் கடலோரங்களில் இயல்பாகவே பெண் தலைமை ஏற்கும் மரபு மீனவக் குடும்பங்களிடையே உண்டு. கடற் தொழில் பண்பாட்டு மரபு அது. இன்றைக்கு கடல் தொழிலும் நசிந்து வரும் நிலையில் இந்த பண்பாடு வேகமாக மறைந்து வருவதை நீங்கள் காண முடியும்.

காலந்தோறும் பெண் சிந்திய ரத்தங்கள்தான் ஆண் சொத்துடமைச் சமூகமாக உருவாகியிருப்பதை நாம் காண முடியும். சமூகப் பொருளாதார நிலைகள் பெண்ணைக்கும் வெளியில் சென்று உழைக்கும் நிர்பந்தத்தை உருவாக்கி விட்ட போதிலும் குடும்பம் என்னும் ஜனநாயகமற்ற சொத்துடமை அமைப்பு. காலந்தோறும் அவளை சம்பள நாள் அல்வாவோடு எதிர்பார்த்து காத்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமுரசு

## நயன் டிஷூம் பப்ளிமாஸ்



சிம்பு-ஹன்சிகா காதல் முறிவுக்கு நயன்தாராவும் ஒரு காரணம் என்று கூறப்படுகிறது.
சிம்புவுடன் நயன்தாரா நடிப்பதற்கு முன்பு வரை, ஹன்சிகாவுடன் அவரது காதல் ஆரோக்யமாகவே இருந்து வந்தது. ஆனால், எப்போது நயன்தாராவுடன் சிம்பு இணைந்து நடிக்கத் தொடங்கினாரோ அதிலிருந்து அவர்களது காதல் ஆட்டம் காணத் தொடங்கியது.
நயன்தாரா எனது தோழி, ஆனால் ஹன்சிகா எனது காதலி என்று ஸ்டேட்மெண்ட் விட்டார் சிம்பு. ஆனபோதும் காதலை முறித்துக்கொண்டார் ஹன்சிகா.
இந்த நிலையில், இப்போது எனக்கு எந்த கட்டுக்காவலும் இல்லை என்பதை மேல்தட்டு ஹீரோக்களுக்கு நேரடியாகவே தெரியப்படுத்தி புதிய படங்களில் வேகமாக கமிட்டாகி வருகிறார் ஹன்சிகா.
செகண்ட் இன்னிங்சில் இதுவரை போட்டி இல்லாத களத்தில் சுற்றி வந்த நயன்தாரா, இப்போது ஹன்சிகாவை எதிர்கொள்வது எப்படி என்பது தெரியாமல் தடுமாறிப்போய் நிற்கிறார்.

## சினிமா குறுஞ்செய்திகள்



- *பெயர் மாற்ற விரும்பாத வித்தியாபாலன்*

ஆரம்பத்தில் ராசியில்லாத நடிகையாக இருந்த வித்தியாபாலனுக்கு அவரது பெயரை மாற்றினால் ராசியான நடிகையாகி விடலாம் என இயக்குனர் அறிவுறுத்தியதால் தமிழில் நடிப்பதிலிருந்து விலகிக்கொண்டாராம்.

- *நடிகைகள் காதலிப்பது பாவச்செயல் அல்லவே - காஜல்*

நடிகைகளுக்கும் மனசு உண்டு என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும் என்று கூறியுள்ள காஜல், தான் தொழிலதிபரை காதலிக்கவில்லை என்று மறுப்பு சொல்லவில்லை.

- *ஆர்யா - நயன் மோதல்*

ஏற்கனவே அனுஷ்காவுடனான நட்பில் ஆர்யாவுடன் கொதித்துப் போயிருந்தார் நயன்தாரா. இந்நிலையில் நயன்தாராவுடன் சேர்ந்து நடித்தது எனது அதிர்ஷ்டம் என சமீபத்தில் கூறியிருக்கிறார் ஆர்யா. இதை கேட்டதும் இருந்த கோபம் இன்னும் இரட்டிப்பாகியுள்ளது நயனுக்கு.

- *இலங்கைப் பெண்ணாகும் நஸ்ரியா*

பார்த்தீபன் இயக்கும் படத்தில் இலங்கை பெண்ணாக நடிக்கிறாராம் நஸ்ரியா. இதுதவிர இன்னும் சில பிரபலங்களும் நடிப்பதாக கூறப்படுகிறது

- *மறுமணம் என பொய்த்தகவல்*

சமீபகாலமாக மல்லுவுட் இணைய தளங்களில் காவ்யா மாதவன் மறுமணம் செய்துகொண்டதாக ஒரு நபரின் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது. இதுதொடர்பாக போலீசில் புகார் செய்தார் காவ்யா. அதன்பேரில் கொச்சியை சேர்ந்த ஸ்டீபன் என்பவர் கைது செய்யப்பட்டார்.

## இரட்டை வேடத்தில் போல்



நிமிர்ந்து நில் படம் எனது கேரியரில் மிக முக்கியமான படம் என்று கூறி வருகிறார் அமலாபால். இப்படத்தின் தமிழ், தெலுங்கு என இரண்டு பதிப்புகளிலும் நடித்தது சந்தோசமாக உள்ளது.
அதற்கு முழுக்காரணம் இயக்குனர் சமுத்திரகனிதான். இனிமேல் எந்தமாதிரியான வேடங்களிலும் நடிக்க முடியும் என்கிற தைரியம் எனக்கு ஏற்பட்டுள்ளது என்று சொல்லும் அமலாபால், நிமிர்ந்து நில் படத்தில் எனது நடிப்பைப்பார்த்து தனது அடுத்த படத்திலும் என்னை நடிக்க வைக்கிறார் சமுத்திரகனி.
அதோடு, அப்படத்தில் எனக்கு இரண்டு வேடம். அதனால் இதுவரையில்லாத நடிப்பை வெளிப்படுத்தி என்னை தயார்படுத்திக்கொண்டிருக்கிறேன்.
மேலும், நிமிர்ந்து நில் படம், உன்னை நீ சரி செய்து கொள். உலகம் தானாக சரியாகி விடும் என்ற கருத்து அடிப்படையில் உருவானதைப்போன்று அடுத்த படத்திலும் சமுதாயத்துக்கு தேவையான ஒரு முக்கியமான கருத்தை படமாக்குகிறார் சமுத்திரகனி.

## மீண்டும் வருவாரா சமீரா

திருமணம் ஆன 3 மாதத்திலே மீண்டும் நடிப்பை தொடர முடிவு செய்திருக்கிறார் சமீரா ரெட்டி. 'வாரணம் ஆயிரம், 'வெடி, 'வேட்டை உள்ளிட்ட படங்களில் நடித்திருப்பவர் சமீரா ரெட்டி. இவருக்கும் மோட்டார் பைக் தயாரிக்கும் தொழில் அதிபர் அக்ஷய் வர்தேவுக்கும் கடந்த 3 மாதத்துக்கு முன் காதல் திருமணம் நடந்தது. சினிமாவிலிருந்து ஒதுங்கி இருந்து, குடும்பத்தை கவனித்துக்கொள்வேன் என சொல்லியிருந்தார் சமீரா. ஆனால் அவருக்கு மீண்டும் நடிக்க ஆசை வந்துவிட்டது.
இது பற்றி அவர் கூறும்போது, 'திருமணம் என்னை மகிழ்ச்சியில் ஆழ்த்தி இருக்கிறது. நிறைய மாற்றங்களையும் ஏற்படுத்தி இருக்கிறது. திருமணம் முடிந்த கையோடு நடிப்புக்கும் முழுக்கு போடவே எண்ணி இருந்தேன். ஆனால் மீண்டும் நடிக்கும் ஆசை துளிர்விட்டிருக்கிறது. அதற்கான நல்ல வாய்ப்பு எப்போது வரும் என்று காத்திருக்கிறேன் என்றார்.

## போலீஸிடம் உதவி - அமீர்



இந்தி நடிகர் அமீர்கான் கடந்த சில தினங்களுக்கு முன்பு மும்பை போலீசில் ஒரு புகார் கொடுத்துள்ளார். அதில், நான் தற்போது தொலைக்காட்சி ஒன்றில் சத்யமேவ ஜெயதே என்றொரு நிகழ்ச்சி நடத்தி வருகிறேன். அதில், பெண்களுக்கு இழைக்கப்படும் வன்கொடுமை, பெண் சிசு கொலை உள்பட நாட்டில் நடக்கும் பல சமூக அவலங்கள் குறித்து விவாதிக்கப்படுகிறது.
இந்த நிலையில், நான் ஒரு சமூக அமைப்பிடம் பெருந்தொகையை பெற்று அதை, மசூதி கட்டவும், முஸ்லீம் இளைஞர்களின் நலனுக்காகவும் வழங்கியதாக பேஸ்புக்கில் தவறான செய்தி பரவியுள்ளது.
அதனால் இந்த செய்தியை வெளியிட்ட நபரை கண்டுபிடித்து அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார். அமீர்கானின் இந்த புகாரை அடுத்து பேஸ்புக்கில் இந்த செய்தியை பரப்பியவரை கண்டு பிடிக்க சைபர் கிரைம் போலீசார் முடுக்கி விடப்பட்டுள்ளனர்.

## மும்பை செட்டில் ஆகினாரா??

மும்பையில் குடியேறியதால் தென்னிந்திய படங்களில் நடிக்க மறுப்பதில்லை என்றார் டாப்ஸி. ஆடுகளம், ஆரம்பம் உள்ளிட்ட தமிழ் மற்றும் தெலுங்கு படங்களில் நடித்திருப்பவர் டாப்ஸி. தென்னிந்தியாவில் வீடு எடுத்து தங்கி இருந்த இவர் திடீரென்று மும்பைக்கு குடியேறினார். இதுபற்றி அவர் கூறியதாவது: எனது குடியிருப்பை மும்பைக்கு மாற்றியதால் தென்னிந்திய படங்களில் நடிக்க மாட்டேன் என்று அர்த்தம் கிடையாது. பாலிவுட்டில் மட்டுமே எனது கவனத்தை செலுத்துகிறேன் என்பது தவறு. தென்னிந்திய படங்களில் தொடர்ந்து நடிப்பேன். தென்னிந்திய படவுலகினருக்கு என்னை நன்கு தெரியும். ஆனால் பாலிவுட்டில் என்னை பலருக்கு தெரியாது. அவர்கள் என்னைப்பற்றி தெரிந்துகொள்ளவே அங்கு சென்று தங்கினேன்.



மும்பையில் இருக்கும்போது சொந்த வீட்டில் தங்கி இருக்கும் ஒரு உணர்வு ஏற்படுகிறது. தற்போது முனி 3, வை ராஜா வை மற்றும் இந்தி படமான ரன்னிங் ஷாதி டாட் காம் ஆகிய படங்களில் நடித்து வருகிறேன். இவ்வாறு டாப்ஸி கூறினார்.

## நாளொன்றுக்கு ஒரு லட்சம்

குடும்ப பின்னணியில் உருவாகும் படம். தாத்தா நாசர், பாட்டி கவுசல்யாவை பார்க்க பேத்தியுடன் காரைக்குடி செல்கிறது ஒரு குடும்பம் அந்த குடும்பத்தில் நிகழும் சம்பவங்கள்தான் கதை. 'தெய்வத்திருமகள்' படத்தில் நடித்த பேபி சாரா பேத்தியாக நடிக்கிறார்.

ஒருநாள் விளம்பர படத்தில் நடித்தால் இந்த குழந்தைக்கு 'ரூ.2 லட்சம் சம்பளம். படத்தில் நடிக்கும்போது 1 நாளைக்கு 'ரூ. 1 லட்சம் சம்பளம். மொத்தம் 40 நாட்கள் இப்படத்தில் நடித்துள்ளார். தமிழில் நான் அறிமுகப்படுத்தியதற்காக சம்பளம் குறைக்கவில்லையா என்கிறார்கள்.

## மீண்டும் களமிறங்கும் வடிவேலு



இரண்டு ஆண்டுகள் வனவாசம் போயிருந்த வடிவேலு மறுபடியும் வந்து ஜகஜ்ஜால புஜபல தெனாலிராமன் என்ற சரித்திர காமெடி படத்தில் நடித்திருக்கிறார். தற்போது படப்பிடிப்பை முடித்து விட்டு இறுதிகட்ட பணிகளில் பிசியாகியுள்ளனர்.
இப்படத்தில் ஏற்கனவே தான் நடித்த இம்சை அரசன் 23ஆம் புலிகேசியைப்போன்று இரண்டு வேடங்களில் நடித்திருக்கிறார் வடிவேலு. படத்தை சித்திரை மாதம் வெளியிடப் போவதாகவும் அறிவித்துள்ளனர்.
இதையடுத்து, கோடை விடுமுறையில் கோச்சடையான், விஸ்வ'ரூபம்-2, நான் சிகப்பு மனிதன், மான்கராத்தே போன்ற மெகா படங்களும் திரைக்கு வருவதால், வடிவேலு படத்துக்காகவும் தியேட்டர்களை கைப்பற்றும் வேலைகள் நடக்கிறது.
ஆனால், அவர் படத்தை திரையிடயிருந்த சில தியேட்டர்காரர்களுக்கு எச்சரிக்கைகள் சென்று கொண்டிருக்கிறதாம்.

## வில்லியாக மாறும் தமன்னா



தமன்னாவுக்கு வில்லி வேடத்தில் நடிக்க ஆசை வந்துள்ளதாம். அஜீத், விஜய், தனுஷ், கார்த்தி, சூர்யா என்று கோலிவூட்டின் முன்னணி ஹீரோக்களுடன் ஜோடி சேர்ந்துவிட்டார் தமன்னா.

இடையே கோலிவூட்டில் காணாமல் போயிருந்த தமன்னாவுக்கு அஜீத்தின் வீரம் படம் ஒரு பெரிய பிரேக்காக அமைந்தது.

இதையடுத்து அம்மணிக்கு வாய்ப்புகள் வந்து குவிகிறது. இந்நிலையில் அவர் தன்னை தேடி வரும் இயக்குனர்களிடம் நல்லவளாகவே நடித்து போரடிக்கிறது.

ஏதாவது வில்லத்தனம் உள்ள கதாபாத்திரமாக இருந்தால் கூறுங்கள் நடிக்கிறேன் என்கிறாராம். முன்னதாக த்ரிஷா வில்லி கதாபாத்திரத்தில் நடிக்க ஆசையாக உள்ளது என்றார்.

இந்நிலையில் தமன்னாவுக்கும் அதே ஆசை வந்துள்ளது. என்னாச்சு இந்த ஹீரோயின்களுக்கு. இப்படி வில்லத்தனமாக யோசிக்கிறாங்களே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுப் பையன்

## அப்பிளின் புதிய வெளியீடு

கார்களில் பயன்படுத்தக்கூடிய CarPlay எனும் சாதனத்தை அறிமுகப்படுத்தவுள்ளதாக ஜெனிவாவில் இடம்பெற்ற மோட்டார் வாகனக் கண்காட்சியில் அப்பிள் நிறுவனம் அறிவித்துள்ளது.

இதன் மூலம் தொலைபேசி அழைப்புக்களை ஏற்படுத்தக்கூடியதாக இருப்பதுடன், குறுந்தகவல்களை அனுப்புதல், மேப் சேவையினைப் பெற்றுக்கொள்ளல் போன்ற பல்வேறு வசதிகளையும் பெற்றுக்கொள்ள முடியும்.

மேலும் இத்தொழில்நுட்பத்தினை அறிமுகப்படுத்துவதற்காக பிரபல்யமான Land Rover, BMW, Jaguar, Hyundai, Ford, GM, Peugeot Citroen, Honda போன்ற கார் உற்பத்தி நிறுவனங்களுடன் அப்பிள் நிறுவனம் ஒப்பந்தம் செய்துள்ளது.

## ஜீமெயிலில் பேக் அப் வசதி

ஜிமெயில் தரும் கொள்ளளவிற்கு மேலாகவும் நாம் மின்னஞ்சல்களை அடுக்கி வைக்கப் போகிறோமா? நம் முக்கிய தகவல்கள் பலவற்றை, ஜிமெயில் மின்னஞ்சல்களில் சேமித்து வைத்திருக்கிறோம்.




இலவசமாக இயங்கும் இந்த ஜிமெயில் சேவை என்றாவது முடப்பட்டால், கோடிக்கணக்கான வாடிக்கையாளர்களின் நிலை திக்கற்றதாகிவிடும்.

இதற்கான ஒரு பயன்பாட்டு புரோகிராம் ஒன்று இணையத்தில் கிடைக்கிறது. அதனை இன்ஸ்டால் செய்தவுடன், Backup என்பதில் கிளிக் செய்தால், நாம் நம் கம்ப்யூட்டரில், குறிப்பிட்ட போல்டரில் மெயில்கள் மற்றும் கோப்புகள் அனைத்தும் பேக் அப் செய்யப்படும்.

அனைத்து மெயில்களும் தேவை இல்லை எனில், குறிப்பிட்ட நாட்களுக்கிடையே கையாளப்பட்ட மெயில்களை மட்டும் பேக் அப் செய்திடலாம்.

## உங்கள் IPHONE-இல் IOS மென்பொருள்

மின்னஞ்சல் மூலமாக பல்வேறு கோப்புக்களையும் பகிர்ந்து கொள்ளும் வசதி காணப்படுகின்ற போதிலும் குறிப்பிட்ட கொள்ளளவு உடைய கோப்புக்களையே பகிர முடியும். அப்பிளின் iOS இயங்குதளத்தினைக் கொண்ட மொபைல் சாதனத்திலிருந்து 10GB வரையிலான கோப்புக்களை பகிர்ந்துகொள்வதற்கு WeTransfer எனும் அப்பிளிக்கேஷன் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.



குறுஞ்செய்திகளுடன் இணைத்தும் பெரிய கோப்புக்களை பகிரும் இந்த வசதியில் Plus எனும் மற்றுமொரு கணக்கு காணப்படுகின்றது.

இதில் 50GB வரையான கோப்புக்களை பகிர முடிவதுடன் மாதம் ஒன்றிற்கு 10 டொலர்களும், வருடத்திற்கு 120 டொலர்களும் செலுத்தி இந்த வசதியினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

## Instagram தளத்திலிருந்து தரவிறக்க

உலகின் முன்னணி சமூகவலைத்தளமான பேஸ்புக்கினால் கொள்வனவு செய்யப்பட்ட புகைப்படங்களையும், சிறிய அளவிலான வீடியோக்களையும் பகிரும் தளமான Instagram பல மில்லின் பயனர்களை தன்னகத்தே கொண்டுள்ளது.

இத்தளத்தில் பதிவேற்றப்படும் புகைப்படங்களை இலகுவாகவும், விரைவாகவும் தரவிறக்கம் செய்து கொள்வதற்கு Instagram Downloader எனும் மென்பொருள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

1.3MB கோப்பு அளவுடைய இந்த மென்பொருளின் உதவியுடன் வீடியோக்களையும், ஸ்லைட் ஷோக்களையும் தரவிறக்கம் செய்துகொள்ள முடியும் என்பது குறுப்பிடத்தக்கது.

## அப்பிளுக்குப் போட்டியாக SAMSUNG;



Samsung நிறுவனமானது அப்பிளின் Retina iPad Mini டேப்லட்டிற்கு போட்டியாக Galaxy TabPro 8.4 எனும் புதிய டேப்லட்டினை அறிமுகம் செய்யவுள்ளது.

இந்த டேப்லட் ஆனது 8.4 அங்குல அளவும், 2560 x 1600 Pixel Resolution உடையதுமான தொடுதிரையினைக் கொண்டுள்ளதுடன் 2.3Ghz வேகத்தில் செயற்படவல்ல Quad Core Snapdragon 800 Processor, பிரதான நினைவகமாக 2GB RAM ஆகியனவும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மேலும் 16GB அல்லது 32GB சேமிப்பு நினைவகத்தினைக் கொண்டுள்ளதுடன், 8 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமெரா, வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கென 2 மெகாபிக்சல்களை உடைய கமெரா ஆகியனவும் தரப்பட்டுள்ளன.

## மூக்கினால் தட்டச்சு

இந்தியாவைச் சேர்ந்த நபரொருவர் மூக்கினாலே அதிவேகமாக தட்டச்சு செய்து கின்னஸ் சாதனை படைத்து அசத்தியுள்ளார்.



இந்தியாவின் ஹைதராபாத் மாநிலத்தைச் சேர்ந்த மொஹம்மட் குர்ஷித் குசைன் என்ற நபரே இச்சாதனைக்குச் சொந்தக்காரர். இவர் அதிகுறைந்த நேரத்தில் 103 சொற்களைக்கொண்ட வசனத்தினை 3.43 விநாடிகளில் தட்டச்சு செய்து கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.




இது ஒரு உண்மைச் சம்பவத்தைத் தழுவிய கதை....... கதையொன்றில் புனைவுகள் இருப்பதைப் போல இக் கதையிலும் புனைவுகள் உள்ளன.

அனைவரும் சிறிது நேரச் சிந்தனையில் ஆழ்ந்திருக்க அத்தியட்சகர் தனது கைத்தொலைபேசியில் யாரையோ தொடர்பு கொள்ள எத்தனித்தார்...... அந்த அழைப்பு காத்திருப்பில் இருந்தது....

அனைவரும் அமைதியாக அந்த கைத்தெலைபேசியின் மறு அநதத்தில் இருப்பவரின் பதிலுக்காக காத்திருந்தனர்.

சிறுதி கணக்கழிவில் மறுபுறம் தொலைபேசியுயிர்த்தது.

உதவிக் காவல்துறை அத்தியட்சகர் தெளிவாகவும் தீர்மாகவும் அதேவேளை மிக மரியாதையாகவும் அந்த மறுமுனை மனிதருடன் உரையாடினார். அடிக்கடி அவர் "சேர்" என்ற வார்த்தைகளைப் பாவித்தது அவரை விட அதிகார மட்டத்தில் உயரத்தில் இருப்பவருடன் அவர் உரையாடுவதை அங்கிருந்த புலனாய்வாளர்களுக்கு தெரியப்படுத்தியது.

"சரி சேர்... அதன்படியே செய்கின்றோம்...நன்றி" மேலதிக வார்த்தைகள் எதுவும் இன்றி தொலைபேசி அணைக்கப்பட்ட போது தெளிவாயிருந்தது அத்தியட்சகரின் முகம்.

" ஆம்... நீங்கள் முன்வைத்துள்ள மூன்று அடுத்த கட்ட நடவடிக்கைகளையும் நாம் நிறைவேற்றுவோம். முதலிரண்டு நடவடிக்கைகளுக்கும் நீதிமன்ற அனுமதியைப் பெற்றுக் கொள்ளவேண்டியுள்ளது. அடுத்த நடவடிக்கையை நாமே முன்னெடுக்கலாம்" என அவர் தனது முடிவுகளை வெளிப்படுத்தினார்.

உடனடியாகவே அடுத்த கட்ட நடவடிக்கைகள் தயாராகின.

திருகோணமலை நீதிமன்றில் விசேட உத்தரவிற்காக முதல் இரண்டு நடவடிக்கைகளும் முன்நிலைப்படுத்தப்பட்டன.

சந்தேகநபர்கள் பாவனைக்குட்படுத்திய கைத் தொலைபெசிகளின் தொடர்பாடல் வரலாற்றை வழங்கும் உத்தரவை நீதிமன்றம் உரிய கைத்தொலைபேசிச் சேவை வழங்குனர்களுக்கு வழங்கியது.

இந்த மூன்று நடவடிக்கைகளும் இரண்டு நோக்கங்களைப் பூர்த்தி செய்யக் கூடியதாகத் திட்டமிடப்பட்டிருந்தது. முதலாவதாகக் கைத்தொலைபேசியின் தொடர்பாடல் வரலாற்றை அறிந்து கொள்வதன் ஊடாக சந்தேகநபர்கள் யார் யாருடன் எந்தெந்த நேரங்களில் என்றைக்கெல்லாம் தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளனர் என்பதை அறிந்து கொள்ள முடியும். அதன் ஊடாக இக் கொலைக்கான ஆழமான காரணத்தையும், கொலைக்கான ஊக்கி யாரென்பதையும் சந்தேகத்திற்கிடமற்ற முறையில் கண்டு கொண்ண முடியும்.

ஏனெனில் தற்போதுவரை கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து கொலைக்கான மூலகாரணம் தெளிவாகப் புரிந்து கொள்ளப் படமுடியாமல் இருந்தது. அத்துடன் இவர்கள் இருவர் மட்டுமா இந்தக் கொலையுடன் சம்பந்தப்பட்ட சந்தேக நபர்கள் அல்லது இன்னும் எவரெல்லாம் அச் சந்தேக வட்டத்திற்குள் விழுவார்கள் என்பதையும் தொலைத்தொடர்பாடல் வரலாறு வெளிக்காட்டிவிடும்.

இரண்டாவது நோக்கம் மேலும் ஆதாரங்களையும் தடயங்களையும் இக்கொலைதொடர்பாகத் திரட்டிக் கொள்ளும் நோக்குடையதாக இருந்தது.

சேகரிக்கப்பட்ட தடயப் பொருட்களில் சிதறியிருந்து இரத்தத்துகள்கள் யாருடையவை என்பதைக் கண்டு கொள்வதன் ஊடாக கொல்லப்பட்டவர் மற்றும் சந்தேகநபர்கள் ஆகியோரை உறுதிப்படுத்திக்கொள்ளும் வாய்ப்பை காவல்துறை பெற்றுக்கொள்வதுடன் வேறும் யாராவது அக்கணத்தில் அங்கிருந்தார்களா என்பதை தெரிந்துகொள்ளவும் முடியும்.





அத்துடன் கொலை நடந்த நாளின் பின்னர் சந்தேக நபர்கள் இருவரும் நேராகத் தமது வீடுகளுக்கே சென்றிருந்தனரா அல்லது வேறு எங்காவது சென்றிருந்தனரா பூகோள அமைவு நுட்பத்தின் ஊடாகப் புலனாய்வாளர்கள் தெரிந்துகொண்டிருந்தனர்.

அவ்வாறு நேரடியாக வீடுகளுக்குச் சென்றவர்கள் அங்கு தாம் கொலைக்குப் பாவித்த எதனையாவது நிச்சயமாக விட்டுச் சென்றிருப்பார்கள் என்று புலனாய்வாளர்கள் நம்பினர். அத் தடயத்தையும் பெற்றுக்கொள்ள அவர்கள் விரும்பினர்.

அதற்கமைய அம் மூன்று திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன.

அதன்படி.......

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# புனித மரியாள் அணி எல்லேயில் முதலிடம்

எல்லே விளையாட்டில் திருகோணமலை புனித மரியாள் கல்லூரி கோட்ட மட்டப் போட்டிகளில் வெற்றி பெற்று முதலிடத்தைத் தனதாக்கிக்கொண்டுள்ளது.

கோட்ட மட்டப் பாடசாலை எல்லே விளையாட்டுப் போட்டிகள் கடந்த 13ம் திகதி ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.


அபயபுர மகாவித்தியாலய அணி

இப் போட்டிகளில் 19 வயதிற்குட்பட்ட மகளிர் அணி எல்லே போட்டிகளில் முதல் நிலையை அடைவதற்கான போட்டியில் புனித மரியாள் கல்லூரி அணியும் அபயபுரம் மகாவித்தியாலய அணியும் மோதிக்கொண்டன.

ஏற்கனவே 6 பாடசாலை அணிகளை வெற்றிகொண்டே இவ்விரு அணிகளும் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியிருந்தன.

40 பத்துப் போட்டியாக நடத்தப்பட்ட இப்போட்டியில் அபயபுர அணி 40 பந்துகளை எதிர்கொண்டு 14 ஆட்டமிழப்புக்களுக்கு 6 ஓட்டங்களைப் பெற்றனர். இதற்குப் பதிலளித்த புனித மரியாள் அணி 14 பந்துகளை எதிர் கொண்டு 3 ஆட்டமிழப்புக்களுக்கு 7 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

புனித மரியாள் கல்லூரி அணி



# இரு நாடுகளில் ஐபிஎல்

7ஆவது ஐ.பி.எல். போட்டித் தொடரின் முதல் பாதி ஐக்கிய அரபு நாடுகளிலும் இரண்டாவது பாதி இந்தியா அல்லது பங்களாதேஷிலும் நடைபெறும் என இந்திய கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

அதன்படி போட்டிகள் ஏப்ரல் 16ஆம் திகதி ஐக்கிய அரபு நாடுகளில் ஆரம்பமாகிறது. எனினும் இறுதிப் போட்டி இந்தியாவில் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

முதல் 16 போட்டிகள் ஐக்கிய அரபு நாடுகளில் உள்ள அபுதாபி, சார்ஜா, டுபாய் உள்ளிட்ட இடங்களில் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய உள்துறை அமைச்சகம் பாதுகாப்பு அளிக்கும் வகையில், மே மாதம் முதலாம் திகதி முதல் 13 ஆம் திகதி வரையிலான போட்டிகள் இந்தியாவில் நடத்தப்படும் என்றும், மாறாக பாதுகாப்பு அளிக்கப்படாமல் இருப்பின் அப்போட்டிகள் பங்களாதேஷிலும் நடத்தப்படும் என்று ஐ.பி.எல். தலைவர் ரன்ஜிப் பிஷ்பால் தெரிவித்துள்ளார்.

## மெஸ்ஸிக்கு கோல் போட்ட ரொனால்டோ

கால்பந்தாட்ட உலகில் முடி சூடா மன்னனாக தற்போது வலம்வரும் லியோனல் மெஸ்ஸியை, கிறிஸ்டியானோ ரொனால்டோ பின்தள்ளியுள்ளார்.

சர்வதேச கால்பந்து உலகில் அதிகம் சம்பாதிக்கும் வீரர்கள் பட்டியலை கோல்.கொம் இணையதளம் வெளியிட்டுள்ளது.

இதில், கடந்த ஜனவரியில் சிறந்த கால்பந்து வீரருக்கான விருதை வென்ற போர்த்துக்கல் வீரர் கிறிஸ்டியானா ரொனால்டோ 'ரூ.1,240 கோடி மதிப்புடன் முதலிடத்தில் உள்ளார்.

இதேவேளை, ஆர்ஜன்டினாவைச் சேர்ந்த பார்சிலோனா கழக அணி வீரர் லியோனல் மெஸ்ஸி 'ரூ. 1,220 கோடி மதிப்புடன் 2ஆவது இடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வாகரை வழைச்சேனை அணிகள் வெற்றி

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் ஏற்பாடு செய்த மட்டக்களப்பு மாவட்ட கரப்பந்தாட்ட அணிகளுக்கிடையிலான கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் ஆண்கள் பிரிவில் வாழைச்சேனை அணியும் பெண்கள் பிரிவில் வாகரை அணியும் சம்பியன்களாக தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு கல்லடி கரப்பந்தாட்ட மைதானத்தில் சனிக்கிழமை (08) நடைபெற்ற இச்சுற்றுத்தொடரில் ஆண்கள் பிரிவில் 11 அணிகளும் பெண்கள் பிரிவில் 6 அணிகளும் பங்குகொண்டன.

ஆண்கள் பிரிவில் இறுதிப்போட்டியில் வாழைச்சேனை மற்றும் மண்முனை வடக்கு அணிகள் மோதிக்கொண்டன.25க்கு 23 என்ற அடிப்படையில் வாழைச்சேனை அணி சம்பியனாகியது.

பெண்கள் பிரிவில் வாகரை மற்றும் கொக்கட்டிச்சோலை அணிகள் மோதின. 25க்கு 21 என்ற அடிப்படையில் வாகரை அணி சம்பியனாக தெரிவாகியுள்ளது. இறுதிப்போட்டியில் தெரிவான இருஅணிகளும் கொழும்பில் நடைபெறவுள்ள தேசிய போட்டியில் பங்குகொள்ளவுள்ளன.

## உங்களது பிரதேசத்தில் கிராமத்தில் நிகழும் விளையாட்டுக்களை எங்களுக்குத் தெரிவியுங்கள்

# மலை முரசு
## குறுக்கெழுத்து புதிர் 001

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 13 | ■ | 11 | | 19 | | ■ |
| ■ | 2 | | | | ■ | | ■ | 12 |
| 5 | | | ■ | | ■ | | 17 | ■ |
| | ■ | ■ | 3 | | | ■ | | 18 |
| 4 | 15 | | | ■ | ■ | 20 | | |
| ■ | 6 | | | | 16 | | | |
| 7 | | | | ■ | | ■ | | |
| | ■ | ■ | | ■ | 10 | | | |
| 9 | | | | | ■ | 8 | | |

### இடமிருந்து வலமாக

1. இதுவம் சிவமும் இரண்டென்பர்
2. பெண்களுக்கு இவனை ரொம்பப் பிடிக்கும் (குழம்பியுள்ளது)
3. சுழற்றலாம்
4. குழந்தைகள் இறுகிச் சாவது (குழம்பியுள்ளது)
5. முரளீதரனுக்குப் பிடித்தது (குழம்பியுள்ளது)
6. இவர்களைத் தேடி அலைகின்றோம். (ஒரு எழுத்து குழம்பியுள்ளது)
7. நடிகர் சிவகுமார் இயக்கும் அமைப்பு. (குழம்பியுள்ளது)
8. படகுக்கு இன்னுமொரு பெயர் (குழம்பியுள்ளது)
9. துறவியை இவ்வாறும் அழைப்பர்.
10. "........... பார்க்கில் சுற்றம் இல்லை"
11. சூர்யாவின் தம்பி
20. காடு (குழம்பியுளளது)

### மேலிருந்து கீழாக

03. விசம் மிக்கது
05. சுருண்டிருந்தால் அழகு (குழம்பியுள்ளது)
07. இதனுடன் தடியை இணைத்தால் சுத்தம் செய்யலாம். (குழம்பியுள்ளது)
11. இலட்சினையின் மறுபெயர்
12. ஒற்றை எழுத்து மாதம்
13. புகழ் பெற்ற இந்தியச் சிறை
15. மூத்த சகோதரி (குழம்பியுள்ளது)
16. சிலபேரின் நடத்தையை இவ்வாறு சொல்வார்கள்.
17. பெரியவன் - எதிர்ச்சொல்
18. பல்வேறு நிறங்களை இவ்வாறு அழைப்பர் (குழம்பியுள்ளது)
19. மாமியை இவ்வாறும் அழைப்பர்.

- விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்.
- முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 150, ரூபா 100, ரூபா 50 பெறுமதியான கொள்வனவு கூப்பன் வழங்கப்படும்.

விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி : மலை முரசு இல — 159ஏ, கடற்காட்சி வீதி, திருகோணமலை.

போட்டி முடிவுத் திகதி : 21.03.2014

## கோட்ட மட்டப் போட்டிகள்

திருகோணமலை கோட்ட மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப்போட்டியில் இன்று 12.0.2014 செவ்வாய்கிழமை உதைபந்தாட்ட போட்டிகள் நடைபெற்றன. பெண்களுக்கான 19 வயதுக்கு உட்பட்ட போட்டி வித்தியாலோக ராஜகிய வித்தியாலயத்திலும். ஆண்களுக்கான 15 வயது. 17 வயது. 19 வயது போட்டிகள் விபுலாநந்தா கல்லூரியிலும்நடைபெற்றன.

பெண்களுக்கான போட்டியில் புனித மரியாள்கல்லூரி செல்வநாயகபுரம் இந்து மகா வித்தியாலயத்தை 1 க்கு 0 என்ற கோல்கணக்கில் வென்று சம்பியனானது.

ஆண்களுக்கான 15 வயதுக்கு உட்பட்டோருக்கான போட்டியில் இறுதிப்போட்டியில் புனித சையப்பர் கல்லூரியை எதர்த்து ஜமாலியா முஸ்லிம் மகா வித்தியாலய அணியினர் மோதினர். ஆட்ட நேரம் முடியும் வரை இரு அணிகளும் எந்த வித கோல்களையும் பெற்றுக் கொள்ளவில்லை. வெற்றியை தீர்மானிக்க தண்ட உதைகள் 5 (பெனால்டி ) வழங்கப்பட்டது. இதில் புனித சையப்பர் கல்லூரி 2க்கு 1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானது. (கதிரவன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி

01. கீழே தரப்பட்டுள்ள பாடலை வாசித்து விடையளிக்கவும்

இந்த உலகில் நீங்கள்
இயற்றும் தொண்டில் எல்லாம்
தந்தை தாயைப் பேணும்
தருமம் ஒன்றே பெரிது

கன்றை நினைத்தே உள்ளம்
கசியும் பசுவைப் போல
நன்றி புரிந்தோர் தம்மை
நாமும் நினைக்க வேண்டும்

பருவம் பார்த்து நாங்கள்
பயிரைச் செய்தல் போலக்
கருமந் தொடங்கும் போது
காலம் பார்க்க வேண்டும்.

1. 'அறம்' என்ற கருத்தைத் தரும் சொல் ஒன்று தருக.
2. தொண்டுகளில் பெரியது எனக் கவிஞர் கருதுவது எதனை?
3. உள்ளம் கசிதல் என்பதன் பொருள் யாது?
4. 'நாம் நினைத்தோம்' என்பதை ஒருமையில் மாற்றி எழுதுக.
5. தந்தை, தாயைக் குறிக்கும் ஒரு சொல் எழுதுக.
6. பசுவின் இளமைப் பெயர் யாது?
7. இப்பாடலில் இடம்பெறும் உயர்திணை, பெண்பாற் பெயர்ச் சொல் யாது?
8. இங்கு இடம்பெறும் முன்னிலை, பன்மைப் பெயர்ச் சொல்லை எழுதுக.
9. கவிஞர் கன்றை யாருக்கு ஒப்பிடுகின்றார்?
10. பருவம் பார்த்துப் பயிர் செய்தல் என்ற கருத்தைத் தரும் பழமொழி ஒன்றை எழுதுக.

02. பின்வரும் சுருக்கக் குறியீடுகளின் விரிவைத் தருக.

1. கி.மு 2. அ.ப 3. இ.ஒ.கூ 4. பி.ப 5. இ.போ.ச

03. வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லை எழுதுக.

1. அழகிய பறவை கிளி, அச்சத்தால் வருவது ....................
2. மனிதர்க்கு உள்ளது மனம், மலரிலிருந்து வீசுவது ................
3. கடலில் வீசுவது திரை, பகையரசருக்குக் கொடுக்கும் காணிக்கை ...........
4. நோவின் மறுபெயர் வலி, நாம் சுவாசிப்பது ..........................
5. உணவின் மறு பெயர் ஊண், உடம்பின் மறுபெயர் ..........................

04. ஒவ்வொரு 10மீற்றருக்கும் ஒரு தூண் வீதம் நடப்பட்டுள்ளது. ஒரு வரிசையில் 20 தூண்கள் காணப்படின், முதலாவது தூணுக்கும், கடைசித் தூணுக்கும் இடையிலான தூரம் எவ்வளவு?

1. 210 மீற்றர் 2. 200 மீற்றர் 3. 190 மீற்றர்

05. அனுலா தனது எட்டாவது பிறந்த நாளை 29.02.2004 இல் வெகு விமர்சையாகக் கொண்டாடினாள் எனில், அவள் அடுத்த பிறந்த நாளை எந்த ஆண்டில் கொண்டாடுவாள்?

1. 2005 2. 2006 3. 2008

06. குரு தெற்கு நோக்கி நிற்கும் போது, வலது புறமாக இரு தடவைகள் செங்கோணமாக திரும்பினான். குரு தற்போது நோக்கியிருக்கும் திசை எது?


1. மேற்கு 2. வடக்கு 3. கிழக்கு

07. நீர்த்தாங்கியொன்றை நிரப்புவதற்கு ஒரு நிமிடத்தில் 25லீற்றர் நீரை நிரப்பும் குழாயையும், இரண்டு நிமிடத்தில் 60 லீற்றர் நீரை நிரப்பும் குழாயையும் பொருத்தியுள்ளான். இரு குழாய்களையும் ஒரே நேரத்தில் திறந்து விட்டால், 10 நிமிட நேரத்தில் எவ்வளவு நீரை நிரப்பும்?

1. 850 லீற்றர் 2. 550 லீற்றர் 3. 500 லீற்றர்

**புலமைப் பரிசில் வழிகாட்டல்**
**ஆசிரியர் திரு.ந.மனோகரன்**







உங்கள் குழந்தைகளின் ஆக்கங்களை அனுப்ப வேண்டிய முகவரி :
மலைமுரசு. இல - 159ஏ.
கடற் காட்சி வீதி. திருகோணமலை.

# சிறுவர் முரசு



## விடுகதைகள்

1. விடிய, விடிய பூந்தோட்டம் விடிந்து பார்த்தால் வெறுந்தோட்டம்
2. சித்தூர் சிறு மணலிலே காய்க்கும் கத்தரிக்காய் கூட்டிப் பார்த்தால் கொம்புக்கு முப்பதுகாய் என்ன?
3. கிண்ணத்து நிறையத், தண்ணீர் இருக்கு, குருவி குடிக்க வழியில்லை அது என்ன?
4. பாய் சுருட்டவும் முடியாது, பாக்கு எண்ணவும் முடியார்து. அது என்ன?
5. காட்டிலே இருக்கும் குடை, வீட்டில் இல்லாத குடை அது என்ன?
6. அத்துவானக் காட்டுக்குள்ளே குடை பிடிக்கிறார். அவர் யார்?
7. இரத்தத்தில் வளர்வது ஆனால், இரத்தம் இல்லாதது அது என்ன?
8. பற்கள் பல உண்டு ஆனால், கடிக்கத் தெரியாது அது என்ன?
9. தண்ணீரில் நீந்தி வரும், தரையில் தாண்டி வரும் அது என்ன?
10. ஆடையில்லாத கறுப்பழகி, ஆடிச் சுழன்று பாடுகிறாள் அவள் யார்?
11. வெட்டிக் கூறு படுத்தி வைக்கிறார்களே தவிர எவரும் தின்பதில்லை அது என்ன?

### விடைகள்

1. நட்சத்திரங்கள்
2. காப்பிச் செடி
3. காளான்
4. வானம், நட்சத்திரம்
5. காளான்
6. இளநீர்
7. நகம்
8. சீப்பு
9. தவளை
10. இசைத்தட்டு

## கடமையே கண்கண்ட தெய்வம்!!

குட்டிக்கதை

கடற்கரை ஓரம் இருந்த ஊரில் ஒரு கலங்கரை விளக்கு இருந்தது. அந்தக் கடற்கரை ஓரம் கப்பல் போக்குவரத்து அதிகம். பாறைகள் நிறைந்த கடல் பகுதியானதால் கப்பல்கள் பாறைப் பகுதியைத் தவிர்த்து பத்திரமாகச் செல்ல வகை செய்யும் வண்ணம் அந்தக் கலங்கரை விளக்கை அமைத்திருந்தார்கள். எண்ணையால் எரியும் விளக்கு அது.

கலங்கரை விளக்கை செயல்படுத்த ஒரு காப்பாளன் புதிதாக வேலைக்குச் சேர்ந்திருந்தான்.

வாராவாரம் கலங்கரை விளக்கிற்குத் தேவையான எண்ணையை கப்பல் நிறுவனங்கள் அவனுக்குத் தப்பாமல் அனுப்பிக் கொண்டிருந்தன. காப்பாளனின் முக்கியமான வேலை கலங்கரை விளக்கைக் காப்பது மற்றும் விளக்கு அணையாமல் அதைச் செலுத்திக் கொண்டிருப்பது மட்டுமே.

எல்லாம் நன்றாகப் போய்க்கொண்டிருந்தது.

ஒரு கடுங் குளிர்கால இரவில் கலங்கரை விளக்கின் அலுவலகக் கதவை யாரோ தட்டினார்கள். காப்பாளன் கதவைத் திறந்து பார்த்தான். பக்கத்து ஊரைச் சேர்ந்த முதியவர் ஒருவர் குளிரில் நடுங்கிக் கொண்டே நின்று கொண்டிருந்தார். "தம்பி! என் வீட்டில் விளக்கெரிக்கக் கூட எண்ணை இல்லை. குளிர் நடுக்குகிறது. நீ மிகவும் நல்லவனாகத் தெரிகிறாய். கொஞ்சம் எண்ணை கொடுத்தால் பிழைத்துக் கொள்வேன். சீக்கிரம் திருப்பிக் கொடுத்து விடுவேன்" என்று கெஞ்சினார்.

மனமிளகிய காப்பாளன் அவருக்குக் கொஞ்சம் எண்ணை கொடுத்தனுப்பினான்.

அடுத்த நாள் இரவு மறுபடியும் கதவில் "டக்... டக்". கதவைத் திறந்தால் ஒரு வழிப்போக்கன். "அண்ணே! பக்கத்து ஊரில் உங்கள் உதவும் குணத்தைப் பற்றி ரொம்பவும் சிலாகித்துப் பேசினார்கள். நான் அவசரமாக ஊருக்குப் போய்க் கொண்டிருக்கிறேன். மிகவும் முக்கியமான வேலையாகப் போய்க் கொண்டிருக்கிறேன். இங்கே தங்க முடியாத நிலை. என் கை விளக்கில் எண்ணை தீர்ந்து விட்டது. பயணத்திற்கு எண்ணை கொடுத்து உதவினால் மிகவும் நன்றி உள்ளவனாக இருப்பேன்" என்று வெகு இளக்கமாகப் பேசினான்.

காப்பாளனும் வழிப்போக்கனுக்கு எண்ணை கொடுத்தனுப்பினான்.

மூன்றாம் நாளும் இதே கதை தொடர்ந்தது. இப்போது கதவைத் தட்டியது ஒரு மூதாட்டி. "ராசா. நீ நல்லாயிருக்கணும். வீட்டில் பச்சைக் குழந்தைக்குப் பால் காய்ச்ச அவசரமாக அடுப்பு எரிக்கணும். வீட்டில் எண்ணை தீர்ந்து போய் விட்டதப்பா! எனக்கு உன்னை விட்டால் வழியில்லை என்று வந்து விட்டேன். நீதான் அவசரத்துக்குக் கடவுள் போல் கை கொடுத்து உதவணும்" என்றாள்.

அவளுக்கும் காப்பாளன் எண்ணை கொடுத்தான்.

வாரக் கடைசி. அடுத்த வாரத்திற்கான எண்ணையைக் கொண்டு வரும் வண்டி வர இரண்டு நாளாகும். காப்பாளன் வழக்கம் போல விளக்கிற்கு எண்ணை நிரப்ப பீப்பாயைத் திறந்து பார்த்தான். பீப்பாயில் இருந்த எண்ணை வாரக் கடைசி வரை விளக்கைச் செலுத்தப் போதாது என்று புரிந்தது.



இருந்த எண்ணையை விளக்கில் நிரப்பி அதை எரிய விட்டு விட்டு பதறிப் போய் ஊருக்குள் ஓடினான்.

மிக அவசரமாக விளக்கிற்கு எண்ணை தேவை. கடன் வாங்கியவர்கள் திருப்பிக் கொடுத்து விடுங்கள் என்று கேட்டான். எல்லோரும் கை விரித்து விட்டார்கள்.

வாரக் கடைசியில் இரவில் எண்ணை தீர்ந்து போய் விளக்கு அணைந்து விட்டது. இரண்டு கப்பல்கள் அன்று இரவு கலங்கரை விளக்கு எரியாததால் வழி தவறிப் போய் பாறையில் மோதிச் சிதறி விட்டன.

மூன்று பேருக்கு உதவுவதற்காக தன் முதன்மைக் கடமையில் தவறிய காப்பாளன், முந்நூறு பேரின் உயிர் சேதத்திற்குக் காரணமானான்.

முற்றும். . .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

01. கார் ஒன்று கதிமானியில் குறிப்பிட்ட சீரான கதியில் ஒன்றரை மணித்தியாலங்கள் பிரயாணம் செய்து A யிலிருந்து B யை அடைகிறது.
   1. காரின் கதியை எழுதுக.
   2. A, B யின் இடைத்தூரம் எவ்வளவு?
   3. கார் சென்ற கதியிலும் $10 \text{ Kmh}^{-1}$ குறைந்த கதியில் மோட்டார் சைக்கிளில் செல்பவர் இத்தூரத்தைக் கடக்க எடுக்கும் நேரம் யாது?
   4. $X\text{Kmh}^{-1}$ கதியில் செல்லும் வான் ஒன்று இத் தூரத்தைக் கடக்க ல மணித்தியாலங்கள் எடுத்தது எனின், X ஐக் காண்பதற்கான ஒரு கோவையை y சார்பாக எழுதுக.

02. $2.09 \times 10^3$ என்ற விஞ்ஞான முறைக்குறியீட்டினால் காட்டப்படும் எண்ணை
   1. சாதாரண எண்ணாகத் தருக.
   2. அதனைக் கிட்டிய ஆயிரத்திற்கு மட்டந்தட்டுக.

03. ஒரு இறாக்கையின் இரு தட்டுக்களுக்கிடையிலான தூரம் 25 சென்ரிமீற்றர் ஆகும். ஒரு தகரப்பேணியின் உயரம் 10 சென்ரிமீற்றர் எனின், ஒரு இறாக்கையில் ஒன்றன் மீது ஒன்றாக அடுக்கக்கூடிய தகரப்பேணிகளின் ஆகக்கூடிய எண்ணிக்கை யாது?

04. 4 தலையணை உறைகளைத் தைப்பதற்கு 2 மீற்றர் பொப்ளின் தேவைப்படுகிறது எனின், அதே துணியில் 5 மீற்றரில் தைக்கக்கூடிய தலையணை உறைகள் எத்தனை?

05. 2, 3, 6, 6, 8 எனும் எண்களின்
   1. இடையம் யாது? 2. இடை யாது?

05. கம்பனி ஒன்றின் ரூபா 10 பெறுமதியான பங்குகளை ரூபா 15 வீதம் வாங்குவதற்கு குமார் ரூபா 30000 த்தை முதலீடு செய்கின்றார். ஏனின்,
   1. குமார் வாங்கிய பங்குகளின் எண்ணிக்கை?
   2. அப்பங்குகளின் பெயர்மாத்திரையான பெறுமதி யாது?
   3. ஒரு வருடத்தில் ரூபா 3600 ஐ வருமானமாக பெறுகிறார் எனின், அவருக்கு கம்பனி கொடுக்கும் பங்குலாபம் யாது?

06.தையற்பொறி ஒன்றை வாடகைக் கொள்வனவு முறைக்கு வாங்கும் போது ஆண்டுக்கு 10வீதம் வட்டியைக் கொடுக்க வேண்டி உள்ளதுடன், கடன்தொகையையும், வட்டியையும் 10 சம தவணைக் கட்டணங்களில் கொடுத்து முடித்தல் வேண்டும். மாதந்தோறும் ரூபா 2400 செலுத்தப்படவேண்டு மெனின்,
   1. வட்டி கொடுக்கப்படவேண்டிய மாத அலகு யாது?
   2. கொடுக்க வேண்டிய மொத்த வட்டி யாது?

07.4மீற்றர் நீளமான உலோகக்கோலின் நிறை 620.5கிராம் ஆகும். இதிலிருந்து 3மீற்றர் நீளமான கம்பித் துண்டொன்று வெட்டியெடுக்கப்பட்டால், அக் கம்பித் துண்டின் நீளம் யாது?

08.75% தை தசமமாக எழுதுக.

09. வர்த்தகர் ஒருவர் ரூபா 150 இற்கு வாங்கிய ஒரு பொருளுக்கு ரூபா 180 என விலை குறிக்கின்றார். அவர் அதனை விற்கும் போது 10% கழிவு கொடுக்கின்றார் எனின்,
   இலாபம் ? இலாபச் சதவீதம்?

10. கூட்டுக. 5m + 12cm

11. 8 இன் காரணிகள்?

12. ஒரு வட்டத்தின் மிகப் பெரிய நாண்?

13. நிலைத்த கோட்டிலிருந்து சம தூரத்தில் இயங்கும் புள்ளியின் பாதை?

14. 4, 6 இன் பொ.ம.சி யாது?

15. சுருக்குக. 3/2 x ½ x 5/3

16. 5மீ பக்க நீளமுள்ள சதுரத்தின் பரப்பளவு யாது?

17. பலாக்கொட்டைப் பிட்டைத் தயாரிப்பதற்கு தேவையான பொருட்கள் : 200 கிராம் பலாக்கொட்டைமா, 300 கிராம் வெள்ளை அரிசி மா, 500 கிராம் தேங்காய்ப்பூ
பலாக்கொட்டைப் பிட்டைத் தாயாரிக்கும் போது?
   1. இம் மூன்று பொருட்களும் இடப்படும் அளவுகளுக்கிடையிலான விகிதம் யாது?
   2. 600 கிராம் வெள்ளை அசிரி மாவுடன் கலக்கவேண்டிய தேங்காய்ப்பூவின் அளவு யாது?
   3. மூன்று பொருட்களையும் கலந்து 3கி.கிராம் கலவையைப் பெறுவதற்கு கலக்கவேண்டிய பலாக்கொட்டை மாவின் நிறை யாது?'
   ஆண்டுக்கு 10வீதம் என்பதன் கருத்து

18. ஒரு வேலையை 4 மனிதர் 3 நாட்களில் பூர்த்தி செய்தால், அவர்கள் செய்த வேலையின் அளவு யாது?

**கணிதம் வழிகாட்டல் :**
**திருமலையின் பிரபல ஆசிரியர் T.குமணன்**

MATHS
Personal Classes Year 06, 07, 08, 09, 10 & G.C.E (O/L)
**T. Kumanan 0772975953**
**23. Sivan st Trinco.**
G.C.E (O/L) பிரதி சனி தோறும் நடைபெறும்
பரீட்சைக்குச் சகல மாணவர்களும் பங்குபெற்றலாம்.

## பாடம் : வரலாறு

01. கண்டி இராசதானிகீழ் போர்த்துக்கேயரால் முன்னெடுக்கப்பட்ட போர்களை தலைமை ஏற்ற தளபதிகளின் சரியான ஒழுங்கு
   1. தந்துரே — A - தியோகுதமெலோ
   2. பலன — B - பேரோலோபேஸ் த டீசூஸா
   3. ரந்தெனிவெல — C - கொன்ஸ்தாந்தின். டீசூஸா
   4. கண்ணொருவ — D - தொன் ஜெரணிமோ அஸவேது
   1. ACDB 2. BDCA 3. BDAC 4. ABDC

02. இலங்கையில் மகாவலி ஆறு சங்கமிக்கும் இடத்தில் அமையப் பெற்றதுறைமுகம்
   1. உருவெல 2. கோகண்ண 3. ஜம்கோளப்பட்டினம் 4. கொடவாய

03. 1. எல்லாளன் — A - அசேலன்
   2. சேனன்-குத்தின் — B - 2ஆம் பராக்கிரமபாகு
   3. கலிங்கமன்னன் — C - வலகம்பா
   4. தாதிகன் — D - துட்டகைமுனு
   மேற்படி அந்நிய ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து நாட்டை மீட்டவர்களின் சரியான ஒழுங்கு
   1. ABDC 2. DABC 3. DACB 4. CDAB

04. இலங்கையில் அமைக்கப்பட்டமிகப் பெரிய தூபி
   1. ருவன்வெலிசாய 2. மிரிஸவட்டிய 3. அபயகிரி 4. ஜேத்தவனராமய

05. கலிங்கமாகனிடமிருந்து பாதுகாப்புப் பெற பிரதேச ஆட்சியாளரான சங்க என்பவனால் அமைக்கப்பட்ட நிலையம்
   1. மினிப்பே 2. கோவிந்தமல 3. யாப்பகூவ 4. தம்பதெனியா

06. குருணாகல் இராசதானி காலத்தில் வாழ்ந்த ஒருவர் கேள்விப்பட்டிருக்கக் கூடிய விடயம்
   A - பாண்டியஆரியச் சக்கரவத்தி புனித தந்ததாசவை அபகரித்துச் செல்லல்
   B - ராஜபுத்திர வீரர்களின் உதவியுடன் புவனேகபாகு ஆட்சிஅமைத்தல்
   C - நிஸ்ஸங்க அழககோணாரால் கோட்டை அமைத்தல்
   D - அம்புலுகலகுமாரயா ஜோதிய இளவரசனின் கிளர்ச்சியை அடக்குதல்
   1. AC 2. AB 3.AD 4.BC

07. இலங்கை வரலாற்றின் கடைசி சிங்கள மன்னன்
   1. 2 ஆம் இராஜசிங்கன் 2. 1 ஆம் இராஜசிங்கன்
   3. வீரபராக்கிரம நரேந்திரசிங்கன் 4. ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன்

08. பின்வருவனவற்றுள் முதல் தேசிய அரசு
   1. ஸ்பானியா 2. போர்த்துக்கல் 3. இங்கிலாந்து 4. ஒல்லாந்து

09. இத்தாலிய இணைவின் போர்வீரன் என அழைக்கப்படும் நபர்
   1. பீஸ்மார்க் 2. கரிபாஸ்டி 3. கவுண்கவுர் 4. ஜோசப் மஸினி

10. அலைச் செயற்பாடு காரணமாக குளக்கட்டின் அரிப்பைத் தடுக்கும் குளத்தின் பகுதி
   1. கலிங்கற்தொட்டி 2. சுருங்கை 3. அலைதாங்கி 4. கலிங்கல்

11. பிரான்ஸிய புரட்சியை முன்னெடுத்த எழுத்தாளர்
   1. வோல்டயர் 2. கரிபால்டி 3. இராஸ்மஸ் 4. தாந்தே

12. 1. இலக்கியத்தின் தந்தை — A - தாந்தே
   2. மானிடவியலின் தந்தை — B - பிரான்ஸிஸ்பேர்கன்
   3. ஆங்கில இலக்கியத்தின் தந்தை — C - பெட்ராக்
   4. வானியல் விஞ்ஞானத்தின் தந்தை — D - நிக்கலஸ் கொபனிகஸ்
   1. ABCD 2. ACBD 3. BCDA 4. BDCA

13. மானியமுறையின் அம்சமாக கருத கூடியது
   1. ஆட்சிமுறை ஒரு முகப்பட்டிருந்தது
   2. கலைஞர்கள் தங்களின் கலைப்படைப்புக்களை சுதந்திரமாக வெளியிட்டமை
   3. பணக்கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளவங்கிமுறைதோற்றம்
   4. மக்களின் வாழ்க்கையில் சமயத்துக்கு முன்னுரிமை அளித்தமை

14. பின்வரும் கண்டுபிடிப்பாளர்களின் தொகுதியில் பொருத்தமற்ற கூற்று
   1. மோட்டார் வாகனம்- டெம்லர் 2. ஆகாயவிமானம்-றைட்சகோதரர்கள்
   3. பாதுகாப்புவிளக்கு-ஜோர்ஜ் ஸ்ரீவன்கன் 4. நீராவிகப்பல்-றொபர்ட் புல்டன்

15. 1818 ஆம் ஆண்டுகிளர்ச்சியைமுன்னெடுத்ததலைவர் அல்லாதவர்
   1. ஹெப்பட்டிப்பொல 2. மடுகல்ல 3. வீரபுரன் அப்பு 4. 2ம் பிலிமத்தலாவ

16. 1. இனவாதிபிரதிநிதித்துவம் அறிமுகம்
   2. கட்டாய இராஜகாரியமுறை ஒழிப்பு
   3. அரசு வர்த்த ஏகபோக உரிமை நீக்கல்
   மேற்படி விடயங்களுடன் தொடர்புடைய யாப்பு
   1. டொனமூர் 2. கோல்புறூக் கமரன் 3. மனிங் 4. சோல்பரி


17. கொழும்பை மையமாகக் கொண்டு செயற்பட்ட மிஸனரி இயக்கம்
   1. பட்டிஸ்ட் 2. வெஸ்லியன் 3. அமெரிக்கன் 4. லண்டன்

18. சரசவிசந்தரெஸ, தபுடிஸ்ட் என்றபத்திரிகையின் ஆசிரியர்
   1. ஹென்றி ஸ்ரீல் ஒல்கொட் 2. அநகாரிகதர்மபால 3. டி.பிஜாயா
   4. M.C.சித்திலெப்பை

19. இலங்கையினல் ஆங்கிலேயர் ஆட்சினால் ஏற்பட்ட விளைவு அல்லாதது
   1. பெருந்தோட்டபயிர்ச் செய்கை அறிமுகம்
   2. ஏற்றுமதி இறக்குமதி பொருளாதார கோலம் உருவாக்கம்
   3. மத்தியதரவர்த்தகம் உருவாக்கம்
   4. பரீஷ் பாடசாலை (கோவில்பற்று) தோற்றம்

20. மகாராஜாதிராஜா என்றபட்டத்தைபெற்றுக் கொண்டகுப்தபோரசின் முதல் மன்னன்
   1. சந்திரகுப்தன் 2. சமுத்திரகுப்தன் 3. சந்திரகுப்தமௌரியன் 4. குமாரகுப்தன்

21. இலங்கையில் மகாவலி ஆறு சங்கமிக்கும் இடத்தில் அமையப் பெற்றதுறைமுகம்
   1. உருவெல 2. கோகண்ண 3. ஜம்கோளப்பட்டினம் 4. கொடவாய

ஆசிரியர் :
த.அகிலன், Dip. in. Tech. (Merit)
புனித மரியாள் கல்லூரி, திருகோணமலை - சுடர் ஒளி வெற்றிப்படி ஆசிரியர், ஆறுதல் நிறுவன வரலாற்றுப் பாட ஆசிரியர்

**பிரதி சனிக்கிழமைகளில் காலை 6-7 மணிவரை தரம் 6, 7, 8 மாணவர்களுக்கான வரலாறு புவியியல் பாடங்களுக்கான வெற்றிப்படி பரீட்சை நடைபெறும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆட்கடத்தல்....

மறைந்திருந்த குற்றப்புலனாய்வுத்துறையினர் கைது செய்துள்ளனர்.

திருகோணமலையில் தனது ஆட்கடத்தல் நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்த இவர் காவல்துறையின் சந்தேக வட்டத்துக்குள் விழுந்ததை உணர்ந்த பின்னர் பதுளைக்குச் சென்று அங்கு தங்கியிருந்ததாகக் கூறப்படுகின்றது.

எனினும் அங்கும் பல நாட்கள் தங்கியிருக்க முடியாது எனத் தெரிந்துகொண்ட இவர் நாட்டை விட்டுத் தப்பியோட முயற்சிகளை மேற்கொண்டிருந்ததாகவும், அவ்வாறு தப்பியோடமுன் சேர்க்கக்கூடிய பணத்தொகைகளை சேர்க்கத் தொடங்கிய தாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கல்லறுத்து விற்பனை செய்யும்தொழிலில் ஆரம்பத்தில் ஈடுபட்டிருந்த இவர் பின்னர் அவுஸ்திரேலியாவில் உள்ள தனது உறவினர் ஒருவர் மூலம் ஆட்கடத்தலில் ஈடுபட்டுள்ளார். சுமார் 500 இலங்கையரை அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து நாட்டுக்குக் கடத்தியதாக இவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

## மயானத்திற்காகப்....

சுனாமியின் பின்னர் குடியேற்றப்பட்ட சிஙகள் மக்களும் இவ் இந்த மயானத்திலேயே உடலங்களைப் புதைத்துவருவதாகத் தெரிவ்த்த திரு மகேஸ்வரன், தற்போது 39 தமிழ்க் குடும்பங்களும் 36 சிங்களக் குடும்பங்களும் இம மயானத்தையே நம்பியிருப்பதாகத் தெரிவித்தார்.

மாகாணசபை உறுப்பினர் ஜெனார்த்தனன் அவர்களின் நிதி ஒதுக்கீடில் கிடைத்த 80,000 7பாவைக் கொண்டு இம் மயானத்தைப் புனர் நிமாமாணம் செய்ய பிரதேசசசபை முயற்சித்த போது புல்மோட்டைக் காவல்துறைப் பொறுப்பாளர் அப் புனர்நிர்மாணத்திற்கு தடையேற்படுத்தியுள்ளார்.

அப்பிரதேசம் புனித பூமிக்குரியது எனத் தெரிவித்தே இத் தடை ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து புல்மோட்டை பிரதேசச் செயலாளருக்கு இவ்விடயம் தெரியப் படுத்தப்பட்டதைத் தொடர்ந்து அவர் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி பொது மயானத்தை புணர்நிர்மாணிக்க முயற்சித்த போதும் அது கைகூடவில்லை.

அதனைத் தொடர்ந்து இப்பிரதேசம் புனித பூமிக்கு உட்பட்டதா? என்பதை உறுதிப்படுத்துமாறு கடிதம் மூலம் அகழ்வாராய்ச்சித் திணைக்களத்திடம் கேட்கப்பட்டுள்ளது எனத் தெரியவருகின்றது.

இப்பிரச்சனை தொடர்பாக திருகோணமலை மனிதவுரிமை ஆணைக்குழு மற்றும் சட்டஉதவி ஆணைக்குழு ஆகியவற்றிடம் முறையிட்டுள்ளதாகவும் மகேஸ்வரன் தெரிவித்தார்.

உரிய தீர்ப்பு வரும்முன் மரணங்கள் சம்பவிக்குமானால் உடலங்களைப் புதைப்பதற்குப் போராட்டம் ஒன்றையே முன்னெடுக்க வேண்டும் என அப்பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

## கிழக்கை இழக்கத்....

கம்பஹா மாவட்டத்தில், வத்தளை பிரதேசத்தில் வேலேயகொட பிரதேசத்தில் நடைபெற்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் ஹக்கீம் இதனைக் கூறினார்.

அமைச்சர் ஹக்கீம் அங்கு உரையாற்றும் பொழுது மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தை விட்டு வெளியேற்றப்படும் சந்தர்ப்பத்தில், கிழக்கு மாகாண சபை ஆட்சியிலும் நாங்கள் நிலைத்திருக்க முடியாது. அவ்வாறான சந்தர்ப்பத்தில் அங்கு அரசாங்கத்திற்கு அளித்து வரும் ஆதரவை நாங்கள் விலக்கிக் கொள்ள நேரிடும். அவ்வாறானால் அங்கு ஆட்சியமைக்க முன்வருமாறு கூடுதலான ஆசனங்களைப் பெற்றுள்ள கட்சியான தமிழ் தேசியக் கூட்டமைப்பை கிழக்கு மாகாண ஆளுநர் கோருவார், அவ்வாறான சந்தர்ப்பத்தில் முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவை கூட்டமைப்பினர் கோரக்கூடும். அவ்வாறன்றி, பலத்தை நி'ரூபிக்க முடியாத பட்சத்தில் மாகாண சபையை ஆளுநர் கலைத்து விடலாம். அவ்வாறானால், நிலைமை என்னவாகும்? மீண்டும் தேர்தல் நடாத்த வேண்டி வரும்.

பிரேமதாசவை ஜனாதிபதி ஆக்கியவர்கள் நாங்கள். சந்திரிக்காவை ஜனாதிபதி ஆக்கியவர்களும் நாங்கள் தான். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச மீண்டும் ஜனாதிபதி ஆவதானாலும் அதனை நாங்கள் தான் தீர்மானிக்க வேண்டியவர்களாக இருப்போம் என அவர் மேலும் தெரிவித்தார்

## ஒப்புதல் வாக்கு....

காட்டி வருவதாக அத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

பொதுநலவாய மாநாட்டின் போது உருவாக்கப்பட்டிருந்த முதலீட்டாளர் கவர்வு நடவடிக்கைகளில் குச்சவெளி உல்லாப் பயணத் திட்டத் தகவல்கள் பன்னாட்டு முதலீட்டாளர்களிடம் கையளிக்கப் பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது.

2011 ம் ஆண்டில் அமைச்சரவை அங்கீகாரமானது, ஸ்ரீலங்கா முதலீட்டுச் சபையின் ஊடாக நாற்பது சுற்றுலாத்துறைத் திட்டங்களை உருவாக்கும் நோக்குடன் முன்னெடுக்கும் முகமாக 510 ஏக்கர் குச்சவெளிக் காணிகளை 99 வருடக் குத்தகைக்கு வழங்கவும், அதற்கென ஏக்கரொன்றுக்கு வருடத்திற்கு 20 மில்லியன்கள் குத்தகைப் பணமாக அறவிடவும், அனுமதித்திருந்தது. ஆனால் 2013ம் ஆண்டில் முதலீட்டுச் சபையானது 10 ஏக்கர் குச்சவெளிக் காணிகளை ஏக்கரொன்றுக்கு 65 மில்லியனைக் குத்தகையாக அறிவிட்டு வழங்கியுள்ளது.

இவ்வாறு ஏக்கரொன்றுக்கு மூன்று வருடங்களில் 200வீத குத்தகை அதிகரிக்கப்பட்டிருப்பதால் முதலீட்டாளர்கள் முதலிடத் தயக்கம் காட்டிவருகின்றனர்.

## கிழக்கில் ஆட்சி......

பிளவுகள் ஏற்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதனால் கிழக்கில் ஆட்சியில் மாற்றம் ஏற்படும் வாய்ப்புக்கள் உள்ளதாக எதிர்வு கூறப்பட்ட நிலையில் இக் கருத்தை பிரதி அமைச்சர் வெளியிட்டுள்ளார். கொழும்பில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் 12ம் திகதி நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையில் " சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்பது இந்த நாட்டின் முஸ்லிம் சமூகம் அல்ல என்பதனை நான் தெளிவாக குறிப்பிடுகின்றேன். அந்தக் கட்சி நவநீதம் பிள்ளைக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளது. ஆனால் அவ்வாறு அறிக்கை சமர்ப்பித்தது என்பதற்காக முஸ்லிம் நாடுகள் ஜனாதிபதியுடன் கோபிக்கப் போவதில்லை. அண்மையில் நான் மத்திய கிழக்கு நாடுகளுக்கு சென்றிருந்த போது அதனை உறுதி செய்து கொண்டேன். கிழக்கு மாகாண சபையிலிருந்து அந்தக் கட்சி விலகினாலும் எந்தப் பாதிப்பும்...

ஏற்படாது. காரணம் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் யாவரும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுடனேயே இருக்கின்றனர். கிழக்கு மாகாண சபை பிரதிநிதிகள் பிரதேச மக்களின் நலனுக்காகவே செயற்படுவார்கள்.

அமைச்சர் ஹக்கீமுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமா? என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் டிலான் பெரேரா "அமைச்சர் ஹக்கீமுக்கு எதிராக நாங்கள் ஏன் நடவடிக்கை எடுக்கவேண்டும்? அமைச்சரவையில் உள்ள அமைச்சர்களுக்கு கூட்டு பொறுப்பு உள்ளது. அந்தக் கூட்டுப் பொறுப்பை உணர்ந்து செயற்படவேண்டியது அமைச்சர்களின் பொறுப்பாகும். அவர்கள் கூட்டுப் பொறுப்பை உணர்ந்து செயற்படுவார்கள் என்று நம்புகின்றோம். ஒருவேளை கூட்டுப் பொறுப்பை உணராமல் சில அமைச்சர்கள் செயற்பட்டால் ஏன் அவ்வாறு செயற்பட்டீர்கள் என்று நீங்கள் கேள்வி யெழுப்பவேண்டும்'' எனத் தெரிவித்தார்..

## ஜெனீவாத் தீர்மான....

இடம்பெற்றது.

திருகோணமலை மாவட்ட ரணவீர குடும்பங்களுக்கான சங்கத்தினராலும், பிரஜைகள் அமைப்பு மற்றும் பௌத்த விகாரைகளின் மத குருமார் ஆகியோர் இணைந்து இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தனர்.

இவ்வார்ப்பாட்டத்தில் கிழக்கு மாகாணசபை தவிசாளர் ஆரியவதி கலபதி உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்களால் கையொப்பம் இடப்பட்ட ஜெனீவா தீர்மானத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் செய்தி அடங்கிய மனு ஒன்று இதன்போது கிழக்கு மாகாண ஆளுனர் றியல் அட்மிரல் மொஹான் விஜியவிக்கிரமவிடம் கையளிக்கப்பட்டது.

மனுவினை இலங்கைக்கான அமெரிக்க தூதரகத்திற்கும்; ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸவிற்கும் அனுப்பி வைப்பதாகவும் ஆளுனர் இதன்போது தெரிவித்தார்.

## நியமனம் கேட்கும்...

தமது கோரிக்கைகள் அடங்கிய மனுவை கையளித்தனர்.

ஆர்ப்பாட்டத்தின் போது, பல்வேறு சுலோகங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்தியிருந்ததோடு அமைதியான முறையில் தமது ஆர்ப்பாட்டத்தினை நடத்தினர்.

சங்கத்தின் தலைவர் உ.வேந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட பட்டதாரிகள் "எங்களுக்கு அரச நியமனங்கள் வழங்குங்கள், அவ்வாறு நியமனம் வழங்கப்படுமாயின் நாட்டின் எப்பகுதியிலும் கடமையாற்றத் தயாராக இருக்கிறோம்" என தெரிவித்தனர்.

பேராதனை பல்கலைக்கழகத்தில் வெளிவாரியாக பட்டப்படிப்பை நிறைவு செய்த நாங்கள் பல்கலைக்கழக விரிவுரையாளர்களது வேலை நிறுத்தப் போராட்டங்கள் காரணமாக பட்டப் பூர்த்திச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்வதற்குக் கால தாமதம் ஏற்பட்டது. அதனால் ஏற்கனவே நியமனங்கள் வழங்கப்பட்ட வேளை இணைய முடியாமல் போனது.

இந்தத் தாமதத்திற்கு "நாங்கள் பொறுப்பல்ல, வேலையில்லாப்பிரச்சினை காரணமாக பல்வேறு சிக்கல்களை எதிர் நோக்குகின்றோம்" எனவே எங்களுக்கு நியமனங்கள் வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கவும் என அரசாங்க அதிபரிடம் கோரிக்கை விடுத்தனர்.

2012ஆம் ஆண்டு உள்வாரியாக பூர்த்தி செய்யப்பட்டவர்கள் உள்வாங்கப்பட்டுள்ள நிலையில் 2011ஆம் ஆண்டு வெளிவாரியாக பூர்த்திசெய்தவர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் கவலை தெரிவித்தனர்.

## 8 மாதங்களின்....

கிடைத்துள்ளது. அத்தகவல் கிடைத்த தினத்திலேயே அப் பெண்ணின் தகப்பனாரும் மரணமானார். மரணமாவற்கு முதல் வாரமும் தன்னுடன் கதைத்த மனைவியின் மரணத்தில் சந்தேகமடைந்த கணவர் காத்தமுத்து வேதானந்தம உடன் சட்ட நடவடிக்கையினை மேற்கொண்டு உடலை இலங்கைக்கு அனுப்புமாறு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மற்றும் வெளிவிவகார அமைச்சு ஆகியவற்றிற்கு கணவர் முறைப்பாடு செய்துள்ளார். பிரேத பரிசோதனையில் அவர் இருதய நோய் காரணமாக இறந்துள்ளதாக வெளிநாட்டு அமைச்சு கணவருக்குத் துகுவுல் அனுப்பியுள்ளது.

அதன் பின்னர் உடலை உடனடியாக இலங்கைக்கு கொண்டுவந்து தருமாறு கேட்டு சம்மதக் கடிதத்தினை அமைச்சுக்கு கணவர் கையளித்தார். ஆனால் இதுவரை உடல் இலங்கைக்கு கொண்டு வரப்படவில்லை. மரணித்து சுமார் 8 மாத காலமாகியும் உடல் இலங்கைக்கு கொண்டு வரப்படாதுள்ளது.

## அத்துமீறலுக்கு எதிராக...

துரைரெட்ணம் , இந்திரகுமார் பிரசன்னா ஆகியோருடன் வர்த்தகர் மோகன் ஐயங்கேணி விபுலானந்தாபுர கிராம அபிவிருத்திச் சங்க தலைவர் கணேஸ் ஐயங்கேணி கிராம அபிவிருத்திச் சங்க தலைவர் மகேந்திரன் பாரதிபுரம் கிராம அபிவிருத்திச் சங்க தலைவர் ரவீந்திரன் ஆகியோருடன் கிரம பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

(1) ஐயங்கேணி பிரதேச தமிழ் பகுதிகளில் காணி அபகரிப்பை தடுத்து நிறுத்த வேண்டும்.

(2) ஹிஜ்ரா எனும் கிராமத்தை ஐயங்கேணி தமிழ் கிராம சேவகர் பகுதியில் இணைக்கும் நடவடிக்கையை முற்றாக கைவிடல்.

(3) ஐயங்கேணி கிராம சேவகர் பிரிவில் கடமையாற்றும் கிராம சேவகரை இடம்மாற்றம் செய்து தமிழ் உத்தியோகஸ்தரை நியமித்தல் போன்ற கோரிக்கைகளை முன் வைத்தே இன்றைய எதிர்ப்பு கூட்டம் இடம்பெற்றது.

ஒன்றுகூடலின் பின்னர் செங்கலடி பிரதேச செயலகத்திற்கு கிராம குழுவுடன் தமிழ் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர்களும் சென்று மகஜர் கையளிக்கப்பட்டு கலந்துரையாடல் இடம்பெற்றது.

(மட்டு நியூஸ்)

## புலமைப் பரிசில் பரீட்சையில் வென்றவர்களுக்கு தேசிய சேமிப்பு வங்கி பரிசில்கள்



தேசிய சேமிப்பு வங்கியின் திருகோணமலைக் கிளையானது புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்குப் பரிசில்களை வழங்கி கௌரவித்துள்ளது.

திருகோணமலைக் கிளையில் கணக்குளை வைத்திருக்கும் 90 மாணவர்களுக்கே இப்பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை பெருந்தெரு விக்னேஸ்வரா மகாவித்தியாலயத்தில் தேசிய சேமிப்பு வங்கியின் கிளை முகாமையாளர் திரு. வ.சு யோகேந்திரன் தலைமையில் இடம்பெற்றுள்ளது.

(உதயராஜ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இமாம் செய்யத்தகு சமயம்




அல்லாஹ் கூறுகிறான்: மனிதன் அவசரக்காரனாகவே இருக்கின்றான். (அல்குர்ஆன் 17:11) என்று நபி(ஸல்)அவர்கள் கூறுகிறார்கள். நிதானம் அல்லாஹ்விடத்தில் உள்ளதாகும். அவசரம் சைத்தானிடம் உள்ளதாகும். (அறிவிப்பவர்: ஸஹ்ல் பின் ஸ:.து(ரலி) நூல்: திர்மிதி 1935)

நமதருகில் நின்று தொழுவோரில் பலர் தக்பீர்களில் இமாமை முந்திச் செல்கின்றனர். இமாமுக்கு முன்னரே ஸலாம் கொடுத்து விடுகின்றனர். சில சமயங்களில் நாமே இவ்வாறு நடந்துகொள்கிறோம். இதனை நாம் தவறாக நினைப்பதே கிடையாது. ஆனால் நபி(ஸல்)அவர்கள் கடுமையாக எச்சரிக்கின்றார்கள். இமாமுக்கு முன்பே தலையை உயர்த்துபவர் அவரது தலையை கழுதையின் தலையாக அல்லாஹ் மாற்றிவிடுவதை உணர்ந்து கொள்ளவில்லையா?

தொழுகைக்காக வருபவரே அமைதியாகவும் நிதானமாகவும் வரவேண்டும் என்ற கட்டளையிருக்கும் போது தொழுகையையே அவசரமாகத் தொழுவது தவறில்லையா?! இமாமை முந்திச் செல்லக் கூடாது என்பதை தவறாகப் புரிந்து கொண்ட சிலர் இமாமை விட்டும் மிகத் தாமதமாகச் செல்கின்றனர். இதுவும் முறையற்ற செயலாகும். இமாமை பின் தொடரும் முறையை மார்க்க அறிஞர்கள் விளக்கியுள்ளார்கள்.

இமாம் தக்பீர் கூறி முடித்தவுடன் அவரை பின்பற்றுபவர் தனது செயல்களை ஆரம்பிக்க வேண்டும். தொழுகையின் அனைத்து நிலைகளிலும் இவ்வாறே பின்பற்றவேண்டும். தக்பீருக்கு முந்தவோ பிந்தவோ கூடாது. இதுவே சரியான முறையாகும்.



# அல்லாஹ்வின் சோதனைகள்

இறைவன் தனக்கென வடிவமைத்துள்ள வழிமுறைகளுக்கு அமைவாகவே இந்த உலகின் அனைத்து செயற்பாடுகளையும் இயக்கிக் கொண்டிருக்கின்றான். அந்த வகையில் மனிதர்களை மாறி மாறி பல்வேறு முறைகளில் சோதிப்பதும் அவனின் வழிமுறையாகும்.

இந்த உலகில் மனிதர்கள் நிம்மதி, சந்தோசம், பிரச்சினைகள், சிக்கல்கள் என எந்நிலையில் வாழ்ந்தாலும் அனைவரும் அவரவருக்கென இறைவன் விதித்தபடி சோதிக்கப்படுகிறார்கள் என்பதை முதலில் புரிந்து கொள்வது அவசியமாகும். எனவே ஏழ்மை, கஷ்டம் மற்றும் நோயில் வாழ்கிற ஒருவரும் செல்வ செளிப்புடன் ஆரோக்கியமாக வாழும் ஒருவரும் முறையே சோதிக்கப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றார்கள்.

அவ்விருவரிடையே இவ்வாறான நிலைமைகளை மாறி மாறி வரச் செய்வதும் இறைவனின் வழிமுறையாகும்.

சிலருக்கு இறைவன் குடும்பம் குழந்தைகளை கொடுத்தும் சோதிப்பான், சிலரை தனிமை படுத்தியும் சோதிப்பான். ஆக இந்த உலக வாழ்க்கை முழுவதும் சோதனைக்கான காலமாகும். இந்த உண்மைகளையே பின்வரும் இறைவசனங்கள் தெளிவு படுத்துகின்றன.

ஒவ்வோர் ஆத்மாவும் மரணத்தைச் சுவைப்பதாகவே இருக்கிறது் பரீட்சைக்காக கெடுதியையும், நன்மையையும் கொண்டு நாம் உங்களைச் சோதிக்கிறோம். பின்னர், நம்மிடமே நீங்கள் மீட்கப்படுவீர்கள். (அல் குர்ஆன் 21:35)

உங்கள் பொருள்களும் உங்கள் மக்களும் (உங்களுக்குச்) சோதனைதான் ஆனால் அல்லாஹ் – அவனிடம் தான் மகத்தான (நற்) கூலியிருக்கிறது. (அல் குர்ஆன் 64:15)



நிச்சயமாக நாம் உங்களை ஓரளவு அச்சத்தாலும், பசியாலும், பொருள்கள், உயிர்கள், விளைச்சல்கள் ஆகியவற்றின் இழப்பினாலும் சோதிப்போம் ஆனால் பொறுமையுடையோருக்கு (நபியே!) நீர் நன்மாராயங் கூறுவீராக! (அல் குர்ஆன் 2:155)

- மனிதர்கள் உணர்ந்து திருந்துவதற்கான சோதனை
- உண்மையாளர்களையும் பொய்யர்களையும்

## சூனியம் பற்றி நபி அவர்கள் கூறுவதாவது :

சூனியம் மற்றும் ஜோஸியக்காரனிடம் சென்று, அவன் கூறுவதை உண்மை என நம்புபவன் இஸ்லாத்தை விட்டு வெளியாகிவிட்ட கா:.பிர் ஆவான்.

நபி(ஸல்)அவர்கள் கூறுகிறார்கள்: சூனியக்காரனிடமோ, ஜோஸியக்காரனிடமோ சென்று அவன் கூறுவதை உண்மை என நம்புகின்றவன், நிச்சயமாக முஹம்மது நபி(ஸல்)அவர்களின் மீது இறக்கப்பட்ட மார்க்கத்தை நிராக்ரித்து விட்டான். (அறிவிப்பவர்: அபூஹுரைரா -ரலி, நூல்: அஹமத் 9171)

இவர்களுக்கு மறைவான ஞானமெல்லாம் கிடையாது என்று தெரிந்து கொண்டே அவர்களை சோதிப்பதற்காகவோ அல்லது இதுபோன்ற வேறு ஏதேனும் காரணத்திற்காகவோ அவர்களிடம் செல்பவன் கா:.பிராகி விடமாட்டான். எனினும் அவனுடைய நாற்பது நாட்களின் தொழுகை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.




# சிக்கன் கோலா உருண்டைக் குழம்பு

**பொதுவாக மட்டனில் தான் கோலா உருண்டை செய்வது வழக்கம். ஆனால் சிக்கனிலும் செய்து சாப்பிடலாம்.**

### தேவையான பொருட்கள்

சிக்கன் (Skinless, Boneless Chicken) : 1 - 4 கிலோ, வெங்காயம் - 1 பெரியது, தக்காளி – 1, புளி - சிறிய நெல்லிக்காய் அளவு, இஞ்சி பூண்டு – அளவாக, கிராம்பு – 2, ஏலக்காய் - 1, பட்டை - 1

சிக்கன் உருண்டைகள் செய்ய:
வெங்காயம் - 1, அரைத்து வைத்துள்ள இஞ்சி பூண்டு அரைத்து - 1 மே.கரண்டி, பொட்டுகடலை – 1 - 2 கப், எண்ணெய் - சிறிதளவு, மஞ்சள் தூள் - 1 - 2 தே.கரண்டி, மிளகாய் தூள் - 1 தே.கரண்டி , சோம்பு தூள் - 1 தே.கரண்டி, உப்பு - தேவையான அளவு

### செய்முறை

வெங்காயம், தக்காளியினை பொடியாக நறுக்கி கொள்ளவும். இஞ்சி, பூண்டு விழுதினை அரைத்து கொள்ளவும். தாச்சியில் எண்ணெய் ஊற்றி குழம்பிற்கு தாளிக்க கொடுத்துள்ள பொருட்களை இஞ்சி, பூண்டு விழுதினை பாதி, வெங்காயம் என்று ஒன்றின்பின் ஒன்றாக சேர்த்து வதக்கி கொள்ளவும். பின்னர் வெங்காயம் சிறிது வதங்கியவுடன் தக்காளியினை சேர்த்து வதக்கி கொள்ளவும். பின் புளியினை 2 - 3 கப் தண்ணீர் ஊற்றி கரைத்து கொள்ளவும். புளி தண்ணீருடன் குழம்பிற்குள் மஞ்சள் தூள் 1 - 2 தே.கரண்டி, மிளகாய் தூள் 1 தே.கரண்டி, உப்பு - தேவையான அளவு சேர்த்து கலந்து கொண்டு தாச்சியில் ஊற்றி கொதிக்கவிடவும்.



பின்னர் சிக்கனை மிக்ஸியில் போட்டு அரைத்து கொள்ளவும். வெங்காயத்தினை பொடியாக நறுக்கி கொள்ளவும். பொட்டுகடலையினை மிக்ஸியில் போட்டு அரைத்துக் கொள்ளவும். சிக்கன், வெங்காயம், தூள் வகைகள், அரைத்த பொட்டுகடலை, இஞ்சி-பூண்டு என்பவற்றையும் சேர்த்து கலந்து கொள்ளவும். சிக்கன் கலவையின்னை சிறிது எண்ணெய் தொட்டு சிறிய சிறிய உருண்டைகளாக உருட்டி கொள்ளவும்.

தேங்காய், கசகசா, சிறிது தண்ணீர் சேர்த்து மிக்ஸியில் பட்டுப் போல அரைக்து கொள்ளவும்.

புளிகரைசல் நன்றாக கொதித்த பிறகு, தேங்காய்ப்பாலை சேர்த்து 3 - 4 நிமிடங்கள் வேகவிடவும். கொதிக்கும் பொழுது, உருட்டி வைத்துள்ள சிக்கன் உருண்டைகளை குழம்பில் ஒவ்வொன்றாக மெதுவாக போடவும். சுமார் 15 நிமிடங்களில் சிக்கன் உருண்டைகள் அனைத்தும் குழம்பில் வெந்து மேலே மிதக்கும். கடைசியில் கொத்தமல்லி தூவி பறிமாறவும்.

கவனிக்க:
புளியினை அதிகம் சேர்க்க வேண்டாம். புளிக்கு பதிலாக எலுமிச்சை சாறு சேர்த்து கொள்ளலாம்.
சிக்கன் உருண்டைகள் மிகவும் தண்ணியாக பிடிக்கவரவில்லை என்றால் சிறிது பொட்டுகடலை மாவு சேர்த்து கொள்ளவும்.
சிக்கன் உருண்டைகளை உருட்டும் பொழுது

# உடல் நறுமணத்திற்கு டிப்ஸ்


சோம்பு - 100 கிராம், கஸ்தூரி மஞ்சள் - 100 கிராம், வெட்டி வேர் - 200 கிராம், அகில் கட்டை - 200 கிராம், சந்தனத் தூள் - 300 கிராம், கார்போக அரிசி - 200 கிராம், தும்மராஷ்டம் - 200 கிராம், விலாமிச்சை - 200 கிராம், கோரைக்கிழங்கு - 200 கிராம், கோஷ்டம் - 200 கிராம், ஏலரிசி - 200 கிராம், பாசிப்பயறு - 500 கிராம்

இவைகளை தனித்தனியாக காயவைத்து தனித்தனியாக அரைத்து பின் ஒன்றாகக் கலந்து வைத்துக்கொண்டு, தினமும் குளிக்கும் போது, தேவையான அளவு எடுத்து நீரில் குளித்து வந்தால் உடல் முழுவதும் நறுமணம் வீசும். இவ்வாறு தொடர்ந்து குளித்து வர சொறி, சிரங்கு, தேமல், படர்தாமரை, கரும்புள்ளி, வேர்க்குரு, கண்களில் கருவளையம், முகப்பரு, கருந்திட்டு முதலியவை மாறும். மேலும் உடலில் உண்டாகும் நாற்றமும் நீங்கும். மேனி அழகுபெறும்.



இது பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் பயன்படுத்த உகந்த வாசனை குளியல் பொடியாகும்.

# வயிறு சதை குறைக்க



பெண்கள் பிரசவத்திற்கு பின் உடலை சரியாக பராமரிப்பதில்லை. இதனால் அவர்களின் உடல் பல உபாதைகளை சந்திக்க நேரிடுகிறது. அதுபோல் பிரசவத்திற்கு பின் அடிவயிற்றில் துணி சுற்றி கட்டாதவர்களுக்கும் அறுவை சிகிச்சை மூலம் குழந்தை பெற்றவர்களும் பெல்ட் போடாதவர்களுக்கும் வயிற்றில் சதை அதிகமாக காணப்படும்.



இவர்கள் சின்ன வெங்காயத்தை பசுநெய்யில் வதக்கி நன்கு மெழுகு போல் அரைத்து அதனுடன் பனங்கற்கண்டு சேர்த்து காலை மாலை என தினமும் இருவேளை ஒரு தேக்கரண்டி அளவு சாப்பிட்டு வந்தால் அடிவயிறு சதை குறைந்து உடல்

# ஹப்பி குடும்ப வாழ்க்கைக்கு

குடும்ப வாழ்க்கை என்றாலே அங்கே கவலை மட்டுமே குடிகொள்ளும் என்று நினைப்பது தவறு. சந்தோஷமான குடும்ப வாழ்க்கைக்கு நாம் பின்பற்றும் வழிமுறைகளும் முக்கிய காரணம்.

திருமணத்துக்குப் பிறகு. அதற்கு முன்பிருந்த உறவுகளை சொல்லி அதனால் பிரச்சினைகள் உருவாவதை தவிர்த்து விடவேண்டும். முன்பிருந்த காதல், பிரச்சினை, குழப்பங்களுக்கு வழி வகுத்துவிடும். ஆகவே அந்த மாதிரியான எண்ணங்களுக்கு முழுக்கு போட்டுவிடுங்கள். திருமணத்துக்கு பிறகும் முந்தைய சில உறவுகளைத் தொடர்ந்தால் அதுவே உங்கள் வாழ்க்கைக்கு எதிராக அமைந்து விடும். இன்றைய கொலை, கற்பழிப்பு போன்ற குற்றங்களுக்கு அடிப்படை காரணமே இந்த மாதிரியான விஷயங்கள்தான்.

திருமணமாகி கணவர் வீட்டுக்கு செல்லும் பெண், அங்குள்ள கணவரின் உறவினர்கள் மற்றும் சுற்றத்தாரையும் ஏற்றுக் கொண்டு அன்பு, மரியாதை செலுத்த வேண்டும்.

வெவ்வேறு இடங்களில் இருந்த ஆணும், பெண்ணும் இணையும்போது பல்வேறு விஷயங்களில் முரண்பாடுகள் ஏற்படவே செய்யும். அதை சரி செய்து ஒத்துப் போவது நல்லது.

வாழ்க்கை என்றால் நிறைய நெருக்கடி இருக்கத்தான் செய்யும். ஆனால் அதையெல்லாம் சகஜமாக ஏற்றுக் கொள்ள வேண்டும். உங்களுடைய துணைவரிடம் நல்ல குணங்கள் இருக்கும்போது அதை கண்டுகொள்ளாமல், குறைபாடுகளை மட்டும் பெரிதாக்குவதை தவிர்க்க வேண்டும். இருவரது குறைபாடுகளையும் பரஸ்பரம் ஏற்றுக் கொண்டு அதற்கு நல்லதோர் தீர்வு காணலாம்.

தொடரும் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கில் இயங்குவது முஸ்லிம் அடிப்படைவாதமே



## ஜாதிக ஹெலஉறுமய

கிழக்கில் பௌத்த அடிப்படை வாதம் அல்ல முஸ்லிம் அடிப்படைவாதமே இயங்குகின்றது. அத்துடன் தேசத்துரோக குற்றமிழைத்த அமைச்சர் ரவூப் ஹக்கீமுக்கு எதிராக நடவடிக்கைகளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச உடனடியாக மேற்கொள்ள வேண்டுமெனவும் அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியான ஜாதிக ஹெல உறுமய குற்றஞ் சாட்டியுள்ளது.

பத்தரமுல்லையிலுள்ள ஜாதிக ஹெல உறுமயவின் ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது. இங்கு உரையாற்றிய ஜாதிக ஹெல உறுமயவின் தேசிய அமைப்பாளரும் மத்திய குழு உறுப்பினருமான நி'ாந்த வர்ணசிங்க நவி பிள்ளையிடம் கையளித்த அறிக்கையை அவர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவராக கையளிக்கவில்லை. மாறாக இலங்கை அரசாங்கத்தின் அமைச்சரவை அந்தஸ்துள்ள நீதியமைச்சராகவே நவிப்பிள்ளையிடம் இவ் அறிக்கையை கையளித்துள்ளார்.

இது தேசத்துரோகச் செயலாகும். எனவே அமைச்சர் ஹக்கீமுக்கு எதிராக ஜனாதிபதி உடனடியாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இன்றும் அரசாங்கத்திற்குள் இருந்து கொண்டு மாகாண தேர்தலில் தனித்தே போட்டியிடுகின்றார். இதன் மூலம் தமது பிரிவினைவாதத்தை வெளிப்படுத்துகிறார் என்று மேலும் தெரிவித்தார்.

# திருகோணமலைச் சிறுமி கடத்தப்படாரா?



காணாமற்போன தனது தமையனைத் தேடியழுத திருகோணமலை செல்வநாயகபுரத்தைச் சேர்ந்த சிறுமி விபூசிகா கடத்தப்பட்டுள்ளதாக உலகத் தமிழ்ச் செய்திச் சேவை தெரிவிக்கின்றது.

மேலும் அச் செய்திச் சேவையானது பேஸ்புக்கில் வெளியான செய்தியொன்றையும் இணைத்துள்ளது. அச்செய்தியின் படி மூன்று தமையன்களுடன் நான்காவதாகப் பிறந்த பெண் குழந்தையான விபூசிகாவின் மூத்த தமையன் திருகோணமலையில் வைத்து 2006ம் ஆண்டு இனந்தெரியாதவரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியாகியதை தொடர்ந்து வன்னிக்குள் இடம்பெயர்ந்த அக்குடும்பம் இறுதி யுத்தத்தில் இரண்டாவது அண்ணனையும் எறிகணைக்குப் பலிகொடுத்துள்ளது எனத் தெரிவிக்கின்றது.

மேலும் மூன்றாவது தமையன் படையினரிடம் சரணடைந்ததாகவும் அவர் புனர்வாழ்வு முகாம் ஒன்றில் இருப்பதை நல்லிணக்க ஆணைக்குழுவால் வெளியிடப்பட்ட புத்தகத்தில் உள்ள படம் ஒன்று வெளிக்காட்டியதைக் கண்டுகொண்ட விபூசிகா அதனைத் தொடர்ந்து தனது தமையனின் விடுதலைக்காக அனைத்துப் போராட்டங்களிலும் பங்கு ப்ற்றியிருந்தார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விபூசிகா புளியம்பொக்கணை முசுறன்பிட்டி பிரதேசத்தில் தர்மபுரம் மகா வித்தியாலையத்தில் தரம் 8 லில் கல்வி கற்று வருகிறாள் எனவும் அச் செய்தி தெரிவிக்கின்றது.

என்னும் தருமபுரத்தில் இருந்து கிடைத்த செய்திகளின் படி விடுதலைப் புலிச் சந்தேக நபரொருவர் அவர்களது வீட்டில் மறைந்திருந்ததாகவும் அதனை அடுத்தே அவ் வீட்டை இராணுத்தினர் சுற்றி வளைத்துள்ளதாகவும், காவல்துறை அவ் வீட்டினுள் புகுந்து விசாரணைகளை நடாத்திக்கொண்டிருப்பதாகவும் இச் செய்தி எழுதும் பின்னிரவு நேரம் வரையிலும் அவ்வீட்டை அயலவர் எவராலும் நெருங்க முடியாதுள்ளதாகவும் தெரிவிக்கின்றன.

அவ் வீட்டினுள் விபூசிகாவும் அவரின் தாயாரான ஜெயகொளரி யும் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இச் செய்தியினை காவல்துறை ஊடகப் பேச்சாளர் உறுதிப்படுத்தியுள்ளார். எனினும் இந் நடவடிக்கையுடன் இராணுவம் எவ்வகையிலும் சம்பந்தப்படவில்லை என்று தெரிவித்துள்ளார். சுற்றிவளைப்பையும் விசாரணைகளையும் காவல்துறையினரே முன்னெடுப்பதாகத் தெரிவிதுள்ள அவர் இராணுவம் இந் நடவடிக்கையுடன் தொடர்பு படவேயில்லை என அறுதியாகக் கூறியுள்ளார்.

# திருமலையில் மகளிர்தினக் கொண்டாட்டம்



சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, திருகோணமலை மாவட்டச் செயலாளர் திருமதி ஜெலதீபன் அவர்களின் ஏற்பாட்டின் கீழ், திருகோணமலைப் பிரதேச சபையினரால் கடந்த 08.03.2014 அன்று மதியம் 2.00 மணிக்கு உவர்மலை விவேகானந்தா கல்லூரியில் மகளிர் தினச் சிறப்பு நிகழ்வுகள் நடைபெற்றன. இந்நிகழ்வில் மாவட்டத்தின் பல பிரமுகர்கள் அதிதிகளாகக் கலந்து சிறப்பித்ததுடன், பல்வேறு துறைகளில், பல்வேறுபட்ட இடங்களில் சிறந்து விளங்கும் பெண்களைக் கௌரவித்து விருதுகளும் வழங்கப்பட்டன.



மேலும், கிராமப் புறங்களில் இலைமறை காய்களாய் இருக்கும் பெண்களின் திறமைகளை வெளிக் கொண்டுவரும் முகமாக அவர்களால் தயாரிக்கப்பட்ட நடன நிகழ்வுகளும், தேவாநகர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் 'வெளிநாட்டுப் பயணம்' என்னும் நாடகமும் இடம்பெற்றன. அதுமட்டுமன்றி, கணவனால் கைவிடப்பட்ட மற்றும் விதவைகளாய் வாழ்கின்ற பெண்களில் தம் சொந்த முயற்சியின் மூலம் தங்கள் குழந்தைகளை இன்றைய சமுதாயத்திற்கு நல்லதொரு பிரஜையாக வளர்த்துக் கொடுத்திருக்கின்ற பெண்களையும் இனங்கண்டு அவர்களையும் கௌரவித்தமையும், இந்நிகழ்விலே 500ற்கும் மேற்பட்டவர்கள் கலந்து சிறப்பித்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஜெய்)

## சர்வதேசச் செய்திகள்

### வன்புனர்வாளருக்கு மரணதண்டனை

டில்லியில் கடந்த 2012ம் வருடம் டிசம்பர் மாதத்தில் ஓடும் பேருந்தில் 23 வயது மாணவியை பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கிய வழக்கில், குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்ட நான்கு பேருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டது.

கடந்த வருடம் செப்டம்பர் மாதத்தில் தெற்கு தில்லி விரைவு நீதிமன்றம் வழங்கிய இந்த தீர்ப்பை எதிர்த்து, தண்டிக்கப்பட்ட இந்த நால்வர் சார்பில் டில்லி உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டது. அங்கும் அவர்களுக்கு மரண தண்டனை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து அவர்கள் உச்ச நிதிமன்றில் வழக்குத் தாககல் செய்யவுள்ளனர்.

### மக்களுடன் மாயமான விமானம்

மலேசிய போயிங் விமானமொன்று மாணமாகி ஆறு நாட்கள் கடந்துள்ள நிலையில் அவ்விமானத்திற்கு என்ன நடந்தது என எவ்வித செய்திகளையும் தற்போது வரை பெற்றுக்கொள்ள முடியவில்லை.

செல்லவேண்டிய திசையில் இருந்து சுமார் 100 மைல்கள் வேறு திசையில் அவ்விமானம் பயணித்துள்ளது.

தொடர்பு துண்டிக்கப்பட்ட பின்னரும் நான்கு மணி நேரங்கள் வானில் பறந்த பின்னரே அவ்விமானம் காணாமற் போயுள்ளது.

வியட்நாமின் எல்லையை அடைந்தபோது அதன் விமானி கடைசியாக அனுப்பிய செய்தி " ஆல் ரைட் - குட்நைட்" என்பதாக இருந்தது.

அவ்விமான்த்தின் விமானியொருவரான ஹமீட் என்னுடம் 27 வயதான இளைஞர் விமானி அறைக்குள் புகைப்படிக்கும் வழக்கமுடையவர் என்பதுடன் கடந்த 2011 மார்கழி மாதத்தில் இரண்டு பெண் நண்பிகளை விமானி அறைக்குள் பயணத்தின் போது அனுமதித்திருந்ததும் தற்போது தெரியவந்துள்ளது.

மலாக்கா நீரிணைக்கு மேலாக அவ்விமானம் பறந்ததாக மலேசிய வான்பறப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

### ஏலத்திற்கு வரும் நோபல் பரிசு

தென்னமெரிக்க நகைக் கடை ஒன்றில் கண்டுபிடிக்கப்பட்ட 1936 ஆம் ஆண்டின் சமாதானத்துக்கான நோபல் பரிசுப் பதக்கம் ஒன்று நியூயார்க்கில் ஏலத்துக்கு வரவுள்ளது.

### சீன ஆசிரியர்கள் பிரிட்டனுக்கு

பிரித்தானிய பள்ளிக்கூடங்களில் கணித தரத்தை வளர்ப்பதற்கான சிறப்புக் கல்வியை வழங்குவதற்காக சீனாவில் இருந்து ஆசிரியர்கள் கொண்டு வரப்படுகிறார்கள்.

பிரித்தானிய கல்வி நிர்வாகத்தினால் மேற்கொள்ளப்படும் ஒரு பரிமாற்றத் திட்டத்தின் கீழ் ஆங்கிலம் பேசக்கூடிய 60 ஆசிரியர்கள்வரை ஷங்காயில் இருந்து பிரிரத்தானியாவிற்குக் கொண்டு வரப்படுகிறார்கள்

### நேபாள மலைகள் வாடகைக்கு!

இமயமலைத் தொடரில், நேபாளத்திலுள்ள சில ஏறப்படாத மற்றும் தொலைதூரமான மலைச் சிகரங்களை, கட்டணம் வாங்கிக்கொண்டு தனியார் நிறுவனங்களுக்கு குத்தகைக்கு விடுவது என்ற புதுமையான திட்டம் பற்றி பரிசீலித்துவருவதாக நேபாள அரசு கூறுகிறது.

அறியப்படாத சில மலைச் சிகரங்கள் மீது மலையேறுவோருக்கு ஆர்வத்தை ஏற்படுத்தும் முயற்சியே இந் நடவடிக்கை என ஒருவர் கூறினார்.

### யப்பானில் நிலநடுக்கம்

நேற்று யப்பானிய கடற்பிரதேசத்தில் 6.1 ரிச்டர் அளவுடைய நிலநடுக்கம் ஒன்று உணரப்பட்டுள்ளது. 80 கிலோமீற்றர் கடலாளத்தில் இவ்வதிர்வு பதியப் பட்டுள்ளது. ஹிரோசிமாவில் இருந்து 100 மைல்கள் தென்மேற்குக் கடற் பிரதேசத்தில் எழுந்த நில அதிர்வு சுனாமியை உருவாக்கவில்லை என யப்பானிய அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கை இழக்கத் தயாரா?

## அரசிற்கு மு.கா சவால்




"அடுத்த சனாதிபதி யாரெனத் தீர்மானிப்பதும் நாமே"

வட மாகாண சபை தேர்தலிலும் தோல்வியடைந்து, கிழக்கு மாகாண சபையிலும் ஆட்சியைப் பறிகொடுத்தால் அரசாங்கத்தின் நிலைமை என்ன? அவ்வாறான நிலைமையில் முடியுமானால் மாகாண சபையை கலைத்து விட்டு, தேர்தல் நடத்தி வெற்றி பெற்றுக் காட்டட்டும் என அரசை நோக்கி முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் சவால் விட்டுள்ளார். 13

மேல் மாகாண சபை தேர்தலில்......

# நூல் வெளியீடு



நிலாவெளி பற்றிய தனது அனுபவப் பகிர்வுகளைக் கொண்ட புத்தகம் ஒன்றை 100 அகவைகளைக் கடந்துள்ள திரு.க.கெஜரெத்தினம் அவர்கள் எழுதி வெளியிட்டுள்ளார்கள். இந்நூல் ஒரு வரலாற்றுப் பதிவாக இருக்கும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

இன்று நிலாவெளி பலநோக்கு மண்டபத்தில் இந் நூல் காலை 10.30 மணிக்கு வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

(ஜீவன்)

# 8 மாதங்களின் பின்னரும் உடலம் கிடைக்கவில்லை

வறுமையின் காரணமாக வெளிநாடு சென்று மாரடைப்பால் மரணமான நான்கு கழந்தைகளின் தாயின் சடலத்தைப் பெற்றுத்தருமாறு அவரது கணவர் உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கல்முனை, நற்பிட்டிமுனை கிராமத்தை சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தாயாரான கணபதிப்பிள்ளை ரமணி என்ற குடும்பப் பெண் சீவனோபாயத்திற்காக கடந்த 2013 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 25ஆம் திகதி சவூதி அரேபியாவுக்கு வீட்டு வேலைக்காக சென்றுள்ளார்.

அதே ஆண்டு ஜூலை மாதம் 14 ஆம் திகதி சுகயீனம் காரணமாக அவர் மரணமானதாக அவரது கணவருக்கு ஒரு மாதத்தின் பின்னர் தகவல் 13

# திருமலைக்கு 594 மில்லியன்



திருகோணமலையின் அபிவிருத்திக்க என பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியில் இருந்து ஒதுக்கப்பட்ட ரூபா 594 மில்லியன்களை கையளிக்கும் விசேட நிகழ்வு திருகோணமலையில் கடந்த வாரம் சிங்கள மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. அந் நிகழ்வில் கலந்து கொண்ட பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராசபக்ச பிரதி அமைச்சர் சுசந்த புஞ்சிநிலமே அவர்களிடம் நிதிக்கையளிப்பில் ஈடுபடுவதைக் காணலாம்.

# ஜூலையில் நிரந்தர நியமனம்

தற்போது பயிலுனர் நியமனம் பெற்றுள்ள கிராம சேவையாளர்களுக்கு 14 வார முன்பதவிப் பயிற்சியின் பின்னர் நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இவ்வாறு தெரிவித்துள்ள திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு.செ அருள்ராசா மேலும் தெரிவிக்கையில் திருகோணமலையில் 64 கிராம சேவகர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுள் தமிழ் மொழி மூலம் 36 பேரும் சிங்கள மொழி மூலம் 28 பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களை முறையே பட்டினமும் சூழலும் பிரிவுக்கு 1 பேரும், பதவி ஸ்ரீபுர பிரிவுக்கு 12 பேரும், குச்சவெளி பிரிவுக்கு 06 பேரும், கோமரங்கடவெல 03 பேரும், தம்பலாகமம் பிரிவுக்கு 02 பேரும் கந்தளாய் பிரிவுக்கு 06 பேரும், கிண்ணியா பிரிவுக்கு 12 பேரும், மூதூர் பிரிவுக்கு 09 பேரும் சேருவில பிரிவுக்கு 5 பேரும் என நியமித்துள்ளதாகத் தெரிவித்தார்..



# அத்துமீறலுக்கு எதிராக ஐயங்கேணி மக்கள் ஆர்ப்பாட்டம்

(மட்டுநியூஸ்)



ஐயங்கேணி நரசிங்க வைரவர் ஆலயத்தினை சூழவுள்ள பகுதிகளில் அரசுக்கு சொந்தமாக இருக்கும் காணிகளில் வேறு இனத்தவர் அத்துமீறியவகையில் குடியேறுகின்றமைக்கு எதிர்ப்பு தெரிவித்து ஐயங்கேணி மக்கள் இன்று 2014.03.12 ஐயங்கேணி நரசிங்கவைரவர் ஆலயத்திற்கு முன்னால் உள்ள வளாகத்தில் முன்னாள் கிராம அபிவிருத்திச் சங்க தலைவர் வடிவேல் அவர்களின் தலைமையில் கவன ஈர்ப்பு போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

இந்நிகழ்வில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் மட்டு. பாராளுமன்ற உறுப்பினர்களான பொன் செல்வராசா, அரியநேத்திரன், யோகேஸ்வரன் கிழக்கு மாகாணசபை உறுப்பினர்களான...... 13

# சம்பூர் மின்நிலையப் பணிகளை விவாதிக்கப் பறந்த அதிகாரிகள்

சம்பூர் அனல் மின்நிலையப் பணிகள் தொடர்பாகப் பேச்சுக்களை நடாத்தவென இந்தியாவிற்கு இலங்கை மின்சாரசபையின் உயரதிகாரிகள் பறந்துள்ளனர்.

திடீரென நிகழ்ந்த இப் புறப்பாட்டில் மின்சாரசபையின் தலைவர், பொது முகாமையாளர் மற்றும் பிரதிப் பொது முகாமையாளர் ஆகியோர் இந்திய அதிகாரிகளைச் சந்திக்கச் சென்றுள்ளனர்.


சம்பூர் அனல் மின்நிலைணப் பயிகள் 2017ம் ஆண்டுக்குள் நிறைவு பெறாத பட்சத்தில் இலங்கை கடுமையான மின் நெருக்கடிக்குள் தள்ளப்படும்என மின்சக்தி அமைச்சக வட்டாரங்கள் எதிர்வு கூறியதை அடுத்து வேகமாக இத்திட்டத்தை நிறைவு செய்யும் முயற்சிகள்... 13



## தேரேறி வரும் ஸ்ரீ பத்ரகாளி அம்பாள் பக்தர்களுக்கு அருள் மழை பொழிய வேண்டி வாழ்த்துகின்றோம்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org